விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 மாசி 29 சனிக்கிழமை (13.03.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 84

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்
தர தொழிற்சாலையிலிருந்து
தயாரிக்கப்பட்டது ராம்கோ சிமெந்து
RAMCO

## இந்தியாவின் பூரண தலையீட்டுடன் இலங்கையில் அதிகாரப் பரவலாக்கல்

### அரசாங்கம் இணக்கம்

(கொழும்பு)

இந்தியாவின் முழுமையான தலையீட்டுடன் இலங்கையில் அதிகாரத்தைப் பரவலாக்கும் புதிய அரசியல் சாசனத்தை அறிமுகப்படுத்த இலங்கை அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளதாக லங்கா இரிதா பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் பொதுத் தேர்தலின் பின்னர் இந்தியாவின் தலையீட்டுடன் புதிய அரசியல் சாசனத்தை (16 ஆம் பக்கம் பார்க்க)

## சிங்களத்தில் திட்டு; ஆங்கிலத்தில் பாராட்டு அரசின் செயற்பாட்டுக்கு ஜே.வி.பி. கண்டனம்

(கொழும்பு)

அரசாங்கம் அனைத்து விடயங்களையும் மறைத்து சிங்களத்தில் பாரிய குரல் எழுப்பிய வருவதுடன் வெளிநாடுகள் முன்னிலையில் மண்டியிட்டு அவர்களுக்குத் தேவையான வகையில் செயற்பட்டு வருவதாக ஜே.வி.பி யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

பத்திரமுல்ல பெலவத்தயிலுள்ள ஜே.வி.பியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

இலங்கையின் இறையாண்மைக்குப் பாதிப்பை ஏற்படுத்தி நாட்டின் உள் விவகாரங்களில் தலையீடுகளை மேற்கொள்ளும் வெளிநாடுகளின் (16 ஆம் பக்கம் பார்க்க)

# மனித உரிமை மீறல் சம்பவங்கள் இலங்கையில் குறைவடையவில்லை

## அமெரிக்கா குற்றச்சாட்டு

(வாஷிங்டன்)

இலங்கையில் ஆயுத மோதல்கள் முடிபுக்கு வந்துள்ள நிலையில், மனித உரிமை மீறல்கள் குறைவடையவில்லை. மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் அரசாங்கப் போக்கு வீழ்ச்சியடைந்து வந்துள்ளது என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது. உலக நாடுகளின் மனித உரிமை நிலைமைகள் குறித்து அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் செயலாளர் கிலாரி கிளிங்டன் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். (15 ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் தலைமைகள் பங்கேற்கும் மக்கள் நாடாளுமன்றம் இன்று

(யாழ்ப்பாணம்)

நீதி, நியாயத்திற்கான மாணவர் அமைப்புகள் மேற்கொள்ளும் மக்கள் நாடாளுமன்றம் இன்று காலை 9 மணிக்கு பிரதான வீதியில் உள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெறும்.

இந் நிகழ்வில் தமிழ் அரசியல் தலைவர்கள் ஒரே மேடையில் தோன்றி மக்களின் கேள்விகளுக்குப் பதில் அளிக்கவுள்ளனர். இதில் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் பொதுச் செயலாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் மாவை.சேனாதிராஜா,

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ.பி.ஆர்.எல்.எப்) பொதுச் செயலாளர் சுரேஸ் பிரேமச் (16 ஆம் பக்கம் பார்க்க)

## ஜீ-15 நாடுகளின் அடுத்த தலைவர் மகிந்த

(கொழும்பு)

ஜீ-15 நாடுகளின் அடுத்த தலைவராக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நியமிக்கப்படவுள்ளதாக அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

ஜீ-15 அமைப்பில் 17 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. இந்த நாடுகளின் உச்சி மாநாடு எதிர்வரும் மே மாதம் நடைபெறும் போது அதன் புதிய தலைவராக ஜனாதிபதி மகிந்த் ராஜபக்ஷ தெரிவு செய்யப்படவுள்ளதாக நம்பகமான தகவல்கள் தெரிவிக்கின்றன.

அல்ஜீரியா, (16 ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலை நோக்கிய பாதையில் தொடர்ந்து பயணம் செய்வோம்

## ★ தமிழ்க் கூட்டமைப்புத் தெரிவிப்பு ★

(யாழ்ப்பாணம்)

எந்த அடிப்படையிலும் நாங்கள் விட்டுக் கொடுக்காமல் தமிழர்களின் விடுதலை நோக்கிய பாதையில் தொடர்ந்து பயணம் செய்வதற்குத் திட்டமிட்ட கருத்துக்களை முன் வைப்போம் என தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட வேட்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை.சேனாதிராஜா தெரிவித்தார்.

இன்றைய சூழலில் மக்கள் பட்டிருக்கும் பேரவலங்கள் மத்தியில் எங்களுடைய பலம் எவ்வாறு இருக்கின்றது என்பதை மதிப்பீடு செய்து அந்தப் பலத்தைக் கொண்டு நாங்கள் தொடர்ந்தும் ஓர் அரசியல் தீர்வை முன் வைப்பதற்கான பல (16 ஆம் பக்கம் பார்க்க)







நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## பேசும் படம்



இப்படியாகிவிட்டது யாழ்ப்பாணம் (கசூரினா கடற்கரையில்

# வகுப்பறை கட்டிட தொகுதிகளை ஆளுநர் திறந்து வைப்பார்

(யாழ்ப்பாணம்)

வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் யாழ். மாவட்டத்தில் 16 பாடசாலைகளில் புதிதாக அமைக்கப்பட்ட வகுப்பறைக்கட்டிடங்களை வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி 15, 16ஆம் திகதிகளில் திறந்து வைக்கவுள்ளார்.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுகளில் நாளை மறுதினம் திங்கட்கிழமை வண்ணார்பண்ணை சிறி வைத்திலிங்கம் வித்தியாலய கணனி ஆய்வு கூடம்மற்றும் மானிப்பாய் மகளிர் கல்லூரி, சுதுமலை சிந்மய பாரதிவித்தியாலயம், யாழ். வைத்தீஸ்வரா கல்லூரி, திருநெல்வேலி, இந்துத் தமிழ் கலவன் பாடசாலை, திருநெல்வேலி முத்துத்தம்பிவித்தியாலயம் ஆகியவற்றின் வகுப்பறைக்கட்டிடத்தொகுதிகளும் திறந்து வைக்கப்படவுள்ளன.

மறுநாள் 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமையாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மீசாலை வீரசிங்கம் மத்திய மகா வித்தியாலயம், மட்டுவில் ஸ்கந்தவரோதயா வித்தியாலயம், யாழ். ஸ்ரீ நாரதாவித்தியாலயம், வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, தேவராளி இந்துக்கல்லூரி, கொற்றாவத்தை ஏ.எம்.ரி.எம். பாடசாலை,

வல்வெட்டித்துறை விநாயகர் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் வகுப்பறைக் கட்டிடங்களும் வடமராட்சி வலயக் கல்வி அலுவலக கட்டிடமும் வடக்கு மாகாண ஆளுநரால் திறந்து வைக்கப்படவுள்ளது. (ச-5)

# அரையிறுதிப் போட்டி

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி முதல்வர் நோயல் விமலேந்திரன் வெற்றிக்கிண்ண இருபது-20 கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் அரையிறுதிப்போட்டி கள் இன்று காலை 9 மணிக்கு யாழ்ப்பாணக்கல்லூரி பிக்னல் மைதானத்தில் நடைபெறும். அரையிறுதிப் போட்டியில் மன்னார் சென். சேவியர் கல்லூரியை எதிர்த்து யாழ்ப்பாணக் கல்லூரி அணியும், கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்துயாழ். மத்தியகல்லூரிஅணியும்மோதவுள்ளன. (ச-27)


## அரசாங்க அறிவித்தல்

**நிவாரண விநியோகத்துக்குரிய பொருட்களை கொள்வனவு செய்வதற்கான கூறுவிலை கோரல்**

யாழ்ப்பாண மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரண விநியோகத்தை மேற்கொள்வதற்காக பின்வரும் பொருட்களை கொள்வனவு செய்வதற்கான கூறுவிலைகள் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரினால் கோரப்படுகின்றது.

1. சிவப்பு நாட்டரிசி
2. கோதுமை மா (பிறீமா-கிறீன் பிரான்ட்)
3. சீனி
4. பருப்பு

இப் பொருட்கள் கொள்வனவு செய்வதற்கான முத்திரையிடப்பட்ட (Sealed) கூறுவிலைகள் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரினால் கோரப்படுகின்றது. இப் பொருட்களை விற்பனை செய்ய விரும்புபவர்கள் மீளளிப்பு அற்ற வைப்பு பணமாக ரூபாய் 5,000.00 உம் மீளளிக்க கூடியதான வைப்பாக ரூபாய் 50,000.00 உம் செலுத்தி விண்ணப்பப் படிவத்தை புனர்வாழ்வு கிளையில் பெற்று தபால் உறையின் மேல் மூலையில் 'நிவாரண விநியோகத்துக்குரிய பொருட்களுக்கான கூறுவிலை' என குறிப்பிட்டு 19.03.2010ஆம் திகதி 10 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு புனர்வாழ்வுப்பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் நேரடியாக அல்லது பதிவுத்தபால் மூலம் சீல் (Seal) இடப்பட்ட கடித உறையில் தங்களது கூறுவிலைகளை சமர்பிக்குமாறு கோரப்படுகின்றார்கள். கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்படும் போது பொருட்களுக்கான மாதிரி சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பொருட்களை கொள்வனவு செய்வது தொடர்பாக பொருட்களின் தரம், கேள்வி, நிபந்தனைகள் மற்றும் விண்ணபப்படிவங்களை மாவட்டப் புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்துடன் தொடர்பு கொண்டு 13.03.2010 முதல் பெற்றுக்கொள்ள முடியும்.

கூறுவிலைகள் 19.03.2010ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு திறக்கப்படும். இதில் கூறுவிலை சமர்ப்பித்தவர் அல்லது அவரின் அனுமதி பெற்ற பிரதிநிதி சமுகமளித்திருக்க முடியும்.

பொருட்களை விநியோகிப்பவர்கள் கோரப்படும் தொகையினை அறிவித்தல் வழங்கப்பட்ட தினத்தில் இருந்து ஒரு வாரத்தினுள் நாவற்குழி களஞ்சியத்தில் இறக்கி ஒப்படைத்தல் வேண்டும். கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

க.கணேஷ்,
அரசாங்க அதிபரும் / மாவட்ட செயலரும்
யாழ். மாவட்டம்.



## அறிவித்தல்

தனியார் பேருந்து, கயஸ் உரிமையாளர் கழகத்தின் உரிமையாளர்கள், ஓட்டுநர்கள், நடத்துநர்கள் ஆகியோர்களுக்கான மிக முக்கிய கலந்துரையாடல்-வரும் 14.03.2010 ஞாயிறு பகல் 2.00 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்ள உள்ளதால் தவறாது தனியார் பேருந்து உரிமையாளர்கள் மற்றும் கயஸ் உரிமையாளர்கள், ஓட்டுநர்கள், நடத்துநர்கள் ஆகியோரை கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்: தலைவர்
த.ஜெகதீஸ்வரன்
அ.சிவலோகேஸ்வரன்
கிளிநொச்சி- முல்லைத்தீவு

(871)


## பட்டதாரிகளுடன் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பட்டதாரிகளின் எதிர்கால விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு ஈழமக்கள் ஜனநாயக் கட்சியின் செயலாளர் நாயகமும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச் சருமான டக்ளஸ் தேவானந்தா அழைப்பு விடுத்திருந்தார்.

இச்சந்திப்பு நாளை ஞாயிற்றுக்கிழமை 10 மணிக்கு யாழ். வீரசிங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக கட்சி வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)


## கடை வாடகைக்கு

156/3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தில் வெலிங்டன் சந்திக்கு அருகாமையில் 10 அடி அகலமும், 20 அடி நீளமும் உள்ள கடை வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு: T.P.: 077 2726616

(851)



## தவறிவிட்டது

யாழ். பல்கலைக்கழகத்தில் கடமையாற்றுகின்ற அரியகுட்டி ரமேசன் ஆகிய எனது அடையாள அட்டைகள், சாரதி அனுமதிப் பத்திரம் அடங்கிய பேர்ஸ் மூளாய் வீதிக்கும் வட்டுக்கோட்டைச் சந்திக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

இந்து வாலிபர் சங்கம்
வட்டுக்கோட்டை.
021 321 6387



எமது அன்புக்குரிய மாணவ மணிகளே

**லாலா**

**நீல சலவைத் தூள்**

வெண்மையான ஆடைகளுக்கு பாவனை செய்து பாருங்கள். இயற்கையான தூய்மையான வெண்மை தரும். பாவித்துப் பாருங்கள். பாவித்துப் பாருங்கள்.

லாலா சோப் தொழிற்சாலை,
அச்சுவேலி.

(க-464)



ஸ்ரீ அம்மா பகவான் சரணம்



**சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீகப் பிரார்த்தனை மையப் பக்தர்களின் அற்புத அதிசயங்கள் பற்றிய**

## இறுவட்டு (CD) வெளியீடு

2009 நவம்பர் 14ம் திகதி நடைபெற்ற நன்றி நவிலல் தினத்தன்று பக்தர்களால் தெரிவிக்கப்பட்ட அற்புத, அதிசய அனுபவங்களை விபரிக்கும் இறுவட்டு 2010.03.07 ம் திகதி ஸ்ரீ கல்கி பகவான் ஜென்ம தின விழாவின்போது வெளியிடப்பட்டுள்ளது.

இன்று 13.03.2010 சனிக்கிழமை பி.ப.3.00 மணி முதல் மாலை 5-30 மணிவரை இடம்பெறும் ஸ்ரீ அம்மா பகவான் கூட்டுப் பிரார்த்தனை நிகழ்வில் பெற்றுக் கொள்ளவும்.

நன்றி

தொடர்புக்கு:-
077 7651719,
021 321 7352

சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான்
சற்சங்க ஆன்மீகப் பிரார்த்தனை
மையம், யாழ்.மாவட்டம்,இலங்கை

(878)



## கீரிமலை நகுலேஸ்வரம் அருள்மிகு ஸ்ரீ நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வர ஆலய மகா சிவராத்திரியும் தீர்த்த உற்சவமும்

**கிரிஜாகால நிகழ்வுகள்**

சனிக்கிழமை (13.03.2010) முற்பகல் 10 மணி தொடக்கம் விஷேட அபிஷேகங்களும் பூசைகளும் மதியம் 12 மணிக்கு பஞ்சமுகா அர்ச்சனையும், பி.ப. 4 மணிக்கு சனிப்பிரதோஷ விஷேட பூசையும் அதனைத் தொடர்ந்து பி.ப. 6 மணிக்கு முதற்சாம அபிஷேக பூசைகளும், அதனைத் தொடர்ந்து 9 மணிக்கு இரண்டாம் கால அபிஷேக பூசைகளும், இரவு 11 மணி தொடக்கம் லிங்கோற்பவகால விசேட திரவிய ஹோம அபிஷேகங்களும் நடைபெறும்.

அதிகாலை 3 மணிக்கு 4ஆம் சாம அபிஷேகம், ஆராதனைகள் நடைபெற்று அதிகாலை 5 மணிக்கு வசந்த மண்டப விசேட பூசைகள் நடைபெற்று பின்னர் வீதிவலம் வந்து கண்டகி தீர்த்தத்தில் தீர்த்தமாடுவதற்கு எழுந்தருளுவார்.

**சிவராத்திரிகால விசேட நிகழ்ச்சி நிரல்**

1. வட இந்திய பழனி முருகன் ஆதீன பண்ணிசை வித்துவான்கள் **P.சண்முகசுந்தர தேசிகர், G.வெங்கடேஸ்வர தேசிகர்** சிறந்த பக்கவாத்திய சகிதம் பண்ணிசை நிகழ்த்துவார்கள்.
2. நாதஸ்வர வித்துவான் ருத்திராபதியின் பேர்த்தி **கோகிலத்வனி விஜயராகவன்** (பிரிந்தா கானாலய இசைக்குழுவினர்)-வயலின்.
3. **வீணை-சரங்கினி விஜயராகவன், ரேணுகா விஜயராகவன்** யாழ். பக்கவாத்திய கலைஞர்கள்.
4. **சின்னமணி வில்லிசைக் குழுவினர் சக்சேரி.**

மகாசிவராத்திரியை முன்னிட்டு மாவட்டபுரம் ஊடாகவும், சேந்தாங்குளம் ஊடாகவும், பேருந்துகள், சிற்றூர்திகள், துவிச்சக்கர வண்டிகள் என்பவற்றில் சிவன் அடியார்கள் வருகை தருவதற்கு உயர் திரு. அரச அதிபரினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

ஆகவே அடியார்கள், அன்பர்கள் அனைவரும் ஆலயத்தில் நடைபெறும் பூசை வழிபாடுகளில் பங்குபற்றி இஷ்டசித்திகளைப் பெற்றுய்யுமாறு எம்பெருமானைப் பிராத்திக்கின்றேன். அத்துடன் மகேஸ்வர பூசையும் இடம்பெறும்.

**விழா ஒழுங்கமைப்பு : அங்கஜன் இராமநாதன்**
**வீமன்காமம்,**
**தெல்லிப்பழை.**

(879)

# இன்று ஒரு தகவல்

## ஒரு விசித்திர வழக்கு

இன்றைக்கு உலகம் ரொம்பவும் மாறித்தான் போச்சு. கற்பனையை விட சுவாரஸ்யமான சம்பவங்களெல்லாம் கண்முன்னாடி நடந்து கொண்டிருக்கிறது.

பிரான்ஸில் நடந்த சம்பவம் இது.

ஒரு பாறையில் கார் மோதி எரிந்து விட்டது. அதில் போனவரும் இறந்து விட்டார்.

உடனே பொலிஸ் அங்கு போய்ச் சேர்ந்தது. கார் நம்பரைப் பார்த்து ஆள் யாரென்று கண்டுபிடித்தார்கள். அவருடைய வீட்டுக்கு தகவல் கொடுத்தார்கள். அந்த ஆளுக்கு ஒரு மனைவியும் ,ஒரு காதலியும் இருந்தார்களாம். இரண்டு பேரும் சண்டை பிடிக்காமல் ஒற்றுமையாக இருந்தார்களாம்.

சம்பவத்தைக் கேள்விப்பட்ட உடனேயே அவர்களிருவரும் அவ்விடத்துக்கு விரைந்தார்கள். கருகிப் போன சடலத்தைப் பார்த்து அது தங்கள் கணவர் தான் என்று உறுதிப்படுத்தினார்கள். அதன்பின் முறையான பிரேத பரிசோதனை நடந்தது. இந்த ஆள் விபத்தினால் இறந்து போனதாக அதிகாரிகள் சொல்லிவிட்டார்கள்.

அவர்களும் சடலத்தை வாங்கிக் கொண்டு போய் எரித்து விட்டார்கள். இறந்து போன அந்த ஆள் மூன்று இன்சூரன்ஸ் கம்பனிகளில் 8 ஆயுள் இன்சூரன்ஸ் பொலிசி எடுத்திருந்தாராம். அந்த மூன்று கம்பனிகளில் 2 கம்பனிகள் அவருடைய மனைவிக்கு இன்சூரன்ஸ் பணத்தைக் கொடுத்து விட்டது.

ஒரு கம்பனி மட்டும் பணம் கொடுக்காமல் கொஞ்சம் தாமதம் பண்ணிக் கொண்டு வந்தது.

அந்தக் கம்பனி என்ன செய்தது தெரியுமா? ஒரு தனியார் துப்பறியும் நிறுவனத்திடம் போய் ஒரு துப்பறியும் நிபுணரை வாடகைக்கு அமர்த்தியது.

அந்த ஆளின் மனைவியையும் காதலியையும் கண்காணிக்கச் சொல்லியது. அந்த நிபுணர் விபத்து சம்பந்தமான அடையாளங்களையெல்லாம் பார்த்தார். கார் தீப்பிடிக்க எந்தக் காரணமும் இல்லை என்று தெரிந்தது. கருகிப்போன சடலத்தின் பல் அமைப்பு சம்பந்தமான குறிப்புக்களையும் பார்த்தார்.

அந்த மனைவியும் காதலியும் தொலைபெசி மூலமாக பேசிக் கொள்வதை இரகசியமாக ஒட்டுக் கேட்டார். எல்லாவற்றையும் கவனிக்கும் போது காரில் இறந்தது அந்த ஆள் இல்லை என்று தெரியவந்தது.

அப்படியானால் அந்த ஆள் எங்கே?

அந்த ஆசாமிக்கு 46 வயதிருக்கும். அவனைக் காணவில்லை. ஆனால் அந்த மனைவியோடும் காதலியோடும் வேறொரு இளைஞன் அடிக்கடி பேசுவதைக் கவனித்தார்கள்.

ஒருநாள் திடீரென்று பிடித்து விசாரித்த போது, இந்த இளைஞன் தான் அந்த ஆள் என்பது தெரிந்தது.

என்ன விஷயம் தெரியுமா?

அவன் பிளாஸ்டிக் சேர்ஜரி செய்து முகத்தையே மாற்றியிருக்கிறான்.

அப்படியானால் அந்தக் கார் விபத்து?

இந்த ஆள் என்ன பண்ணியிருக்கிறான் என்றால் முதலில் ஒரு ஆஸ்பத்திரியில் வேலை பார்க்கும் ஒரு சிநேகிதனிடம் போய் ஒரு அநாதை சடலம் ஏதாவது கிடைக்குமா என்று கேட்டிருக்கிறான். அந்தச் சமயம் பார்த்து ஆஸ்பத்திரியில் ஸ்ரொக் எதுவும் இல்லை.

உடனே இரண்டு பேரும் சேர்ந்து திட்டம் போட்டு ஒரு பிச்சைக்காரனை அழைத்துக் கொண்டு வந்து அவனுக்கு அளவுக்கு மீறி தூக்கமாத்திரையைக் கொடுத்து காலி பண்ணி அவனைத் தன்னுடைய காரில் வைத்துக் கொண்டு போய் ஒரு பாறையில் மோதவிட்டு தீயும் வைத்திருக்கிறார்கள். அதன்பின் அந்த ஆள் பிளாஸ்ரிக் சேர்ஜெரி பண்ணி தன்முகத்தையே அடையாளம் தெரியாமல் பண்ணிக் கொண்டானாம். எப்படி இருக்கிறது பாருங்கள் இந்த ஏமாற்று வேலை?

அவன் திட்டம் மட்டும் நிறைவேறியிருந்தால் நம்ம கணக்குச் சுமாராக ஒரு எட்டுக் கோடி ரூபா அவனுக்குக் கிடைத்திருக்கும். பாவம் மாட்டிக் கொண்டான். இப்பொழுது ஆயுள் தண்டனை அனுபவித்துக் கொண்டிருக்கிறானாம்.

இந்தக் காலம் எப்படி இருக்குது என்றால்... தப்பு செய்பவனும் புத்திசாலித்தனமாக அதைச் செய்கிறான். கொள்ளையடிக்கிறவனும் புத்திசாலித்தனமாக கொள்ளையடிக்கிறான்.

அதனால் நாம் அதைவிட புத்திசாலித்தனமாக இருந்து அதைச் சமாளிக்க வேண்டியிருக்கிறது.

ஒரு அம்மா ஒரு இன்சூரன்ஸ் கம்பனியைத் தேடி வந்தாராம். இதுவும் வெளிநாட்டில் தான்.

வந்து அங்கேயிருந்த அதிகாரியைப் பார்த்து...

"ஏன் சேர்... இன்றைக்கு என் கணவனின் உயிரை இன்ஷூர் பண்ணிக் கொண்டு நாளைக்கு அவர் இறந்து போய் விட்டால் எனக்கு ஏதாவது கிடைக்குமா?" என்று கேட்டிருக்கிறார்.

"கிடைக்கும்" என்றார் அவர்.

"என்ன?" என்று கேட்டார் இவர்.

"ஆயுள் தண்டனை!" என்றார் அவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# நிகோட் திட்டத்தினால் வழங்கப்படும் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவுதொகை (LHA)

(யாழ்ப்பாணம்)

தேசத்தை கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சினால் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தி திட்டத்தின் (NECORD) ஊடாக மீளக்குடியமர்ந்த குடும்பங்களிற்கு வழங்கப்படுகின்ற தலா 25 ஆயிரம் ரூபா வாழ்வாதார உதவு தொகையை இதுவரை பெற்றுக் கொள்ளாத குடும்பங்களுக்கு எட்டாவது நாளாக பின்வரும் பிரதேச செயலக பிரிவுகளுக்குட்பட்ட குடும்பங்களுக்கு இன்று சனிக்கிழமை கீழ்குறிப்பிடப்படும் நேர அட்டவணையின் அடிப்படையில் அதற்கான அனுமதிக் கடிதங்கள் கையளிக்கப்படவுள்ளன.

எனவே சகல பயனாளிகளும் உரிய நேரத்திற்கு தேசிய அடையாள அட்டை / பிறப்பு அத்தாட்சி சான்றிதழ் பத்திரத்துடன் குடும்ப பதிவு அட்டை மற்றும் வங்கி வைப்புப் புத்தகம் என்பவற்றோடு குறிப்பிட்ட இடங்களுக்குச் சென்று தங்களது கையொப்பத்தினை இட்டு அனுமதிக் கடிதங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறீர்கள்.

மேலும் இப்பிரிவுகளில் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட திகதியில் அனுமதிக் கடிதங்களைப் பெறத் தவறியவர்களும் அந்தந்த இடங்களுக்குச் சென்று அனுமதிக் கடிதங்களை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இவ்வுதவு தொகையானது வேலணை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள 811 குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ளது.

இதில் ஜே-12, ஜே-13, ஜே-14, ஜே-15, ஜே-16, ஜே-17, ஜே-18, ஜே-19, ஜே-20, ஜே-21 ஆகிய கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்தோருக்கு காலை 9 மணிக்கு வேலணை பிரதேச செயலாளர் அலுவலகத்திலும்,

ஜே-22, ஜே-23, ஜே-24, ஜே-25, ஜே-26, ஜே-27, ஜே-28, ஜே-29, ஜே-30, ஜே-31, ஜே-32, ஜே-33, ஜே-34, ஜே-35, ஜே-36 ஆகிய கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்தோருக்கு காலை 9 மணிக்கு புங்குடுதீவு சமுர்த்தி வங்கியிலும்,

ஜே-07, ஜே-08, ஜே-09 ஆகிய கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்தோருக்கு பிற்பகல் 1.30 மணிக்கு மண்டைதீவு மகா வித்தியாலயத்திலும்,

ஜே-11 கி.அ. பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு பிற்பகல் 1.30 மணிக்கு மண்கும்பான் அரச தமிழ்க் கலவன் பாடசாலையிலும்,

ஜே-10 கி.அ. பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு பிற்பகல் 3 மணிக்கு அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயத்திலும் வைத்து வழங்கப்படவுள்ளது.

மேலும் சங்கானை பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த 316 குடும்பங்களுக்கு இவ்வுதவு தொகை வழங்கப்பட்டுள்ளது.

இதில் ஜே-157, ஜே-158, ஜே-159, ஜே-166, ஜே-175, ஜே-177, ஜே-178, ஜே-179, ஜே-180, ஜே-181 ஆகிய கி.அ. பிரிவைச் சேர்ந்தோருக்கு காலை 9 மணிக்கு சங்கானை பிரதேச செயலாளர் அலுவலகத்திலும்,

ஜே-160, ஜே-161, ஜே-162, ஜே-163, ஜே-164 ஆகிய கி.அ. பிரிவைச் சேர்ந்தோருக்கு காலை 11 மணிக்கு அராலி மத்தி கிராம அலுவலர் பணிமனையிலும்,

ஜே-165, ஜே-167, ஜே-168, ஜே-169, ஜே-171 ஆகிய கி.அ. பிரிவைச் சேர்ந்தோருக்கு மூளாய் கிராம அலுவலர் பணிமனையிலும்.

ஜே-170, ஜே-172, ஜே-173, ஜே-174, ஜே-176 ஆகிய கி.அ. பிரிவைச் சேர்ந்தோருக்கு பிற்பகல் 3.30 மணிக்கு சுழிபுரம் மேற்கு சிறி கணேசா சனசமூக நிலையத்திலும் வைத்து வழங்கப்படவுள்ளது. (ஓ-6)

# வடமாகாணத்தின் கல்வி வளர்ச்சியில் எனது பங்களிப்பு தொடரும்

**அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா**

(யாழ்ப்பாணம்)

வறுமைக் கோட்டின் கீழுள்ள பெற்றோர்களது பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டிற்காக தான் மேற்கொண்டு வரும் வேலைத் திட்டத்தின் கீழ் உரிய அனைவருக்கும் ஆகக்கூடிய உதவிகளைத்தான் மேற்கொள்ளத் தயாரென ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை திருநெல்வேலி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இறுதி நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் இப்பாடசாலையின் சேவைகள் மற்றும் குறைபாடுகள் தொடர்பில் பாடசாலை அதிபர் உட்பட பலர் தனக்கு எடுத்துக் கூறியிருப்பதாகவும் கூடியவிரைவில் அக் குறைபாடுகளை நீக்கி தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளைத் தான் எடுப்பதாக உறுதியளித்ததுடன் யாழ் குடாநாட்டினதும் வடமாகாணத்தின் ஏனைய மாவட்டங்களினதும் கல்வி வளர்ச்சியில் தனது பங்களிப்பு எப்போதும் போல் தொடரும் என்றும் தெரிவித்தார். (ஓ)

# இராசி பலன்



13-03-2010
(மாசி 29, சனிக்கிழமை)
திரயோதசி முன்னிரவு 11.10 மணிவரை
அவிட்டம் பின்னிரவு 2.21 மணிவரை
இராகுகாலம் 9.22-10.52 மணிவரை
சுபநேரம் 3.22-4.52 மணிவரை
சனிப்பிரதோச விரதம், சித்தாமிர்தம்.

| | |
|---|---|
| மேடம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், பெரியோரால் மதிக்கப்படுதல், பொருள் சேர்க்கை, இனிய செய்தி. |
| இடபம் | அதிகாரம், நண்பர்கள் உதவி, ஆரோக்கிய நிலை, புதிய திருப்பம். |
| மிதுனம் | ஆன்றோர் சந்திப்பு, புதிய திட்டம், அதிக செலவு, பிரயாண நன்மை. |
| கடகம் | எதிர்பாராத பகையுணர்வு, எடுத்த காரியம் தாமதமாகும், மரியாதைக்குறைவு, போசனசுகம். |
| சிங்கம் | நண்பர்கள் சந்திப்பு, செல்வாக்கு, காரிய அனுகூலம், தன்னம்பிக்கை. |
| கன்னி | தொழிலில் ஆர்வம், பகைவர் நேசம், ஜனவசியம், ஆரோக்கியம். |
| துலாம் | அஜீரண ரோகம், காரிய இடையூறு, புத்திரரால் கவலை, பணக் குறைவு. |
| விருச்சிகம் | ரோகபயம், புதிய தகவல் அறிதல், முயற்சி தாமதம், சுபசெலவு. |
| தனுசு | அந்நியர் சந்திப்பு, மனோ தைரியம், காரிய நன்மை, சுபநிகழ்வு. |
| மகரம் | கோபப்படுதல், போசன சுகக் குறைவு, முயற்சி தாமதம், தன விரயம். |
| கும்பம் | மனக்கிலேசம், வெகுமானம், போசன சுகம், பெரியோர் சந்திப்பு. |
| மீனம் | பிறருக்கு உதவுதல், திடீர் பயணம், சுபசெலவு, சிந்தனை மிகுதி. |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 90 | 100 | 80 |
| உருளைக்கிழங்கு | 50 | 60 | 50 |
| பச்சைமிளகாய் | 100 | 120 | 120 |
| தக்காளி | 40 | 50 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 20 | 40 | 50 |
| கோவா | 40 | 50 | 50 |
| கரட் | 80 | 90 | 80 |
| பூசணி | 30 | 40 | 40 |
| புடோல் | 60 | 70 | 40 |
| வாழைக்காய் | 40 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 40 | 50 | 40-60 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 | 60 |
| பாகற்காய் | 80 | 90 | 70 |
| வெண்டிக்காய் | 40 | 50 | 50 |
| கரணைக் கிழங்கு | 25 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 100 | 120 | 80 |
| லீக்ஸ் | 70 | 80 | 80 |
| பீற்றூட் | 60 | 70 | 60 |
| கறிமிளகாய் | 80 | 100 | 100 |
| முருங்கைக்காய் | 250 | 300 | 240 |
| போஞ்சி | 80 | 90 | 80 |
| கத்தரிதம்புள்ள | 60 | 70 | 50 |
| கீரை – 1 பிடி | 30 | 30 | 20 |
| தேசிக்காய் | 80 | 90 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 30 |

யா/ கரவெட்டி கிழக்கு அ.த.க.பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கே. அம்பலவாணர், சிறப்பு விருந்தினர்களான எஸ்.முரளீதரன் கே.பிரேந்திரா, பாடசாலை அதிபர் ஆர்.சிவசங்கர், விளையாட்டுத்துறை செயலாளர் எஸ்.தனரூபன் ஆகியோர் வரவேற்கப்படுவதையும், பிரதம விருந்தினர் மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும், புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சமையலறை கட்டடத்தை திறந்துவைப்பதையும் படங்களில் காணலாம்.

## விழிப்புலனற்றோர் சங்கத்திற்கு சுயதொழில் உபகரணங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்திற்கு சுயதொழில் உபகரணங்களை வழங்குவதற்கு ZOA சோ நிறுவனத்தினர் தாமாக முன் வந்துள்ளதாக சங்கத்தின் தலைவர் ஆ. மகேந்திரன் தெரிவித்துள்ளார்.

விழிப்புலனற்ற அங்கத்தவர்களின் சுயதொழிலினை மேம்படுத்தும் முகமாக ஈர அரிசி அரைப்பதற்கும் பொதியிடல் செய்வதற்குமான இயந்திரங்களை கைதடியிலுள்ள சங்க்கத்தின் கிளை அலுவலகத்தில் வைத்து மிக விரைவில் வழங்கவுள்ளதாக நிறுவனத் தினர் உறுதியளித்துள்ளனர். (ஓ-30)

## நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

வேல். சாரங்கனின் "மொழி பெயர்க்கப்பட்ட மௌனம்" கவிதை நூல் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி சுப்பிரமணியம் மண்டபத்தில் நடைபெறும்.

கு.பாலஷண்முகன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கம் கலந்து கொள்கிறார். (ச-14)

## எல்லே போட்டி முடிபுகள்

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களிற்கிடையிலான எல்லே போட்டி யில் சிவன் விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

போட்டிக்கென ஒதுக்கப்பட்ட நேரத்தில் இரு அணிக்கும் ஓட்டங்கள் எதனையும் பெற்றுக்கொள்ளாத நிலையில் 15 பந்து வழங்கப்பட்டது.

அதில் இரு அணிகளும் தலா 3 ஓட்டங்களும் பெற்றதால் நாணயச் சுழற்சி மூலம் சம்பியன் தெரிவு செய்யப்பட்டது. இரண்டாம் இடம் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக அணிக்கு வழங்கப்பட்டது.அதேவேளை பெண்களுக்கான எல்லே போட்டியில் மட்டுவில் வளர்மதிவிளையாட்டுக்கழகம் முதலாம் இடத்தையும்கைதடி நவபுரம் , நவசக்தி விளையாட்டுக் கழகம் இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டது. (ஓ-29)

## மரக்கறிகளுக்கான கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளுக்கான உணவுச் செயற்றிட்டத்தின் கீழ் 2009 ஆம் ஆண்டிற்கான பச்சை மரக்கறிகளுக்கான கொடுப்பனவு தொடர்பாக ஏதாவது மாற்றங்கள் செய்ய வேண்டியிருப்பின் பாடசாலை வாரியாக உடன் தயாரித்து அனுப்பும் படி வடமாகாண உதவிக் கல்விப் பணிப்பாளரினால் வலயம் மற்றும் கோட்ட அலுவலகங்களுக்கு அறிவிக் [illegible]. (ஓ-30)

# 57 ஆவது வருட நிறைவும் தடகள விளையாட்டு விழாவும்

(யாழ்ப்பாணம்)

வல்வை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழகத்தின் 57 ஆவது வருட நிறைவை முன்னிட்ட தடகள விழா நேற்று ஆரம்பமாகி நாளை வரை நடைபெறவுள்ளது.

இதில் இன்று சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழக வீரர்களிடையேயான மரதன் ஓட்ட நிகழ்வு ஆரம்பமாகவுள்ளது. காலை 7.30 மணிக்கு வெளிக்கழக வீரர்களிடையேயான மரதன்ஓட்ட நிகழ்வு ஆரம்பமாகும்.

பங்குபற்ற விரும்புவோர் நெடியகாடு பிள்ளையார் ஆலய வீதிக்கு வருமாறு வேண்டப்படுகின்றனர். மாலை 4மணிக்கு விநோத உடைப் போட்டி பொது நிகழ்வாக நடைபெறஉள்ளது.

இந்நிகழ்வில் பங்குபற்றவுள்ள கழகங்கள் மற்றும் தனிநபர்களை அதற்கான ஆயத்தங்களுடன் வல்வெட்டித்துறை ஆதி கோயிலடி சந்திக்கு வருகை தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

அதனைத் தொடர்ந்து தம்பதியினர்களுக்கு இடையேயான சைக்கிள் ஓட்டப் போட்டியும் அதே இடத்தில் இடம்பெறவுள்ளது.

வீதி நிகழ்வுகள் நிறைவடைந்ததும் மைதான நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

தடகள, மெய்வல்லுநர் போட்டிகள் யாவும் மின்னொளியில் நடைபெறவுள்ளன. (ஓ)

## தொழிற்பயிற்சி நெறிக்கான பதிவுகள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலக விதாதா வள நிலையத்தினால் நடாத்டதப்படவுள்ள ஸ்கிறீன் பிறிண்டிங் மற்றும் உற்பத்திப் பொருட்களுக்கானபொதியிடல் முறைகள் ஆகிய பயிற்சி நெறிகளினை மேற் கொள்ளவுள்ளவர்கள் எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன்னதாக பலாலி வீதி, கந்தர்மடத்திலுள்ள விதாதா வள நிலையத்தில் பதிவினை மேற்கொள்ளுமாறு பிரதேச செயலர் கேட்டுக் கொள்கின்றார். (6-30)

## மகளிர் தின நிகழ்வு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் மகளிர் தின நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி ஐங்கரன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் மாதர்களின் கலை நிகழ்வுகளும் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்படவுள்ளது. (6-29)

## மீள்குடியேற்ற ஆலோசனைக் கூட்டம்

(சாவகச்சேரி)

தனங்கிளப்பு மக்களின் மீள்குடியேற்ற ஆலோசனைக்கூட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு கோவிலாக்கண்டி கந்தசுவாமி கோவிலிற்கு அருகாமையிலுள்ள கிராம உத்தியோகத்தர் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் தனங்கிளப்பு மக்களின் மீள்குடியமர்வு கொடுப்பனவு தொடர்பாக ஆராயப்பட உள்ளதால் குடியிருப்பாளர்களையும் விவசாயிகளையும் தவறாது கலந்து கொள்ளுமாறு விவசாய சம்மேளனம் அறிவித்துள்ளது. (6-29)

## பாம்பு தீண்டிய பெண் தீவிரசிகிச்சைப் பிரிவில் அனுமதி

(சாவகச்சேரி)

புல்லுக் காணிக்குள் மாடு கட்டச் சென்ற வேளை பாம்பு தீண்டிய பெண் சாவகச்சேரி வைத்தியசாலை ஊடாக யாழ் வைத்தியசாலை தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி வடக்கு மீசாலையைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தாயான சிவகுமார் சக்தியே அனுமதிக்கப்பட்டவராவார். (ஓ-29)

## நோயல்விமலேந்திரன் வெற்றிகிண்ண இருபது-20 துடுப்பாட்ட இறுதிபோட்டி

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி விளையாட்டுத் துறையினரால் கல்லூரி முதல்வரும் யாழ் மாவட்ட விளையாட்டுத் துறை வளர்ச்சிக்கு அரும்பணியாற்றிக் கொண்டிருக்கும் நோயல் விமலேந்திரன் வெற்றிக் கிண்ணத்திற்கான அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையேயான இருபது-20 துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி இன்று சனிக்கிழமை பி.ப 2.00 மணியளவில் கல்லூரி பிக்னல் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி போட்டியில் யாழ் மாவட்ட பாடசாலைகள் பத்தும் வெளிமாவட்ட பாடசாலைகள் ஐந்தும் இவ் துடுப்பாட்ட சுற்றுப் போட்டியில் கலந்து கொண்டுள்ளன.

சுற்றுப் போட்டியின் முதற்சுற்று ஆட்டங்கள் நிறைவடைந்துள்ள நிலையில் இன்று சனிக்கிழமை மதியம் 12.00 மணியளவில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, தொழில்நுட்பக் கல்லூரி மைதானத்தில் மூன்றாம் இடத்திற்கான போட்டி நடைபெறவுள்ளது. அதனைதொடர்ந்து கல்லூரி மைதானத்தில் இறுதிப் போட்டி நடைபெறவுள்ளது.

இறுதிப்போட்டியில் வெற்றிபெறும் அணிக்கான வெற்றிக்கிண்ணத்தினை நோயல் விமலேந்திரன் தம்பதியினர் வழங்கி கௌரவிக்கவுள்ளனர்.

இவ்வாண்டு முதல் இப்போட்டி அகில இலங்கைப் பாடசாலைக்கிடையேயான போட்டியாக நடைபெறுகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ஓ-27)

## பிறப்பு பதிவுகள் மேற்கொள்ளாதோருக்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலக பிரிவில் 18 வயதிற்குட்பட்ட சிறுவர்கள் இன்றுவரை பிறப்பு பதிவுகள் மேற்கொள்ளாது இருப்பின் பிரதேச செயலக சிறுவர் பகுதியுடன் தொடர்புகொள்ளுமாறு பிரதேச செயலர் கேட்டுக்கொள்கிறார். (6-30)




## ஆக்கங்களை சமர்ப்பிக்கவும்

(யாழ்ப்பாணம்)

2010ஆம் ஆண்டிற்கான தேசிய கலை இலக்கிய விழாவிற்கான ஆக்கங்களை திறந்த மற்றும் பாடசாலை மாணவர்கள் அனைவரும் எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னதாக நல்லூர் பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உதவியாளரிடம் ஒப்படைக்குமாறு நல்லூர் பிரதேச செயலர் கேட்டுக் கொள்கின்றார். (6-30)

## இலவச சட்டசேவை இடம் மாற்றப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

CHA நிறுவனம் மனித உரிமைகள் நிலையத்துடன் (IHR) இணைந்து நடத்தி வந்த இலவச சட்டசேவை எதிர்வரும் 17 ஆம் திகதி முதல் மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம் (CHA), இல-90 (பழைய இல,54), பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள CHA நிறுவனத்தின் புதிய அலுவலகத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.


இந்நிறுவனத்தில் முறைப்பாடுகளை சமர்ப்பிக்க விரும்புவோர் வாரத்தில் 7 நாட்களும் அலுவலகத்திலுள்ள உத்தியோ கத்தர்களிடமோ அன்றி முறைப்பாட்டுப் பெட்டியிலோ சேர்ப்பிக்கலாம் என்றும் அவசர தேவைகளிருப்பின் 021 222 0999 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் எனவும் புதன்கிழமைகளில் காலை 9 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை சட்ட அலுவலரை நேரில் சந்திக்க முடியும் எனவும் அறியத் தரப்பட்டுள்ளது. (ஓ-6)

# இசையியல் நோக்கில்

# யாழ் நூல்



03



யாழ் நூலைப் படிக்கும் போது இவற்றை மீட்டும் கேட்கவேண்டும் என்ற அவா அனைவரின் மனங்களிலும் ஏற்படும் என்பது திண்ணம். சகோட யாழ் அரங்கேற்றுக் கதையிலும் வேனிற்கதையிலும் இசைக்கப் பட்டது மட்டுமன்றி திருநீலகண்ட யாழ்ப்பாணரின் கையில் இருந்ததும் சம்பந்தரால் பாராட்டப் பெற்றதுமாகும்.

மகர யாழ், பெருங்கதையில் "யவளக் கைவினை" என்று குறிப்பிடப்படுவதால் வாணிகத் தொடர்பு கொண்டிருந்த யவனர் தமிழ் நாட்டுக்களித்தது என்று கூறுகிறார். அவரே வடிவமைத்த படத்தினையும் தருகிறார். இதற்கு நரம்புகள் பத்தொன்பது என்றும் குறிப்பிடுகிறார்.

யாழ்நூல் சங்க நூல்கள் பலவற்றைக் குறிப்பிட்ட போதும் கடைச்சங்க நூலான கல்லாடனாரது கல்லாடம் பற்றி குறிப்பு எதுவும் இல்லாதது வியப்பாக உள்ளது.

ஏனெனில் சில யாழ் வகைகளை குறிப்பாக நாரதப் பேரியாழ், தும்புருயாழ், லீசக யாழ், மருத்துவ யாழ் ஆகியவற்றின் வடிவமைப்பும் அளவுகளும் தரப் பெற்றுள்ளன.

சீறியாழும் செங்கோட்டியாழும் இளங்கோ அடிகள் 'வணர்கோட்டுச் சீறியாழ்'' "செந்நிறம் புரிந்த' செங்கோட்டி யாழ்'' எனக் குறிப்பிடுவதால் சிலப்பதிகாரம் காலத்திலே இவை இரு வேறு கருவிகளாய் இருந்தமை தெரிகின்றது. சீறியாழ் ஒன்பது நரம்புகளையும் செங்கோட்டி யாழ் பதினான்கு நரம்புகளையும் கொண்டது.

இசை நரம்பியல் பகுதியில் தரும் குறிப்புகள் அடிகளாரின் விஞ்ஞான அறிவு மேன்மையை வெளிக்காட்டுகின்றது.

அடுத்து வருவது பாலைத் திரிபியலாகும். இதில் பல செய்திகள் இடம்பெற்றிருந்தாலும் பின்வரும் அட்டவணையே முக்கியத்துவம் பெறுகின்றது.

| முதலெடுக்கும் நரம்பு | பாலைப் பெயர் | தற்கால இராகம் |
|---|---|---|
| தாரம் குரலாக | மேற்செம்பாலை | மேசகல்யாணி |
| குரல் குரலாக | செம்பாலை | ஹரிகாம்போதி |
| துத்தம் குரலாக | படுமலைப்பாலை | நடனபரவி |
| கைக்கிளை குரலாக | செவ்வழிப்பாலை | சுத்தத்தோடி |
| உழை குரலாக | அரும்பாலை | தீரசங்கராபரணம் |
| கிளி குரலாக | கோடிப்பாலை | கரகரப்ரியா |
| விளரி குரலாக | விளரிப்பாலை | அநுமதோடி |

பாலைத்திரிபியலில் ஏழ்பெரும்பாலை, பன்னிருபாலை ஆகியவை விளக்கம் பெறுகின்றன.

யாழ் நூல் பக்கம் 115 இல் இக்காலத்து வழக்குச் சொற்களாற் கூறின் குறித்த ஓர் இராகத்திற்கு ஆரோகணத்திலும் அவரோகணத்திலும் இன்ன சுரங்கள் வருவன என நிச்சயித்து நிறுத்துவது பாலை நிலை என்று குறிப்பிடுகின்றார்.

யாழ்நூலின் பண்ணியல் பகுதியில் பக்கம் 155 இல் நிச்சயித்த ஸ்வரங்களில் கிரகம், அம்சம், நியாசம், பகுத்துவம் அற்பத்வம் மந்தோச்சமம் அறிந்து இசைப்புலவன் வைத்த தாளத்திற்கியைய இராகத்தை ஆலாபனை செய்தல் பன்னு நிலையாகும் என்று குறிப்பிடுகின்றார்.

விபுலானந்தர் விளக்குவதை அட்டவணை மூலம் அறிவது இலகுவானது.

| தமிழ்ப் பெயர் | சமஸ்கிருதப்பெயர் | தொழில் |
|---|---|---|
| முதல் | க்ரஹம் | முதலில் எடுக்கும் சுரம் |
| கிழமை, உரிமை | அம்சம் ஜீவஸ்வரம் | பலமுறை பயின்று வருதல் |
| முடிபு | 1. அபாத்யாச<br>2. ந்யாச<br>3. ஸ்நயாச<br>4. விந்நியாச | கீதத்தை முடிக்கும் ஸ்வரம்<br>இராகத்தின் இடையிலான முடிபு<br>கீதத்தின் முதற்கண்டத்தின் முடிபு<br>முதற்கண்டத்தின் முதல்<br>அவயவத்தின் இறுதிஸ்வரம் |
| நிறை | பஹுத்வம் | அடிக்கடி பயின்று வருவது |
| குறை | அல்பத்வம் | எப்போதாவது வருவது |
| மெலிவு | மந்தரம் | கீழ்ஸ்தாயி |
| விரிவு | தாரம் | மேல்ஸ்தாயி |
| சமன் | | சமஸ்வரங்களைக் குறிப்பது |
| முறை | | ஸ்வரங்கள் பயின்று<br>வருமுறையை குறிப்பது |
| வரையறை | | ஒருபண்பிரிதொன்றுடன் மயங்காமல்<br>காத்தற்கு உரிய இலக்கணம் |
| நீர்மை | | உள்ளத்து உணர்வால்<br>உணரக்கூடிய இராகபாவம் |

✸ இன்னிசையாழ் பக்கம் 218

தேவார இயல் பகுதியில் இசைப்பா வகைகளும் தேவாரத்தின் பெயர்க்காரணமும் கட்டளை வகைகளும் விளக்கம் பெறுகின்றன.

தெய்வம் சுட்டிய வாரப் பாடல் தேவாரம் ஆயிற்று என்று பக்கம் 213 இல் அடிகள் கூறுகின்றார்.

தேவாரப் பாடல்களின் யாப்பமைதி,இசையமைதி இரண்டையும் இயன்றவரை ஆராய முற்படுகின்றார்.

ஒவ்வொரு திருமுறையிலும் பண்ணிற்கு உரிய பாடலைத் தெரிவு செய்து சீர் பிரித்து அதன் யாப்பமைதியை விளக்குகிறார். யாரும் அதுவரை செய்யாத ஒன்றை அடிகளார் செய்துள்ளது சிறப்பாகும். பண்ணாராய்ச்சிக் கூட்டத்திலே அறிஞரின் பாராட்டைப் பெற்றார்.

விபுலானந்தரின் விளக்கம் யாதெனில் கட்டளை என்பது யாப்பே ஆகும் என்பது. யாப்பமைதிக்கென அவர் எடுத்துக் கொண்ட பதிகங்கள் கூற்றாயினவாறு, அண்ணலென் சந்தனச் சாந்து, மாதர்பிறைக் கண்ணியானை, மெய்யெலாம், கரவாகும் வன்னெஞ்சர் சிவனெனும் ஓசை, மற்றும் பல.

முதல் திருமுறையில் 136 பாடல்கள்

2 ஆம் திருமுறையில் 122 பாடல்கள்

3 ஆம் திருமுறையில் 125பாடல்கள்

4 ஆம் திருமுறையில் 22 பாடல்கள்

5 ஆம் திருமுறையில் 1 பாடல்

6 ஆம் திருமுறையில் 1 திருத்தாண்டகம்

7 ஆம் திருமுறையில் 100 பாடல்கள்



விபுலானந்தரின் சீரான குடந்தை ப. சுந்தரேசனார் 1951 இல் கட்டளை பற்றிய விவாதத்தில் தமிழ் இசைச் சங்கப் பண்ணாராய்ச்சிக் கூட்டத்தில் விபுலானந்தரின் கருத்தை யொட்டிபாட்டின் அமைப்பைப் பகுத்து அறிந்து கொள்ள உரைகல் போன்று பயன்படுவது தான் கட்டளை என்று குறிப்பிடுகின்றார்.

விபுலானந்தரே "எந்த யாப்பு விகற்பம் பொருத்தமானது என்பதை அதன் இசை அமைதியைக் கண்டு தெரிந்து கொள்க'' என்றும் கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது. தேவாரவியலில் இருபத்தியொரு பண்களுக்குரிய இராக இலக்கணத்தையும் தந்துள்ளார்.

இது இசையமைதி என்னும் பகுதியில் இடம்பெறுகிறது. சங்கீத ரத்னாகரம் என்பது சாரங்கதேவர் இயற்றியது. இவர் சில தேவாரப் பண்கள் பற்றிக் குறிப்பிடுகின்றார். 12 ஆம் நூற்றாண்டுவரை மாறாதிருந்த பண்கள் தஞ்சையில் மகராஷ்டிர மன்னர் ஆட்சிக் காலத்தில் எழுந்த மாற்றங்களால் பண் உருவங்கள் பழைய நிலையிலிருந்து மாறின என்றும் தனது மன ஆதங்கத்தைப் பற்றி பக்கம் 269 இல் கூறுகிறார்.

1936 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆதரவிலே விபுலானந்த அடிகள் விரிவுரை ஆற்றிய போது மகா மகோபத்தியாய உ.வே. சாமிநாதையர் அவர்கள் நேரில் வந்து ஊக்கப்படுத்தியதோடு இந்நூல் என்று வெளிவரும் என்று ஆர்வத்தோடு எதிர்நோக்கியிருந்தார்கள் என்று ஒழிப்பியல் பகுதியில் அடிகள் சுட்டிக்காட்டியுள்ளார்.

**முனைவர் பிரமீளா குருமூர்த்தி**
தலைவர், இந்திய இசைத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்.

20 ஆம் நூற்றாண்டில் தமிழ் இசைபற்றியும் யாழ் பற்றியும் விஞ்ஞான நுணுக்கங்களுடன் எழுதப்பெற்ற யாழ் நூல் தமிழரின் இரண்டாயிரத்திற்கும் மேலான ஞாலம் மற்றும் அவர்தம் இசைமுறை, கருவி இசை, பாடல்கள், இலக்கணம் இலக்கியம் என்ற பண்முகப் பார்வையில் இயற்றப் பெற்ற ஒப்பற்ற ஒரு நூல் இதன் யாத்தசுவாமி விபுலாநந்தரின் சீரிய பணி போற்றுதலுக்கும் பேணுதலுக்கும் வணங்குதலுக்கும் உரியதாகும்.

(முற்றும்)

## அமைச்சு பதவிகளை வகிப்பதற்கு ஜோன்ஸ்டன், இந்திக்க தகுதியற்றவர்கள்

**ஐ.தே.கட்சி**

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்ட மைப்பில் இணைந்து கொண்ட ஐக்கிய தேசி யக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவும் இந்திக்க பண்டார நாயக்கவும் அமைச்சுப் பொறுப்புக் களை வகிக்கத் தகுதியற்றவர்கள் என ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

அரசியல் சாசனத்தின் 44 ஆவது சரத்தின் அடிப்படையில் குறித்த இருவரும் அமைச்சர்களாக பதவி வகிக்க முடியாதென ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்களே அமைச்சுப் பதவிகளை வகிக்க முடியும் எனவும் குறித்த இருவரினதும் பாராளுமன்ற உறுப்புரிமையை ஐக்கிய தேசியக் கட்சி இரத்து செய்துள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ஓ-6)

## வலி. மேற்கில் சிறுதானிய, மரக்கறி செய்கைகளில் விவசாயிகள் ஆர்வம்


வலி. மேற்குப் பிரதேச விவசாயிகள் சிறுதானிய மற்றும் மரக்கறிச் செய்கைகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டுவருவதை அவதானிக்க முடிகின்றது.

நெல் அறுவடைகள் ஆரம்பிக்கப்பட்டு மிக மும்முரமாக இடம்பெற்றுவரும் அதே நேரம் அறுவடைகள் ஒழிந்த வயல்களில் சிறுதானிய மற்றும் மரக்கறிப் பயிர்களை நாட்டுவதில் விவசாயிகள் மிகத் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

எள், குரக்கன், பயறு, உழுந்து போன்ற சிறுதானியப் பயிர்களையும் கத்தரி, வெண்டி, மிளகாய், பூசணி போன்ற மரக்கறிப் பயிர்களையும் நாட்டுவதில் விவசாயிகள் மிகத் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை நெல்அறுவடை செய்யப்பட்ட வயல்களைப் பயன்படுத்தி வரும் விவசாயிகள் பம்பாய் வெங்காய நாற்று மேடைகளை அமைத்து வருவதுடன் பருவமடைந்த நாற்றுக்களை நடுகை செய்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருவதையும் அவதானிக்க முடிகிறது. (6-49)

# நாதப் பிரம்மமான சிவனை நாதவடிவில் போற்றும் மூலத் தமிழ் பாடல்கள் திருமுறைகளே



" சிவன் எனும் ஓசை அல்லதறையோ உலகில் திருநின்ற செம்மை உளதோ" என்பர் மூவரில் மூத்தவரான அப்பர் சுவாமிகள். உலகில் காணும் பரந்துபட்ட இசைப்பாடல் வகையுள் வகையிலும் தொகையிலும் மிகக் கூடுதலாக சிவனைப் போற்றும் இசைப் பாடல்களாக விளங்குவது திருமுறையே. திருமுறை என்று நமக்கு இறைவனால் அளிக்கப்பட்டுள்ள இவ் நாணயத்தில் ஒருபுறம் தமிழும் மறுபுறம் இசைநுட்பங்களும் நிறைந்து நிற்றல் காண்போம். உலகில் எந்த மொழிகட்கும் எட்டமுடியாத சிறப்பு தமிழுக்கு திருமுறையால் கிடைத்துள்ளது. திருநெறித் தமிழ் என்று சம்பந்தப் பெருமானும், செந் தமிழ் திறம் என்று சுந்தரரும், தென்தமிழ் என அப்பர் சுவாமிகளும் போற்றும் பண்சுமந்த பாடல்களில் மூலப் பொருளாய் முழுப்பொருளாய் முதற்பொருளாய் சிவன் சுட்டப் பெறுதல் காணலாம். இம் மூவர் முதலிகள் தெளிந்த கருதை தேன் தமிழால் "தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி'' என மணிவாசகர் சுவாமிகள் வழிமொழிந்து போற்றுதல் காணலாம்.

"காழி நகர்ச்சிவபாதவிருதயர் தந்த கவுணியர் கோன் அழுது உமையாள் கருதி உளட்ட" எனப் பெரியபுராணம் ஞானசம்பந்தப்பிள்ளை யாரை சுட்டுவது பிள்ளையார் உண்ட ஞானப் பாலே அவர் தந்த இசைப்பாடல் என்பதும் பண்ணார் தமிழ் என்பதும் கண்கூடு. உலக மாதா ஊட்டிய ஞானப்பாலை தாம் அழுது உண்பதுபோல்காட்டி - நித்தல் அழும் உலகிற்கு குறிப்பாக தமிழர்க்கு தந்து நிற்கும் பிள்ளையாரின் தமிழ் ஈகைக்கு நாம் நன்றி உடையவர்களாக இருக்கின்றோமா? திருக்கோயில்களில் போற்றுதற்கும் ஏற்றுதற்கும் நாம் விழையவில்லை என்பதும் பிற கேளிக்கைகளை பெரும்பொருட்செலவில் நாம் வரவேற்கின்றோம் என்பதும் வெள்ளிடை. நமது கலை கலாசாரங்களை உதடு வளர்க்கும் அளவிற்கு உள்ளம் வளரவில்லை. இதன் விளைவுகளை தமிழினம் அனுபவித்தும் இன்னும் தெளிய வில்லை என்பது நமது அண்மைக்கால வரலாறு.

தமிழ் மக்களது வழிபாட்டு முறையில் மிகப் பிரதான இடங்களை தோத்திரங்கள் வகிப்பதையும் அவற்றை தமிழகம் பின்பற்ற முடியாமல் பல இடையூறுகள் மத்தியில் வாழ் வதையும் காணமுடிகின்றது. இதற்கு விடைகாண வேண்டிய மிகுந்த பொறுப்பை தமிழர்கள் தட்டிக்கழித்து வாழப் பழகியதால், தோத்திர வழிபாடு சிவ வழிபாட்டுக்கு அரு கதையற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இதன் பலன் யாது? தமிழர்களே -உலகில் தள்ளப் பட்டவர்களாக வாழ்விடம் தேடி அபலைகளாக்கப்பட்டுள்ளனர். இவற்றை அறிவியல் கண்ணூடு உணர்பவர்களும் இன்றிலர். ஆக்கப்படுத்தும் உயரியர்களும் இலர்.

திருமுறைகளே தமிழில் சிவநெறி இலக்கியம் என்பதும் திருமுறைகள் மூலம் தோத்தரிக்கப்படும் "சிவன்" சங்க இலக்கியத்தால் முக்கட் செல்வர், பால்புரை பிறை நுதற் பொலிந்த சென்னி நீலமணி மிடற்று ஒருவன் என்றும், "வெள்ளேறு வலவயின் உயரிய பலர் புகழ் திணிதோள் உமைய மர்ந்து விளங்கும் இமையா நாட்டத்து மூவெ யில் முருக்கிய முரண்மிகு செல்வன்'' என்றும் ஏற்று வலன் உயரிய எரிமருள் அவிர்சடை மாற்றருங்கணிச்சி கொளீஇ -ஒருகணை கொண்டு மூவெயில் உடற்றிப் பெருவிற் பாம்பு ஞான் கொளீஇ என்றும் ஒருகணை கொண்டு மூவெயில் உடற்றிப் பெருவிறல் அமரர்க்கு வென்றிதந்த கறை மிடற்றண்ணல் என்றும் நன்றாய்ந்த நீணி மிர்சடை முது முதல்வன் என்றும் மழுவாள் நெடியோன் என்றும் இமயவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்த ணன் என்றும் பலவாறு புகழப் பெறுதல் கண்கூடு.

இன்று சிவராத்திரியை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகின்றது. தமிழ் திருமுறைகளால் சிவனைப் போற்றி உய்தி பெறுவோமாக

சைவராகிய சேந்தன் திவாகர நிகண்டாசிரியரும் சமணராகிய சூடாமணி நிகண்டாசிரியரும் " இறையோன்'என ஒருமுகத்தால் சிவனை முதற்பொருளாக சுட்டுதல் காணலாம். வேதம் ஸ்ரீ உருத்திரத்தில் மட்டும் சிவன் சுட்டப்படுதல் குறித்தற்பாலது. சிவாகமங்கள் யாவும் சிவனையே முழுமுதற் கடவுளாக சுட்டும் சிவநெறியே திருநெறி, திருநெறியே திருமுறை தந்த நெறி,தமிழ்நெறி.

உருத்திரனுக்கு விளக்கம் தரும் கந்தபுராணம்

இன்னலங் கடலும் பட்டோர்
யாரையும் எடுக்குமாற்றால்
உன்னரும் பரமமூர்த்தி
உருத்திரன் எனப்பேர் பெற்றான்


என்று கூறுதல் காண்பாம்.

மூவர்க்கும் முதல்வனாகிய சிவனே மகா உருத்திரன் என்று வேதங்கள் மொழியும் இதை மணிவாசகர் " வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியவனே" என்றுகூறுவர். உருத்திரனும் சிவனும் ஒன்று என்பது இங்கு பெறப்படும்.

தமிழரது சிவக்குறியின் மூலமாக விளங்கும் இருவேறு அம்சங்களில் சிவலிங்கமும் நடராசர் திருவுருவும் முதன்மை பெறுதல் காணலாம். முன்னையது அருவ திருமேனி யாகவும் பின்னையது உருவத் திருமேனி யாகவும் கொள்ளப்படும்.

இவ்விரு வடிவங்களையும் போற்றி ஏற்றிப்பாடும் பாடல்கள் தமிழில் திருமுறைகளில் பண்ணார்ந்த பாடல்களாக காணப்படுகின்றன.

'' திருமுறைகள் சுட்டும் சமயம் சைவபம் என்பதும்''



சம்பந்தர் திருநாவுக்கரசர் சுந்தரர் மாணிக்கவாசகர்

" சுட்டும் தெய்வம் சிவன் என்பதும்''
"சுட்டும் மொழி தமிழ் என்பதும்''
"சுட்டும் இசை தமிழ் இசை என்பதும்''

திருமுறைகளால் போற்றப்படும் இசை வடிவங்களது நுட்பங்கள் " பண்ணிசை" என்ற பொது பெயரால் வழங்கப்படுதல் காணலாம். பண்பாடல் நுட்பங்களின் அடியில் பாலைகள் உறங்குதல் காணலாம். 12 சுருதி நுட்பமான ஆயப்பாலையும் 24 சுருதி நுட்ப மான வட்டப்பாலையும், 48 சுருதி நுட்பமான திரிகோணப்பாலையும் 96 சுருதி நுட்பங் களான சதுரப்பாலையும் இப்பாலை களுள் அடங்கா நிற்க சீரடிவகை நுட்பங் களும், எழுத்தியியல், மொழியியல் நுட்பங் களும், சித்திர , அதி சித்திர தாள நுட்பங்களும் பண்ணிசையில் உட்கிடையாகும். இவற்றை இன்று காணும் தமிழ்ப்பாடல்கள் சிவதோத்திரங்களாக திருமுறைகளாக காணப்படுகின்றன. மட்டிலா தமிழிசைச் சாகரங்களான திருமுறைப்பாடல்கள் யாவும் "சிவனையே முழுமுதற்தேவனாக" முழு உலக தேவனாக காட்டிய நிற்கும் தன்மையன. " எல்லா உலகமுமானாய் நீயே'' என அப்பரடிகளும்

"பண்ணும் பதம் ஏழும் பல ஓசைத் தமிழ்
அவையும்
உள்நின்றதோர் அவையும் உறுதாளத்
தொலிபலவும்
மண்ணும் புனல் உயிரும் வருகாற்றுஞ்சுடர்
மூன்றும்
விண்ணும் முழுதானான் என
சம்பந்தபிள்ளையாரும்

இம்மையே தரும்சோறும் கூறையும் ஏத்தலாம்
இடர்கெடலுமாம்
அம்மையே சிவலோகம் ஆள்வதற்கியாதும்
ஐயுறவில்லையே என
வன்றொண்டரும் சிவன் திருக்கருணையை
போற்றுவர்

அன்றியும்

''சிவனது சிவபுரம் நினைபவர்
செழுநிலனினில் நிலைபெறுவரே''
என்பதும்

குற்றமிலாதார் குரைகடல் சூழ்ந்த
கோணாமாமலை அமர்ந்தாரைக்
கற்றுணர்வேள்விக் கருத்துடை ஞான
சம்பந்தன்
உற்ற செந்தமிழால் மாலையீரைத்தும்
உரைப்பவர் கேட்பர்
உயர்ந்தோர் அற்றமுமாகி
தொல்வினையடையார் என்பதும்
கருதுகின்றவர் கனைகடல்கடிகமழ்
பொழிலணி மாதோட்டம்
கருத நின்ற கேதீச்சரங்கை தொழ
கடுவினை அடையாவே என்பதும்
கேடிலாத கேதீச்சரம் தொழுதெழக்
கெடுமிடர் வினைதானே என்பதும்
மாதோட்டத்தண்ணல் நண்ணு கேதீச்சரம்
அடைபவர்க்கு அருவினை அடையாவே
என்பதும்
மாதோட்டத்தடிகள் ஆதரித்திருத்த கேதீச்சரம்
பரிந்த சிந்தையராகி
முடிகள் சாய்த்து அடிபேணவல்லார் தம்மேல்
மொய்த்தெழும் வினைபோமே என்பதும்
மாதோட்டத்து எல்லையில் புகழ் எந்தை
கேதீச்சரம்
இராப்பகல் நினைந்தேத்தி அல்லல்
ஆசறுத்து
அரனடியினை தொழும் அன்பராம்
அடியாரே என்பதும்
ஆடல் ஏறுடை அண்ணலை அணி காழி
நாடுளார்க்கிறை ஞானம்பந்தன் நவின் றெழு
பாமாலை
பாடலாயின் பாடுமின் பக்தர்கள் பரகதி
பெறலாமே என்பதும் இத்துணை

ஞானசம்பந்தன் தமிழ் ஒருபதும் உரைப்பவர் திருமகள், கலைமகள் செயமகள் புவிமகள் புகழ்மகள் தரவரு மிருநிலனினில் அவர் ஈசர் எனும் இயல்பினரே என சம்பந்த பிள்ளையார் கூறியிருப்பது சிவதோத்திரங்கள் திருமுறை என்பதும் சிவவழிபாடு தமிழ் தோத்திர வழிபாட்டால் முக்கியம் பெற்று நிற்பது என்பதும் தமிழர் உயர்திபெற இவற்றைப் பேணவேண்டும் .போற்ற வேண்டும். ஆதரித்து ஏற்றவேண்டும். அவை இற்றை நாளில் அத்தியாவச்சியமாக வேண்டப்படுவன என்பதும் யாண்டும் யாண்டும் சிவனருளாள் உணரப்படுகின்றது.

கலாநிதி நா.வி.மு.நவரெத்தினம்
(தலைவர் ,இசைத்துறை யாழ்.பல்கலைக்கழகம்)

## வலி.வடக்கில் இரவுவேளைகளில் மரக்கறிவகைகள், வாழைக்குலைகள் திருட்டு

### விவசாயிகள் பாதிப்பு

(பொன்னாலை)

வலி.வடக்குப் பிரதேசத்தில் செய்கை பண்ணப்பட்ட உருளைக்கிழங்கு , பீற்றூட் மற்றும் வாழைக்குலைகள் இரவு நேரங்களில் திருடப்பட்டு வருவதாக அப்பகுதி விவசாயிகள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

ஏற்கன்வே தென்பகுதிகளிலிருந்து எடுத்து வரப்படும் மரக்கறிவகைகள் குடா நாட்டுச் சந்தைகளில் விற்பனை செய்யப்பட்டு வருவதால் தமது உற்பத்திப் பொருட்களை நல்ல விலைக்கு விற்க முடியாதிருப்பதாக கவலை தெரிவிக்கும் விவசாயிகள் இவ்வாறு திருட்டுக்களும் இடம்பெற்று வருவதால் தாம் மேலும்பாதிக்கப்பட்டு வருவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

புன்னாலைக்கட்டுவன் , குப்பிளான் , மல்லாகம் மற்றும் அதை அண்டிய பகுதிகளில் செய்கை பண்ணப்பட்டு வரும் மரக்கறி வகைகள் மற்றும் வாழைக்குலைகளே இவ்வாறு திருடப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (6-49)

## நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டத்தில் நடப்பு வருடத்திற்கான நிர் வாக சபை உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

**இதில் போஷகர்களாக:** வி.மாணிக்கம் (கல்லூரி அதிபர்), எஸ்.ரி.பத்மநாதன்.

**தலைவராக:** ஏ.என்.செல்வராஜா

**மூத்த தலைவராக:** எஸ்.பி. ஜீவானந்தம்

**பிரதித் தலைவர்களாக:** எஸ்.சி. செல்வராஜா, செல்வி கமலவேணி இராமுப்பிள்ளை , மு.சண்முகம்.

**செயலாளராக:** நா.பேரம்பலம்

**உபசெயலாளராக:** க. நாகேந்திரம்

**பொருளாளராக:** ஏ.ஜெயகுமார் ஆகியோரும்

**செயற்குழு உறுப்பினர்களாக:** வீ.கே. சண்முகலிங்கம், எம்.றெமிடியாஸ், சோ. ராசா, மு.தனபாலசிங்கம், எஸ். விஜயகாந்த், ஜசிந்தினி பிரதீபன், கா.பீதாம்பரம், வீ.கே. கணபதிப்பிள்ளை, சி.வீ.கே. சிவஞானம், திருமதி. கோமளா செல்வராசா, திருமதி.ஜனதா ஸ்ரீகரன், வீ.பாலசுப்பிரமணியம் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

மேலும் கௌரவ கணக்காய்வாளராக டாக்டர் சீவரட்ணமும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (ஓ)

# அடுத்த மாதம் முதல் யாழ்தேவி ஓமந்தை வரை சேவையில்

(கொழும்பு)

ஜனாதிபதியின் பணிப்புரையையடுத்து யாழ்தேவி ரயில் சேவையை விஸ்தரிக்கும் திட்டம் துரிதப்படுத்தப்பட்டுள்ளதுடன் அடுத்த கட்ட நடவடிக்கையாக அந்த ரயில் சேவையை ஓமந்தை வரை நீடிப்பதற்கு ரயில்வே திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன்படி அடுத்த மாதம் முதல் யாழ் தேவி ரயில் சேவை ஓமந்தை வரை நீடிக் கப்படுமென ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

தாண்டிக்குளத்தில் இருந்து ஓமந்தை வரையான 10 கிலோ மீற்றர் தூர ரயில் பாதையை மீளமைக்கும் பணிகள் பெரும ளவு முடிவடைந்துள்ளதாக பதில் ரயில்வே பொது முகாமையாளர் சந்ரதிலக தெரிவித்து ள்ளார்.

மேலும் 200 மீற்றர் நீளமான ஓமந்தை ரயில்நிலையத்தின் முதலாம் கட்டப் புனர மைப்பு பணிகளை இம்மாத இறுதிக்குள் பூர்த்தி செய்வதாக எதிர்பார்க்கப்படுகிறது.

யுத்த சூழ்நிலை காரணமாக வடபகுதிக் கான ரயில் சேவைகள் பல வருடங்களாக தடைப்பட்டன.

ஜனாதிபதியின் பணிப்புரையையடுத்து வவுனியாவிலிருந்து தாண்டிக்குளம் வரை யான ரயில்பாதை துரிதமாக மீளமைக்கப் பட்டதோடு அடுத்த மாதம் முதல் தாண்டிக்குள த்திலிருந்து ஓமந்தை வரையில் ரயில் சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

400 மில்லியன் ரூபா செலவில் ரயில் பாதைகள் மீளமைக்கப்பட்டு வருவதோடு ஓமந்தை ரயில் பாதையை மீளமைக்க 3.6 மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளது.

இதேவேளை பிரதியமைச்சர் லயனல் பிரேமசிறி மன்றம் ரயில் நிலையத்தை நிர்மாணிக்கும் பணியை பொறுப்பேற்றுள் ளமை குறிப்பிடத்தக்கது. (6)

# நளினி விடுதலை குறித்து அரசு தகுந்த முடிவை அறிவிக்க வேண்டும்

## வழக்கு 29 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

நளினி விடுதலை செய்யப்படுவது குறி த்து தமிழக அரசு வருகிற 29 ஆம்திகதி முடிவு செய்யும் என்று சென்னை மேல் நீதி மன்றில் அரசு வக்கீல் தெரிவித்தார்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட நளினிக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. பின்னர் இது ஆயுள் தண்ட னையாக குறைக்கப்பட்டது. தன்னை முன் கூட்டியே விடுதலை செய்யவேண்டும் என்று 19 ஆண்டுகளாக ஜெயிலில் இருக்கும் நளினி அரசிடம் விண்ணப்பித்தார். ஆனால், இதுவரை விடுதலை கிடைக்கவில்லை.

மேல் நீதிமன்றில் உத்தரவின் அடிப்ப டையில், ஆலோசனைக்குழு கூட்டப்பட்டது. இந்த குழு, நளினி விடுதலை தொடர்பாக அறிக்கை ஒன்றை தயார் செய்துள்ளது. இந்த அறிக்கையை அரசுக்கு, இந்த ஆலோ சனை குழு அனுப்பி வைத்தது. நளினி விடு தலை தொடர்பாக தொடரப்பட்ட வழக்கை நீதிபதிகள் தர்மாராவ், கே.கே.சசீதரன் ஆகி யோர் விசாரித்து வருகின்றனர். அரசுக்கு ஆலோசனைக் குழு அனுப்பியுள்ள அறி க்கையை நீதிமன்றில் தாக்கல் செய்யும்படி நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

அதைத் தொடர்ந்து நேற்று முன்தினம் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அரசு தரப்பில் அட்வகேட் ஜெனரல் பி.எஸ்.ராமன் ஆஜாரானார்.

இதன்போது நடைபெற்ற விவாதத்தில் நீதிபதிகளின் கோரிக்கைக்கிணங்க அறிக் கை அவர்களின் பார்வைக்கு அளிக்கப் பட்டது. இதன்பிரகாரம் அரசுதான் தகுந்த முடிவை அறிவிக்கவேண்டும் என்றும் அதற்கு கால அவகாசம் வேண்டும் என்ப தால் வழக்கு 29 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (ஓ-6)

# தேர்தல் சட்டமீறல் 30பேர் கைது

தேர்தல் சட்டங்களை மீறிய குற்றச்சாட் டுக்களின் பேரில் 30பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவிக் கின்றனர்.தேர்தல் சட்டத்திற்கு அமைவாக தேர்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளு மாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் வேண்டு கோள் விடுத்துள்ளார்.

பொதுத் தேர்தலை முன்னிட்டு பொலிஸ் திணைக்களம் விசேட பாதுகாப்புத் திட்ட மொன்றை அமுல்படுத்தியுள்ளதாகவும் அவர் சொன்னார்.

பிரதேச செயலகங்களில் விசேட பொலிஸ் நடவடிக்கை நிலையங்கள் அமைக்கப்பட் டுள்ளதாகவும் அவற்றினூடா கவும் தேர்தலு டன் தொடர்புடைய முறைப்பா டுகளை மேற் கொள்ளமுடியுமெனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் சட்டவிரோதச் சுவரொட்டிகள், பதாதைகளை அகற்றுவதற்கான விரிவான திட்டமொன்று முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் கூறினார். (6)

# கால்களை இழந்த தமிழர்களுக்கு செயற்கை கால் வழங்க இந்தியக் குழு

வன்னியில் கடந்த ஆண்டு மே மாதம் இடம்பெற்ற போரில் சுமார் 50 ஆயிரத் திற்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டோர் கை, கால்களை இழந்துள்ளனர். பாதிக்கப்பட்ட தமிழர்களில் சுமார் 1 1/2 இலட்சம் பேர் இன்ன மும் தடுப்பு முகாம்களில் சிக்கி அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மறு வாழ்வு ஏற்படுத்திக் கொடுக்கும் முயற்சி களில் உலகில் பல நாடுகள் ஈடுபட்டுள்ளன.

இலங்கையில் உள் கட்டமைப்பை மேம் படுத்த இந்தியா ஏராளமான உதவிகளை செய்து வருகிறது. இதற்கிடையே போரில் உடல் உறுப்புக்களை இழந்த தமிழர்களுக்கு உதவ இந்தியா 19பேர் கொண்ட குழுவை அனுப்பியது.

இந்தக் குழுவினர் இலங்கை வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு சென்று ஆய்வு செய்தனர். முடிவில் ஆயிரம்பேருக்குசெயற்கை கால்களை வழங்கமுடிவு செய் யப்பட்டுள் ளது.

இந்திய குழுவை சேர்ந்தவர்கள் சுமார் 1 1/2 மாதம் இலங்கையில் தங்கியிருந்து ஆயிரம் பேருக்கும் செயற்கை கால்களை பொருத்தும் நடவடிக்கையை மேற்கொள்கிறார்கள். (ஓ-6)

# தேர்தல் காலத்தில் ஊடகங்கள் பக்கச்சார்பற்று செயற்படவேண்டும்

## உச்சநீதிமன்றம்

தேர்தல் காலத்தில் ஊடகங்கள் பக்கச் சார்பற்ற முறையில் செயற்பட வேண்டுமென உச்சநீதிமன்றம் அறிவித்துள்ளது.

தேர்தல் தொடர்பில் செய்திகள் மற்றும் நிகழ்ச்சிகளை பக்கச்சார்பற்ற முறையில் ஒலி, ஒளிபரப்புச் செய்யவேண்டுமென உத் தரவிட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது அரசாங்கத்திற்கு சார்பான முறையில் அரசாங்க ஊடகங்கள் செயற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பக்கச்சார்பான முறையில் தகவல்களை வெளியிடும் அரச ஊடகங்கள் தொடர்பில் தேர்தல் ஆணையாளரிடம் முறைப்பாடு செய்ய வேண்டும் என்று பிரதம நீதியரசர் அசோ டி சில்வா தெரிவித்துள்ளார். (ஓ-6)


Hatton National Bank

Hatton National Bank plc (PQ32)

அடகுப்பொருட்கள் ஏலவிற்பனைக்கான அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி, ஸ்ரான்லி வீதி, மானிப்பாய் ஆகிய கிளைகளில் 10/01/2009 இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத, காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகுநகைகள் 20/03/2010 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு இல.212, 214, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ்.கிளையில் ஏலத்தில் விடப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

உங்களின் பெறுமதி மிக்க பொருட்களை உடனே மீட்க முடியாவிட்டால்...

- கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் (ரூபா 500) செலுத்தி

*அல்லது*

- தற்போதைய சந்தைப் பெறுமதிக்கும் அதிகரித்த கடன் தொகைக்கும் ஏற்ப உங்கள் அடகுப் பொருட்களை மீள அடகு வைத்து காலாவதித் திகதியை நீடித்துக் கொள்ளலாம்.

ஏலவிற்பனைத் திகதியினை பிற்போடும் மற்றும் ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

-ஹற்றன் நஷனல் வங்கி

(C-4645)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் -இலங்கை

முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம்

வணிகமாணி/ தொழில் நிர்வாகமாணி

முதலாம் அரையாண்டு பரீட்சைகள் -2008 (பழைய பாடத்திட்டம்)

முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடத்தின் பழைய பாடத் திட்டத்திற்குரிய 1ஆம், 2ஆம், 3ஆம் மற்றும் 4ஆம் வருட மாணவர்களுக்கான முதலாம் அரையாண்டு பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவத்தை 18.03.2010 ஆம் திகதி முதல் முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். மீள்பரீட்சைக்கு தோற்றுவோர் ஒரு பாடத்திற்கு ரூபா 50/- வீதம் பல்கலைக்கழக காசாளரிடம் அல்லது பல்கலைக்கழக மக்கள் வங்கி கிளையிடம் செலுத்தி பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தல் வேண்டும். பூர்த்திசெய்த விண்ணப்பப்படிவங்களை பீடாதிபதி அலுவலகத்தில் 05.04.2010 அன்று அல்லது அதற்கு முன்னதாக சமர்ப்பிக்குமாறு மாணவர்கள் வேண்டப்படுகின்றனர்.

*குறிப்பு:- முதலாம் வருடத்திற்கான புதிய பாடத்திட்டத்திற்குரிய தகவல் தொழில்நுட்ப மீள்பரீட்சைக்கும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

பதிவாளர்

(C-4647)



பாராளுமன்றப் பொதுத் தேர்தல் -2010

- 63 வருட பாராளுமன்ற அரசியல் தலைமைகளை நிராகரித்து
- தமது தலைவிதியைத் தாமே தீர்மானிக்கும் மக்களுக்கான மாற்று அரசியலை முன்னெடுக்க



கா.கதிர்காமநாதன் (செல்வம்) 3



சி.கா.செந்திவேல் (முதன்மை வேட்பாளர்) 6



ரி.வி.கிருஷ்ணசாமி (ஓய்வுபெற்ற பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்) 8

புதிய ஜனநாயகக் கட்சி

சுயேட்சைக் குழு -06

(620)

# மனித உரிமை பேரவையில் உரையாற்ற விடுதலைப் புலி முகவர் ஒருவருக்கு சந்தர்ப்பம்

## திவயின தெரிவிப்பு

(கொழும்பு)

ஜெனீவா மனித உரிமைப் பேரவையில் உரையாற்றுவதற்கு தமிழீழ விடுதலைப் புலி முகவர் ஒருவருக்கும் சந்தர்ப்பம் அளிக்கப் பட்டுள்ளதாக திவயின பத்திரிகை குற்றம் சுமத்தியுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் அமெரிக்க முகவர்களில் ஒருவரான கருன் பார்க்கருக்கே இவ்வாறு சந்தர்ப்பம் அளிக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் தமிழர்களை இல்லாதொழிக்கும் நடவடிக்கை இடம்பெற்று வருவதாக பார்க்கர் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் போலியான கருத்துக் களை முன்வைத்துள்ளதாக சுட்டிக் காட்டப் படுகிறது. (ஓ-6)

# மனித உரிமைகள் பாதுகாவலர் பயிற்சிநெறிக்கு விண்ணப்பங்கோரல்

(கொழும்பு)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் உள்நாட்டில் இடம் பெயர்ந்தோருக் கான தேசிய பாதுகாப்பிற்கும் நிலையான தீர்விற்குமான விசேட செயற்றிட்டத்தின் மூலம் இவ்வாண்டில் நடத்தப்படவுள்ள மனித உரிமைகள் பாதுகாவலர் பயிற்சி நெறிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப் பங்கள் கோரப்பட்டுள்ளது.

இடம் பெயர்ந்த மக்கள், மீள்குடியேறிய மக்கள்.பிரதேச மக்கள் மற்றும் அரச நிறுவ னங்களின் அதிகாரிகளுக்குமிடையில் நம் பிக்கையினைக் கட்டியெழுப்புவதனூடாக இடம்பெயர்ந்த,மீள் குடியேறிய மக்களை வலுப்படுத்துவதும்,சமாதான சுகவாழ்வுக் கும் மனித உரிமைகள் அடிப்படையிலான அணுகுமுறையை ஏற்படுத்திக் கொடுப்பது வுமே இப்பயிற்சியின் நோக்கமாகும்.

இப் பயிற்சி நெறியினை மேற்கொள்ப வர்கள் 20 தொடக்கம் 40 வரையான வய தெல்லையினையும் சமூகம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான பொறுப்பு அனைத்து சமூக மட்டங்களுடனும் வேலை செய்யக் கூடிய இயலுமை,கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையில் ஆகக் குறைந்தது சித்திபெற்றும்,பக்கச் சார்பற்றவராகவும் , செயற்பாட்டாளர்களாகவும் இருத்தல் மற்றும் சிறந்த தொடர்பாடல் திறன் தனிப்பட்ட வகை யிலும் சமூக மட்டத்திலும் உரிமைகளை பாது காக்கக்கூடியவராகவும் இருத்தல் வேண் டும்.

யாழ் மாவட்டத்திலுள்ள 15 பிரதேச செயலர் பிரிவுகளிலிருந்து மனித உரிமைகள் பாது காவலர்களாக ஆண்,பெண் இருபாலாரும் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

பயிலுனர்கள் நேர்முகத்தேர்வின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவர்,பயிற்சிக் காலத்தில் புலமைப்பரிசிலாக சிறிதளவு தொகை பயிற் சிப்பட்டறை நடைபெறும் நாட்களில் மட்டும் வழங்கப்படவுள்ளது. காலை, மதிய உணவு, பிரயாணப்படிகள் எதுவும் வழங்கப்படமாட்டாது.

விண்ணப்பதாரிகள் தங்கள் சுயவிபரத் தில் முழுப்பெயர், முதலெழுத்துக் குறிக்கும் பெயர், பிறந்த திகதி, பால், தேசிய அடை யாள அட்டை இலக்கம், நிரந்தர மற்றும் தற்காலிக முகவரி, குடியியல் அந்தஸ்து, நலன்புரி நிலையத்தின் பெயரும் முகவரியும் அல்லது மீள்குடியேறிய பிரதேசமாயின் பெயரும் முகவரியும், பிரதேச செயலர் பிரிவு, கிராம அலுவலர் பிரிவு, கல்வி கற்ற பாடசாலையின் பெயர், கல்வித்தரம் ,தொலைபேசி இலக்கம் போன்றவற்றை விண்ணப்பத்தில் குறிப் பிடப்பட்டு பிராந்திய செயற்றிட்ட அதிகாரி உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான விசேட செயற்றிட்டம்,இலங்கை மனித உரி மைகள் ஆணைக்குழு இலக்கம் 01,03 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட் டுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு 021 222 5470 எனும் தொலைபேசி மூலமும் rvpk@sltnet.lk எனும் மின்னஞ்சல் முகவரியூடாகவும் தொடர்புகொள்ள முடியுமெனவும் விண் ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் அனுப்பும் விண்ணப்பங்கள் எற்றுக் கொள்ளப்பட மாட்டாதெனவும் ஆணைக் குழுவின் உள் நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான யாழ் பிராந்திய செயற் றிட்ட அதிகாரி தெரிவித்துள் ளார். (6-30)

# இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் கற்கை நெறிகளுக்கான விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் 2010/2011 ஆம் கல்வியாண்டுக்கான பொறியியல் டிப்ளோமா மற்றும் பொறியியல் இளமாணி கற்கைநெறிக்கு, குடிசார் எந்திரவியல், கணனி எந்திரவியல், மின் எந்திரவியல், இலத்திரனியலும் தொடர்பாடலும் எந்திரவியல், பொறி இலத்திரனியல் எந்திரவியல், புடைவை எந்திரவியல் ஆகிய துறை களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிராந்திய நிலையத்தில் பெற்று எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கமுடியும் என பிராந்திய நிலைய இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

✠✠✠

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ் பிராந்தியத்தில் 2010/2011 ஆம் கல்வியாண் டுக்கான அடிப்படை சிங்கள சான்றிதழ் கற்கை நெறிக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கான பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தினமும் காலை 9 மணிமுதல் மாலை 4 மணிவரை யாழ். பிராந்திய நிலையத்தில் பதிவுகளை மேற்கொள்ளமுடியுமென இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

✠✠✠

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் 2010 / 2011 ஆம் கல் வியாண்டுக்கான முகாமைத்துவ டிப்ளோமா கற்கைநெறிக்கு விண்ணப்பித்த மாணவர்க ளுக்கான பதிவுகள் எதிர்வரும் 17 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு யாழ். பிராந்திய நிலை யத்தில் நடைபெறுமென இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

✠✠✠

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான இளமாணிப்பட்ட கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப் படிவங்களை யாழ். பிராந்திய நிலையத்தில் பெற்று எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ஓ-6)

# வேட்பாளர்களுக்கான அடையாள அட்டைகள் தேர்தல் செயலகத்தால் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு தேர்தல் செயலகத்தால் அடையாள அட்டைகள் விநி யோகிக்கும் பணி ஆரம்பிக்கப்பட் டுள்ளதாக யாழ் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் பொ. குகநாதன் தெரிவித் துள்ளார்.

வேட்பாளர்கள் அடையாள அட்டை இல்லாமல் வாக்களிப்பு நிலையங்களுக்குசெல்ல அனுமதிக்கப் படமாட்டார்கள் எனவும் மேற் படி தேர்தல் செயலகத்தினால் வழங்கப்பட் அடையாள அட்டை உடை யவர்களே வாக்களிப்பு நிலையங்களுக்கு செல்ல அனுமதிக்கப்படுவர் எனவும் அவர் தெரிவித்தார்.அத்துடன் அஞ்சல் வாக்காளர் இடாப் புக்களை உரிய கட்சிகளுக்கு விநியோ கிக்கும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதா கவும் ஆணையாளர் தெரிவித்தார். (ஓ-30)

# நெக்டெப், நேப் திட்டப் பணிப்பாளர் உள்ளிட்ட குழுவினர் வடபகுதிக்கு விஜயம்

## அபிவிருத்தி வேலைத்திட்டங்களை பார்வையிடவுள்ளனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் நடைபெறு கின்ற அபிவிருத்தி வேலைத் திட்டங் களை பார்வையிடுவதற்கு நெக் டெப் ,நேப் திட்டப் பணிப்பாளர் எஸ். எம். குரூஸ் மற்றும் அவரது குழு வினர் நாளை ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி க்கு விஜயம் செய்யவுள் ளனர்.

இக்குழுவினர் இடம்பெயர்ந் தவர்கள் மீளக் குடியேறவுள்ள பகுதிகளில் புதிதாக கட்டடப்படும் உடைந்த நிலையிலுள்ள வீடமைப் புக் கட்டிடங்களின் ஆரம்ப கட்ட பணிகளை மேற்பார்வை செய்ய வுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் மூலம் மீளக்குடியமரும் குடும்பங்கள் பெரிதும் நன்மை அடைவர் என எதிர் பார்க்கப்படுகின் றது.

நாளை மறுதினம் யாழ்ப்பா ணத்திற்கு வரும் குழுவினர் யாழ். மாவட்டம் முழுவதிலும் முன்னெடுக் கப்பட்டு வருகின்ற சுனாமித் திட்டத் தின் போது மேற்கொள்ளப்படும் வேலைகளின் இறுதிக்கட்ட மதிப் பீடு செய்யவும் வீடமைப்புத் திட்டத் தின் முன்னேற்றங்களை மதிப்பீடு செய்யவும் உள்ளனர்.

இவர்களுடன் மாவட்ட திட்டப் பணிப்பாளர்களும் இணைந்து கொண்டு யாழ். மாவட்டத்திலுள்ள பருத்தித்துறை ,தென்மராட்சி வலிகா மம் போன்ற பகுதிகளுக்கு செல்ல வுள்ளனர்.

யாழ் மற்றும் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர்களை இக்குழுவினர் சந்திக்கவுள்ளமை குறிப்பிடத்தக் கது.

இதேவேளை சுனாமியால் பாதிக் கப்பட்ட பிரதேசங்களில் மீள்கட்டு மான செயல் திட்டத்தில் வடக்கு கிழக்கில் செய்யப்பட்ட அபிவிருத்தி பணிகளில் யாழ் மாவட்டம் முதன் மை பெற்றுள்ளதாக ஆசிய அபிவி ருத்தி வங்கியின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளமை முக்கிய அம்ச மாகும். (6-30)

# பயிற்சி பட்டறை

(யாழ்ப்பாணம்)

இலங்கை ஏற்றுமதி அபிவி ருத்தி சபையும் யாழ்.மாவட்ட கைத் தொழில் அபிவிருத்தி சபையும் இணைந்து *உடன் மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட விவசாயப் பொருட்களின் ஏற்றுமதிக்கான பொதியிடல்* எனும் பயிற்சிப் பட்ட றையை எதிர்வரும் 25ஆம் திகதி முற்பகல் 9மணிதொடக்கம் பிற்ப கல் 3மணிவரை யாழ்.மாவட்ட செயலக பொதுமண்டபத்தில் நடத் தவுள்ளது.

இப்பயிற்சிநெறியில் கலந்து கொள்ளவிரும்புவர்கள் கைத் தொழில் அபிவிருத்திசபை, தேசிய வீடமைப்பு அதிகாரசபைக் கட்டடம், சுண்டிக்குளி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் தொடர்பு கொள்ளு மாறு யாழ்.மாவட்ட கைத்தொழில் அபிவிருத்தி சபையின் உதவிப் பணிப்பாளர் எஸ். சிவகெங்காதரன் கேட்டுக்கொள்கின்றார். (6-30)


## வல்வெட்டித்துறை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகத்தின் 57வது நிறைவும், வருடாந்த இல்ல தடகளப் போட்டி பெருவிழாவும் -2010

காலம்:- 14.03.2010 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.00 மணி
இடம் :- கழக மைதானம்

தலைமை
**திரு.கூ.சே.குலநாயகம்**
[கழக தலைவர்]

பிரதம விருந்தினர்
**திரு.சண்முகம் தயாளன்**
[உதவிக் கல்விப் பணிப்பாளர்- உடற்கல்வி -யாழ்ப்பாணம்]

கௌரவ விருந்தினர்கள்
**திரு.A.சற்குணபாலன்**
[முகாமையாளர்- சம்பத்வங்கி, நெல்லியடி]
**திரு.T.செல்வசபாபதிப்பிள்ளை**
[தலைவர்- நெடியகாடு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் கோவில்]
**திரு.D.M.வேதாபரணம்**
[தலைவர்-பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்]
**திரு.K.மயிலேறும்பெருமாள்**
[மாவட்ட வைத்திய அதிகாரி -வல்வெட்டித்துறை]
**திரு.A.வசந்தன்**
[பருத்தித்துறை பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர்]
**திரு.K.திருமாலழகன்**
[ஆசிரியபீடம் -வலம்புரி நாளிதழ்]

*நிகழ்ச்சி நிரல்*

- மங்கள விளக்கேற்றல்
- கொடியேற்றல்
- அமைதி வணக்கம்
- அணிநடை
- ஒலிம்பிக் தீபமேற்றல்
- சத்தியப்பிரமாணம்
- விழாவை ஆரம்பித்தல்
- இல்லங்களிடையேயான விளையாட்டு நிகழ்வு
- தடகளப் போட்டிகள்
- ஏனைய கழக விளையாட்டுக்கள்
- உடற்பயிற்சி நிகழ்வுகள் (ஆண்கள்,பெண்கள்)
- பாரம்பரிய விளையாட்டுக்கள்
- தலைவர் உரை
- பிரதம விருந்தினர் உரை
- நன்றியுரை
- பரிசில் வழங்கல்
- இன்னிசை நிகழ்வு

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

01.03.2010
நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம்
வல்வெட்டித்துறை
(இ)



U.N.O.P நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட சமாதானத்திற்கான சமூக செயற்திட்ட சிரமதான நிகழ்வில் கலந்துகொண்ட புத்தளம் வேலாசியா சிங்கள மகாவித்தியாலயம், கந்தொட்டுவ சிங்கள மகாவித்தியாலயம், கொட்டாந்தீவு முஸ்லிம் மகாவித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய மைதானத்தில் அதிபர் மு.விக்னேஸ்வரன், வயாவிளான் மகாவித்தியாலய அதிபர் க.கனகராசா ஆகியோருடன் நிற்பதை முதலாவது படத்திலும், ஐந்து பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் சிரமதானப் பணியிலீடுபடுவதை இரண்டாம், மூன்றாம் படங்களிலும் காணலாம். (படங்கள்:-கோப்பாய் நிருபர்)

# தென்மராட்சி பிரதேச அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி திருமுருகன் விளையாட்டுக் கழகத்தினரால் தென்மராட்சி பிரதேச கிரிக்கெட் அணிகளுககு இடையில் நடத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி நகரசபை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக 522 ஆவது படையணி தளபதி கேமந்த பண்டார, சாவகச்சேரி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏ.பி.கே.சனத்குமார மற்றும் தென்மராட்சி பிரதேச செயலர் ஶ்ரீநிவாசன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

மேலும் இறுதிப் போட்டியில் சாவகச்சேரி விளையாட்டுக்கழக கிரிக்கெட் அணியும் சாவகச்சேரி படையினர் கிரிக்கெட் அணியும் மோதவுள்ளன.

இதேவேளை கடந்த 14 ஆம் திகதி ஆரம்பித்த இச்சுற்றுப் போட்டியில் 30 அணிகள் இதுவரை பங்கு பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(6-29)

## தொழிற்பயிற்சி நெறிக்கான பதிவுகள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலக விதாதா வள நிலையத்தினால் நடத்தப்படவுள்ள ஸ்கிறீன் பிறிண்டிங் மற்றும் உற்பத்திப் பொருட்களுக்கான பொதியிடல் முறைகள் ஆகிய பயிற்சி நெறிகளினை மேற்கொள்ளவுள்ளவர்கள் எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன்னதாக பலாலி வீதி, கந்தர்மடத்திலுள்ள விதாதா வள நிலையத்தில் பதிவினை மேற்கொள்ளுமாறு பிரதேச செயலர் கேட்டுக் கொள்கின்றார். (6-30)

# பிரதேச மட்டத்திலான சர்வதேச மகளிர் தினவிழா

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலக பிரதேச மட்ட சர்வதேச மகளிர் தின விழா நாளை மறுநாள் திங்கட்கிழமை பி.ப. 3.30 மணியளவில் பிரதேச செயலாளர் சி.சத்தியசீலன் தலைமையில் நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட செயலக மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. ரூபினி வரதலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார்.

இதில் சிறப்பு நிகழ்வாக 'சுமைகளை சுகமாக்கும் நங்கையர்க்கு ஏது செய்வோம்' எனும் கவியரங்கு உள்ளிட்ட பல கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளதுடன் இந் நிகழ்வினை முன்னிட்டு நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களிற்கு பரிசில்கள் வழங்கும் நிகழ்வும் இடம் பெறவுள்ளது. (ஓ)

# முதலீட்டு சபை கிளை அலுவலகம் யாழில் திறந்து வைக்கப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

முதலீட்டாளர்கள் பல்வேறு வசதிகளை பெற்றுக் கொள்ளும் முகமாக இலங்கை முதலீட்டுச் சபை தனது பணிகளை யாழ் மாவட்டத்திற்கும் விஸ்தரித்துள்ளது.

இதற்காக தனது கிளை அலுவலகத்தை தேசிய வீடமைப்பு செயலகக்கட்டடம், முதலாம் மாடி, கண்டி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைத் துள்ளதாக முதலீட்டுச் சபையின் சிரேஸ்ட பிரதிப் பணிப்பாளர் ஆர்.ஜெயமனோன் அறி வித்துள்ளார்.

மேற்படி நிறுவனத்தினூடாக முதலீட்டாளர்கள் பல்வேறு வசதிகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று அவர் தெரிவித்துள்ளார். (ஓ)

## உள்ளூராட்சி வார போட்டிகளில் வடலியடைப்பு கலைவாணி சனசமூக நிலையம் முதலிடம்

வலி தென்மேற்கு பிரதேச சபை பிரிவிலுள்ள சனசமூக நிலையங்களுக்கிடையே உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளின் அடிப்படையில் வடலியடைப்பு கலைவாணி சனசமூக நிலையம் முதலிடம் பெற்றுள்ளது. 2008 இலும் இந் நிலையம் முதலிடம் பெற்றதாக ளசனசமூக நிலையத்தினர் தெரிவித்துள்ளனர். (6-30)

BOC
ලංකා බැංකුව இலங்கை வங்கி

இலங்கை வங்கி

ஏலவிற்பனை அறிவித்தல்

1968 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்க சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 22 ஆம் பிரிவு (397 ஆம் அத்தி) இன் கீழ் விற்பனை அறிவித்தல்

கடன் தொடர்பு இல: 2889204, 6987860

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2009.04.17 ஆம் திகதி 1598 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2009.04.08 ஆம் திகதி டெய்லி நியூஸ், தினமின, தினகரன் ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் ***இல. 692, கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம்*** என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திரு.கே.பி. பாலகிருஷ்ணன் 2010.03.20 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டத்திலும் பிரிவிலும் நல்லூர் பிரிவில் திருநெல்வேலி இறைவரி உத்தியோகத்தர் பிரிவில் "அருமகலட்டி" என அழைக்கப்படும் மற்றும் பெயருடைய ஆறரை லாச்சம் (6 1/2 லாச்சம் V.C) விஸ்தீரணமுடைய காணி. இவ் ஆறரை லாச்சங்களிலிருந்து (லாச்சம் 6 1/2 V.C) பிரிக்கப்பட்ட ஒரு பகுதி வடக்குப் பக்கத்தில் மூன்றரை லாச்சங்கள் (03 1/2 லாச்சங்கள் V.C) ஏற்கனவே, சீதனம் வழங்கப்பட்டுள்ளதுடன் தெற்குப் பக்கமாக காணியின் மீதிப்பாகம் மூன்று லாச்சங்கள் (03 லாச்சங்கள் V.C) விஸ்தீரணமுடைய காணியும் வீடும் பயிரிடப்பட்ட மற்றும் இயற்கைப் பயிர்களும் வடக்கு எல்லையில் காணப்படும் கிணற்றின் பங்கும் வழி/வாய்க்கால் பாவிப்புரித்தும் ஆகும். இக்காணி யாழ்ப்பாணம் உத்தரவு பெற்ற நில அளவையாளர் R.ரத்னராஜா வரைந்த 2005.06.20 திகதியிட்ட அண்மைய அளவை வரைபடம் இல. 1064 இன் கீழ் துண்டு 01 என விபரித்துள்ளதுடன் மூன்று லாச்சங்களும் பதினாறு தசம் எட்டு ஒன்று குழிகளும் (03 லாச்சங்களும் V.C 16.81 குழிகளும்) விஸ்தீரணமுடையது. இது நல்லூர் பிரதேச சபை எல்லைகளுள் வட்டாரம் இல.9 இல் யாழ்ப்பாணம் ஆடியபாதம் வீதி வரிமதிப்பிலக்கம் 116/2 ஐக் கொண்டது. இக்காணியின் எல்லைகளாவன:- கிழக்கில் P.சேனாதிராஜாவின் ஆதனமும், வடக்கில் கணேசனின் மனைவி குமுதினியின் ஆதனமும், மேற்கில் ஒழுங்கையும், தெற்கில் P.சேனாதிராஜாவின் ஆதனமும் எல்லைகளாகக் கொண்டு இவ் எல்லைகளுள் அடங்கும் சகலதும் ஆகும். இக்காணி யாழ்ப்பாணம் காணிப்பதிவகத்தில் தொகுதி D 356 பக்கம் 150 இல் பதிவு செய்யப்பட்டது.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை கட்டளைப்படி.

இலங்கை வங்கி
திருநெல்வேலி.

E.பிரேமராஜன்
கிளைமுகாமையாளர்.

(C-4648)

Jaffna College Institute of Technology
Vaddukoddai

பின்வரும் பாடநெறிகளுக்கு உடனடியாக விண்ணப்பிக்கவும்.

➢Certificate Craft Courses (தமிழ் மூலம்)

- Refrigeration & Air-Conditioning Mechanic (குளிரூட்டுதல் பயிற்சி)
- Automobile Technology (மோட்டார் வாகன தொழில்நுட்பம்)
- Mechine Shop Practice (லேத் வெல்டிங் பயிற்சி)

Duration : 1 Year(Full time)

- Electrician (வீட்டு மின் இணைப்பும் நிர்மாணமும்)
- Radio & T.V. Servicing (றேடியோ ரீவி பழுதுபார்த்தல்)
- Electrical & Electronics (மின்னியலும் இலத்திரனியலும்)
- Certificate in Aluminium Fitting (அலுமினியத்தில் பொருத்துதல்)

Duration : Six months (Full time)

Certificate Course

- Certificate in Computerized Accounting (Tally, Acc Pac)

Duration : Six months

அரச 'Tertiary and Vocational Education Commission" ஆல் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நெறிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

விண்ணப்பப்படிவங்களைக் கீழ்க்கண்ட முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

Director
Jaffna College Institute of Technology
Vaddukoddai.

Email:jcit@sltnet.lk
Tel.Phone: 021-2228275, 021-3213139

(C-4646)

## இலங்கை இளைஞர்கள்

# அகதிகளாக படகில் தமிழகம் வந்ததால் கடலோர பாதுகாப்பில் கேள்விக்குறி

(மண்டபம்)

இலங்கை முள்வேலி முகாமிலிருந்து தப்பிய இளைஞர்கள் தமிழகத்துக்கு படகில் அகதியாக வந்துள்ளனர்.

கடலோர பாதுகாப்பில் கேள்விக் குறியை உருவாக்கி உள்ளது. இலங்கையில் போர் முடிபுக்கு வந்ததும் தமிழர்கள் படகு மூலம் அகதிகளாக தமிழகம் வருவது குறைந்தது.

இலங்கையில் தமிழர்களுக்கு அனைத்து உரிமைகளும் வழங்கப்படும். முள்வேலி முகாமுக்குள் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழர்கள் அவர்களது சொந்த இடத்தில் தங்கவைக்கப்படுவர் என அதிபர் ராஜபக்ஷ உறுதி கூறினார்.

இதனிடையே இலங்கை வவுனியா பகுதியில் உள்ள முள்வேலி முகாமிலிருந்து தப்பிய தர்மசீலன் (30), கயரூபன் (22), சுமித்குமார் (25) என மூன்று பேர் கடந்த புதன்கிழமை நள்ளிரவு 12 மணிக்கு படகில் மண்டபம் வடக்கு கடல் பகுதியில் வந்து இறங்கினர்.

இவர்களில் தர்மசீலன் கூறியதாவது,

கடந்த 2008 ஆம் ஜுன் முதல் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள முகாமில் தங்க வைக்கப்பட்டோம்.

போர் முடிபுக்கு வந்த பிறகும் இலங்கை இராணுவத்தினர் எங்களை துன்புறுத்துவதை நிறுத்தவில்லை.

இன்னும் விசாரணை என்ற பெயரில் இளைஞர்களை அடிக்கின்றனர்.

இதனால் வேலைக்கு செல்வதாக கூறி தப்பி வந்தோம்.

ராஜபக்ஷ அதிபராக நீடிப்பதால் இலங்கையில் தமிழ் இனிமேல் அழிந்துவிடும். இவ்வாறு தர்மசீலன் கூறினார்.

அவர்களிடம் கியூ பிரிவு பொலிஸாரும் விசாரணை நடத்தினர்.

மார்ச் 13 இல் நடக்கும் புதிய சட்டசபை கட்டட திறப்பு விழாவிற்காக பிரதமர் மன்மோகன் சிங், சோனியா சென்னை வர உள்ள நிலையில் கடலோர காவல் படை, கடற்படை மற்றும் பொலி ஸார் பாதுகாப்பை மீறி இலங்கை இளைஞர்கள் படகில் வந்து மண்டபம் பொலிஸ் நிலையத்துக்கு வந்துள்ளது கடல் பாதுகாப்பில் கேள்விக் குறியை உருவாக்கியுள்ளது. (ஓ-6)

# வாழ்வாதாரங்களுக்கு ஆபத்து நிலவுகையில் ஆடம்பர விழாக்களில் செலவிடுகிறது அரசு

## ம.தி.மு.க பொதுச் செயலர் வைகோ

(மதுரை)

தமிழகத்தில் கடும் மின்வெட்டு வாழ்வாதாரங்களுக்கு ஆபத்து நிலவுகையில், அரசு ஆடம்பர விழாக்களில் நேரத்தை செலவிடுகிறது என ம.தி.மு.க, பொதுச் செயலாளர் வைகோ குற்றம் சாட்டினார்.

மதுரையில் திருமண வைபமொன்றில் அவர் பேசுகையில்,


ம.தி.மு.க. தொண்டர்களால் உருவாக்கப்பட்ட இயக்கம். தொண்டர்கள் ஒரு இயக்கத்திற்கு நாடித்துடிப்பு.

எத்தனையோ சோதனைகள் வந்தாலும் ம.தி.மு.க.வை. அழிக்க முடியாததற்கு தொண்டர்களே காரணம். திராவிட இயக்க கொள்கைகள் தீர்த்து போகாமல் இருக்க பாதுகாப்பாக செயல்படுகிறது.

ம.தி.மு.க.வை தொடக்கிய காலகட்டத்தில் நள்ளிரவு, அதிகாலை என மாநாடுகளை நடத்திய பெருமை உண்டு. அதற்கு தொண்டர்கள் அளித்த ஆதரவு காரணம்.

சுதந்திர போராட்டத்தில் தமிழர்களின் பங்கு மகத்தானது. பாஞ்சாலங்குறிச்சி, சிவகங்கை என எந்த போராட்டங்கள் என்றாலும் முதலில் வாளை தூக்கியது தமிழர்கள் தான்.

இந்நிலையில் ஈழத்தமிழர்கள் இனத்தை அழிக்க இலங்கைக்கு ஆயுத உதவி செய்தது இந்திய அரசு. இன்று தென் மாவட்டங்களின் நிலைமை கவலையளிக்கிறது.



பெண் உரிமைக்கு மதிப்பு கொடுக்கிறோம். மக்களவையில் பெண்களுக்கான இட ஒதுக்கீடு மசோதா நிறைவேறும் போது சிறப்பானதாக அமையும் என்றனர்.

இன்று பெண்கள் குடிநீருக்காக அலையும் நிலையுள்ளது. பெரியாறு அணை பிரச்சினையில் கேரளா அரசு அநீதி இழைக்கிறது. பெரியாறு அணையை இடிக்க திட்டமிடுகிறது. அணை இடிக்கப்பட்டால் ஐந்து மாவட்ட மக்களுக்கு பாதிப்பு. இரண்டு இலட்சம் ஏக்கர் விளைநிலங்கள் பாதிக்கப்படும்.

தமிழக உரிமையை நிலைநாட்ட கேரள முற்றுகை போராட்டத்தை ம.தி.மு.க. மே 28 இல் நடத்துகிறது. இப்போராட்டம் கேரளாவுக்கு எதிரானது அல்ல. தமிழர்கள் நலனை புறக்கணிப்பதை எச்சரிப்பதற்காக நடத்தப்படுகிறது.

தமிழகத்தில் நிலவும் மின்வெட்டால் விவசாயிகள், மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். மின்வெட்டு ஒருபுறம். மற்றொரு புறம் வாழ்வாதாரங்களுக்கு ஆபத்து. இந்நிலையில் தமிழக அரசு ஆடம்பர விழாக்களில் நேரத்தை செலவிடுகின்றது என்றார். (ஓ-6)




# இலங்கை திரும்ப கியூபிரிவு பொலிஸாரின் சான்றுக்காக காத்திருக்கும் அகதிகள்

(விருதுநகர்)

இலங்கைக்கு செல்ல ஆட்சேபனை சான்று வழங்குவதில் கியூபிரிவு பொலிஸார் தாமதம் செய்வதால், அகதிகள் முகாமில் உள்ள இலங்கை தமிழர்கள் பரிதவித்து வருகின்றனர்.

இலங்கையில் இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடந்த போர் காரணமாக அங்கிருந்து தப்பி வந்த தமிழர்கள் தமிழகத்தில் 117 முகாம்களில் தங்கியுள்ளனர்.

தற்போது இலங்கையில் அமைதி சூழல் ஏற்பட்டுள்ளதால் அகதிகள் இலங்கை செல்ல முடிபு செய்துள்ளனர். இதற்கு ஆட்சேபனை இல்லை என சான்று பெற வேண்டும்.

கடந்த காலங்களில் அகதிகள் தாயகம் திரும்ப வேண்டும் என்றால் அகதிகள் மறுவாழ்வுத்துறை ஆணையரிடம் அனுமதி பெற வேண்டும்.

ஆனால் சமீபகாலமாக அந்தந்த பகுதியில் உள்ள அதிகாரிகள் அனுமதித்தால் போதுமானது என அரசு உத்தரவிட்டுள்ளது.

தற்போது அகதிகள் முகாமில் இருந்து இலங்கை திரும்ப தாலுகா அலுவலகத்தில் இருந்து தடையில்லா சான்றும் எஸ்.பி. சி.ஐ.டி அலுவலகம், முகாம் கட்டுப்பாட்டில் உள்ள பொலிஸ் நிலையத்திலும், கியூ பிரிவு பொலிஸாரும், ஆட்சேபனை இல்லை என சான்று வழங்க வேண்டும்.

இதில் கியூ பிரிவின் அனுமதி, சென்னையிலிருந்து வழங்க வேண்டியிருப்பதால் சான்று பெற இரண்டு மாதத்திற்கு மேல் ஆகிறது.

இந்த சான்று பெற்ற பின் கலெக்டரின் அனுமதிக்கு பின்னரே இலங்கை செல்ல வேண்டிய நிலை உள்ளது.

வீண் கால தாமதம் ஆவதால் இலங்கை திரும்புவோர் காத்திருக்க வேண்டிய நிலை உள்ளது.

தற்போதைய நடைமுறைகள் எளிதாக்கப்பட்டாலும், கியூபிரிவு பொலிஸாரின் சான்று விரைவில் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என இலங்கை தமிழர்கள் வலியுறுத்தி வருகின்றனர். (ஓ-6)

# செம்மொழி மாநாடு சிறக்க தமிழில் 3 கோடி அர்ச்சனை

செம்மொழி மாநாடு சிறப்பாக நடக்க கொங்கு மண்டலத்தில் உள்ள முக்கிய கோவில்களில் மூன்று கோடி அர்ச்சனை செய்ய முடிபு செய்யப்பட்டுள்ளது. உலகத் தமிழ் செம்மொழி மாநாடு, கோவையில் வரும் ஜுன் மாதம் நடக்கிறது.

செம்மொழி சிறக்கவும், உல்கத்தமிழர்கள் நலமுடன் வாழவும், உலகம் முழுவதும் அமைதி ஏற்படவும் கொங்கு மண்டலத்தில் உள்ள முக்கிய கோவில்களில் தமிழில் மூன்று கோடி அர்ச்சனை செய்ய இந்து சமய அறநிலையத்துறை முடிபு செய்துள்ளது.

அவினாசி வட்டாரத்தில் அவினாசிலிங்கேஸ்வரர் கோவில் (அவினாசி), மாரியம்மன் கோவில் (கருவலூர்), திருமுருகநாதசுவாமி கோவில் (திருமுருகன்பூண்டி), லட்சுமிநரசிங்கப் பெருமாள் கோவில் (தாளக்கரை), வெங்கடேச பெருமாள் கோவில் (மொண்டிபாளையம்) ஆகிய கோவில்களில் இலட்சார்ச்சனை சிறப்பு வழிபாடு நடக்கிறது. (ஓ-6)

# தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகளை திருப்பி அனுப்பிவைப்பதே அரசின் நோக்கம்

## உட்துறை இணை அமைச்சர்

(புதுடில்லி)

இலங்கைத் தமிழ் அகதிகளை தமிழகத்தில் நிரந்தரமாகக் குடியமர்த்தும் திட்டம் எதுவும் மத்திய அரசின் பரிசீலனையில் இல்லை என்று உட்துறை இணை அமைச்சர் அஜய் மக்கான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மாநிலங்களவையில் உறுப்பினர் ஒருவரின் கேள்விக்கு அவர் எழுத்து மூலம் அளித்த பதிலில் கூறியிருப்பதாவது,

இலங்கையிலிருந்து தமிழர்கள் அகதிகளாக வருவதை ஊக்குவிக்கக் கூடாது என்பது தான் மத்திய அரசின் அணுகுமுறையாகும். எனினும் இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக வரும்போது அவர்கள் அகதிகள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டு நிவாரண உதவிகள் வழங்கப்படுகின்றன

தமிழகத்தில் உள்ள அகதிகளை மீண்டும் தங்கள் நாட்டில் குடியேற இலங்கை அரசு தற்போது விருப்பம் தெரிவித்துள்ளதைத் தொடர்ந்து அவர்கள் தாயகம் திரும்பும் வரையில் மாநில அரசு அமைந்துள்ள அகதிகள் முகாமில் தங்கவைக்கப்பட்டு அவர்களுக்கு மனிதநேய அடிப்படையில் அடிப்படை நிவாரணப் பொருட்கள் வழங்கப்படுகின்றன.

தமிழகத்தில் உள்ள அகதிகளை இலங்கைக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்பதே அரசின் நோக்கமாகும். இலங்கைத் தமிழ் அகதிகளை தமிழகத்தில் நிரந்தரமாக குடியமர்த்துவதற்கு யோசனை தெரிவித்து தமிழக முதலமைச்சர் மத்திய அரசுக்கு கடிதம் எழுதியுள்ள போதிலும் தற்போது வரை இந்த யோசனை மத்திய அரசின் பரிசீலனையில் இல்லை என்றார் (ஓ-6)

# மாவோயிஸ்டுகளின் ஆவணம் சிக்கியதால் அவர்களின் சதித்திட்டம் அம்பலமாகியது

மாவோயிஸ்டு தீவிரவாதிகள் இந்தியாவில். 6 மாநிலங்களில் மிக வலுவாக உள்ளனர். அவர்களை ஒடுக்க மத்திய அரசு பல்வேறு திட்டங்களை தீட்டி செயல்படுத்த தொடங்கியுள்ளது. துணை நிலை இராணுவமும் உள்ளூர் பொலிஸாரும் இணைந்த கூட்டுப்படைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

மத்திய அரசின் இந்த நடவடிக்கைகளுக்கு பதிலடி கொடுக்க மாவோயிஸ்டுகள் புதிய சதி திட்டங்களை வகுத்துள்ளனர். இதுவரை அடர்ந்த காட்டுக்குள் இருந்து தாக்குதல் நடத்தி வந்த அவர்கள் இனி நகர்ப்பகுதிகளிலும் தங்கள் கைவரிசையைக் காட்ட முடிபு செய்துள்ளனர்.

குறிப்பாக தொழிற்சாலைகள் நிறைந்த பகுதிகளில் தாக்குதல்கள் நடத்த மாவோயிஸ்டுகள் சதித் திட்டம் தீட்டியுள்ளனர். இதற்காக அவர்கள் 129 பக்கம் கொண்ட ஆவணம் தயாரித்திருந்தனர். அதில் ஒரு பிரதி பாதுகாப்புப் படையிடம் சிக்கியுள்ளது.

அந்த ஆவணத்தில் குர்கான், மும்பை, புனே, ஆமதாபாத், சூரத், கொல்கத்தா, பிலாய், ராஞ்சி, தன்பாத் உட்பட தொழிற்சாலைகள் நிறைந்த பகுதிகளில் தாக்குதலுக்கு முடிபு செய்துள்ளனர். இதன் மூலம் இந்திய தொழில் உலகை ஒரு உலுக்கு உலுக்கி விட முடியும் என்று மாவோயிஸ்டுகள் நினைக்கிறார்கள்.


போக்குவரத்து, தொலை தொடர்பு ரயில்வே, துறைமுகம், மின்சாரம், எண்ணை வளம் போன்றவற்றில் கூடுதல் கவனம் செலுத்த மாவோயிஸ்டுகள் தனித்தனி பிரிவுகளை ஏற்படுத்தியுள்ளனர்.

தங்கள் பாதுகாப்பை பல மடங்கு அதிகரித்து, கட்டமைப்பு வசதிகளை பலப்படுத்தி கொண்ட பிறகே பெரிய தாக்குதல்களை தொடங்க மாவோயிஸ்டுகள் திட்டமிட்டிருப்பது ஆவணங்கள் மூலம் தெரிய வந்துள்ளது.

உளவுத்துறையும் இது தொடர்பாக விரிவான அறிக்கை கொடுத்து எச்சரித்துள்ளது. இதையடுத்து மாவோயிஸ்டுகளை கண்காணிக்க கூடுதல் படைகள் களத்தில் இறக்கி விடப்பட்டுள்ளன. (ஓ-6)

# அரசாங்கம் வழங்கிய உறுதிமொழிகளை மீறியதால் பாரியளவிலான சர்வதேச உதவிகளை இழந்துள்ளது

## ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச



(கொழும்பு)

இலங்கையில் யுத்தம் முடிபடைந்த பின்னர் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகள் உட்பட உள்நாட்டில் காணப்பட்ட ஏனைய ஜனநாயகப் பிரச்சினைகள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபைக்கும், சர்வதேசத்துக்கும் வழங்கிய உறுதிமொழிகளை இலங்கை அரசாங்கம் மீறியுள்ளது.

இதனால், பாரியளவிலான சர்வதேசத்தின் உதவிகளை இழந்துள்ளதுடன் அநாவசிய[illegible]ன பகையையும், தலையீடுகளையும் தேடிக் கொண்டுள்ளது என ஜே.வி.பி.யின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்தார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தற்போதைய அரசாங்கம் ஒருபோதும் தீர்வைப் பெற்றுக் கொடுக்காது. பாரிய பொருளாதார நெருக்கடியில் சிக்கி நாட்டு மக்களை மீள முடியாத பாதாளத்தில் தள்ளிவிடவே அரசாங்கம் முயற்சி செய்கின்றது. இதனை பொது மக்கள் நன்கு விளங்கிக் கொள்ள வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கைக்கு எதிரான சர்வதேச நாடுகளின் செயற்பாடுகள் குறித்து கடந்த வியாழக்கிழமை தெளிவுபடுத்துகையிலேயே சோமவன்ச அமரசிங்க மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

அரசியல் அமைப்பு இலங்கையில் அத்தியாவசியமான பிரச்சினை கிடையாது. அதனை மாற்றியமைப்பதற்கு அரசாங்கம் கடுமையாக முயற்சி செய்கின்றது என்றால் அதனூடாக அரசியல் இலாபம் பெறுவதற்கே தவிர, நாட்டின் நலனுக்காக அல்ல. ஜனநாயகம்; நீதியான தேர்தல் என்பவையே தற்போது இலங்கைக்கு அத்தியாவசியமாக உள்ளது.

இவற்றை முறையாகப் பாதுகாத்தால் நாட்டின் பொருளாதாரமும் மக்களும் தானாக அபிவிருத்தியடையும் சந்தர்ப்பம் கிடைக்கும். இதனையே சர்வதேச நாடுகளும் எதிர்பார்க்கின்றன. இன்று ஐக்கிய நாடுகள் சபையும், ஏனைய சர்வதேச நாடுகளும் இலங்கையுடன் முரண்பட அரசாங்கத்தின் சுயநல அரசியல் போக்கே பிரதான காரணம் ஆகும்.

இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர குறிப்பிட்ட சில நாடுகளைத் தவிர பெரும்பாலான சர்வதேச நாடுகள் இலங்கைக்கு பல்வேறு வழிகளில் உதவிகளைச் செய்தன.

ஆனால் யுத்தம் முடிந்ததன் பின்னர் உள்நாட்டில் தேசிய பிரச்சினைகள் தொடர்பான தீர்வுகள், ஜனநாயகத்தை ஸ்தாபித்தல், இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றல் உட்பட பல பிரச்சினைகள் தொடர்பாக முறையான வகையில் செயற்படாமல் அரசாங்கம் தனது அரசியல் தேவைகளையே கவனத்தில் கொண்டது.

இதனால் இலங்கையில் நீதி ஒழுங்கு மீறப்பட்டதுடன் ஜனநாயகம் அழிந்து போனது. இது தொடர்பாகவே ஐ.நாவும் ஐரோப்பிய ஒன்றியம் உட்பட சர்வதேசமும் இலங்கைக்கு அழுத்தங்களையும் தலையீடுகளையும் மேற்கொண்டுள்ளது.

ஜி.எஸ்.பி. போன்ற மிகவும் முக்கியமான சர்வதேச நிவாரண உதவிகள் இலங்கைக்குக் கிடைக்காமல் போகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. (ஓ-6)

# பொதுக்கூட்டம்

(பொன்னாலை)

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு சங்கர்னை பட்டினசபை வீதியிலுள்ள அதன் தலைமைக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

சம்மேளனத் தலைவர் க. புஷ்பராசா தலைமையில் நடைபெறும் மேற்படி கூட்டத்திற்கு சங்கங்களின் அங் கத்தவர்கள், நெறியாளர் குழு உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சம்மேளனச் செயலாளர் செ. குமாரசிங்கம் கேட்டுள்ளார். (6-49)

# முட்செடிகள் அகற்றப்பட்டு வீதி திருத்தப்பட்டுள்ளது

(ஊர்காவற்றுறை)

நீண்டகாலமாக அனலைதீவு, எழுவைதீவு, நயினாதீவு ஆகிய இடங்களுக்கு செல்லும் கண்ணகி அம்மன் ஆலய இறங்குதுறை வீதி வடபிராந்திய தீவக சாரதிகளின் முயற்சியால் முட்செடிகள் அகற்றப்பட்டு திருத்தப்பட்டுள்ளது. (6-72)

# பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிரான நடவடிக்கை தேர்தலில் பாதிப்பை ஏற்படுத்தும்

## பவ்ரல் அமைப்பு

பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கை தேர்தலில் பாதிப்புக்களை ஏற்படுத்தும் என பவ்ரல் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

எட்டு பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டும் இரண்டு அத்தியட்சகர்களுக்கு கட்டாய ஓய்வு வழங்கப்பட்டும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தேர்தல் காலத்தில் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக எடுக்கப்படும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் தேர்தலை நேரடியாக பாதிக்கும் என பவ்ரல் அமைப்பின் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட தரப்பினருக்கு ஆதரவு அளிக்காவிட்டால் தமக்கு இதே நிலை ஏற்படும் என பொலிஸ் உத்தியோகத்தர்கள் அச்சமடையக் கூடுமென அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இவ்வாறான நடவடிக்கைகளின் மூலம் பொலிஸ் உத்தியோகத்தர்களின் சுயாதீனத் தன்மைக்கு குந்தகம் ஏற்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது சரியான முறையில் கடமைகளை ஆற்றத் தவறிய பொலிஸ் உத்தியோகத்தர்களே இவ்வாறு தண்டிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கத் தரப்பு வட்டாரச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஓ-6)

# வலி. மேற்கில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி அதிகரிப்பு

(பொன்னாலை)

வலி மேற்குப் பிரதேசத்தில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனைகள் அதிகரித்துக் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

சங்கானை, அராலி, மூளாய், பொன்னாலை, சுழிபுரம், துணவி மற்றும் அதை அண்டிய அயற் பிரதேசங்களில் உற்பத்திகளும் விற்பனைகளும் பெரிதும் அதிகரித்து காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதிகளிலுள்ள குறிப்பிட்ட சில வீடுகளில் காலை முதல் இரவு வரை விற்பனைகள் மிகத் தீவிரமாக இடம்பெற்றுவருவதாகவும் இதனை குடித்து விட்டுச் செல்லும் பாவனையாளர்கள் அயல் வீடுகளிலுள்ளோருக்கு பெரும் தொல்லைகளைக் கொடுத்து வருவதாகவும் பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு விற்பனை செய்யப்பட்டு வரும் கசிப்பை குடித்துவிட்டுச் செல்வோர் செய்யும் அட்டகாசங்களால் பாடசாலை மாணவர்கள் இரவு நேரங்களில் கற்கமுடியாத சூழ்நிலை தோன்றியிருப்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

சட்டவிரோத கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையைக் கட்டுப்படுத்த பொலிஸார் தீவிர நடவடிக்கைகளை எடுக்கும் அதேவேளை விற்பனையில் ஈடுபடுவோரை சட்டத்தின் முன் நிறுத்தி இனிவரும் காலங்களிலும் இவ்வாறான நடவடிக்கைகள் தொடராதிருப்பதை உறுதி செய்ய வேண்டுமென்றும் பொதுமக்கள் காரிக்கை விடுக்கின்றனர். (6-49)

# பெண்சிசு மற்றும் குடும்பஸ்தரின் சடலங்கள் பொலிஸாரால் மீட்பு

(கொழும்பு)

பிறந்து சில தினங்களேயான பெண் சிசுவொன்றினதும் குடும்பஸ்தர் ஒருவரினதுமான இரு சடலங்கள் இருவேறு பிரதேசங்களிலிருந்து பொலிஸாரால் கடந்த புதன்கிழமை மீட்கப்பட்டுள்ளன.

மதவாச்சி மற்றும் வெல்லம்பிட்டி ஆகிய பிரதேசங்களிலிருந்தே இவ்விரு சடலங்களும் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பிரதேசவாசிகளிடமிருந்து கிடைக்கப்பெற்ற தகவல்களுக்கமைய குறித்த பிரதேசங்களுக்கு விரைந்த பொலிஸார் சடலங்களை மீட்டு பிரேத பரிசோதனைகளுக்காக வைத்தியசாலைகளில் ஒப்படைத்துள்ளனர்.

இந்த சம்பவங்கள் தொடர்பில் பொலிஸ் ஊடக பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சருமான பிரஷாந்த ஜயக்கொடி தகவல் தருகையில் கூறியதாவது,

மதவாச்சி, இக்கிரிகொல்லாவ பகுதியில் அமைந்துள்ள குளம் ஒன்றுக்கு அருகில் பெண் சிசுவொன்றின் சடலம் காணப்படுவதாகவும் மதவாச்சி பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய குறித்த சடலம் மீட்கப்பட்டது. பிறந்து சில தினங்களேயான இந்த சிசு படுகொலை செய்யப்பட்டே இங்கு போடப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இந்நிலையில் சிசுவின் தாயை கண்டறிவதற்காக சிசுவின் சடலம் மதவாச்சி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சம்பவம் தொடர்பில் மதவாச்சி பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை வெல்லம்பிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாதின்னாகொட பாலத்துக்கு அருகிலிருந்து ஆணின் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை அதிகாலை வெல்லம்பிட்டிய பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலொன்றுக்கமையவே இந்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கடந்த நான்கு தினங்களுக்கு முன்னர் உயிரிழந்திருக்கலாம் என்று கருதப்படும் நபரினது இந்த சடலம் இதுவரையில் அடையாளம் காணப்படவில்லை.

இச்சடலம் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பில் வெல்லம்பிட்டிய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஓ-6)

# இலங்கைக்கு போதைப் பொருள் கடத்திய இந்தியப் பிரஜைக்கு ஆயுள் தண்டனை

## வவுனியா மேல் நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

இந்தியாவில் இருந்து இலங்கைக்குப் போதைப்பொருள் கடத்தி வந்த குற்றச்சாட்டில் இந்திய பிரஜையான சின்னச்சாமி மணி என்பவருக்கு எதிராக வவுனியா மேல் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கொன்றில் மேல் நீதிமன்ற நீதிபதி ஜெ. விஸ்வநாதன் ஆயுள் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்துள்ளார்.

கடந்த 2005 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 11 ஆம் திகதி மன்னார் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவல் ஒன்றையடுத்து மன்னாரில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற தனியார் பஸ் ஒன்றை மறித்து சோதனையிட்ட போது அதில் பிரயாணம் செய்த இந்தியப் பிரஜையான சின்னச்சாமி மணி என்பவர் போதைப் பொருள் பார்சல் ஒன்றினை தமது வயிற்றுப் பகுதியில் இரகசியமாக மறைத்து வைத்திருந்தமை பொலிஸாரினால் கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து சந்தேக நபர் கைது செய்யப்பட்டு மன்னார் பொலிஸாரினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதுடன் அவரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட போதைப் பொருள் பார்சலும் அரச இரசாயனப் பகுப்பாய்வாளர்களின் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டது.

சந்தேக நபரிடமிருந்து கைப்பற்றப்பட்ட 1946.2 கிராம் நிறையுடைய இந்தப் போதைப் பொருளில் இரசாயன பகுப்பாய்வின் போது 436.7 கிராம் நிறையுடைய தூய ஹெரோயின் இருந்தமை கண்டறியப்பட்டது. இதனையடுத்து அபாயகரமான ஔடதங்கள் சட்டத்தின்கீழ் சந்தேக நபருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு விசாரணைகள் நடைபெற்றன.

பொலிஸ் சப்இன்ஸ்பெக்டர் லலித் திசாநாயக்க, பொலிஸ் சார்ஜன்களான ஜயலத், பிரேமதாஸ, செனவிரத்ன, திலகரத்ன, தர்மபால ஆகியோரும் அரச இரசாயன பகுப்பாய்வாளர் குமுதினி ராஜபக்ஷ ஆகியோருட்பட பலர் நீதிமன்றில் ஆஜராகி சாட்சியமளித்தனர். சாட்சிகளை அரச சட்டத்தரணி செல்வி நளினி கந்தசாமி நெறிப்படுத்தினார்.

விசாரணைகளின் போது சாட்சியமளித்த எதிரியாகிய சின்னத்தம்பி மணி, தான் அடிக்கடி இந்தியாவில் இருந்து இலங்கைக்கு எந்த விதமான குடிவரவு, குடியகல்வு சட்டத்திட்டங்களுக்கு அமையாத வகையில் வந்து சென்றதாகவும் கடைசியாக அதிகப்பணம் வாங்குவதற்காக இலங்கைக்கு வந்ததாகவும் தெரிவித்ததை மன்று ஏற்றுக் கொள்ளவில்லை.

போதைப் பொருள் எதிரிகள் உடைமையில் இருந்து கைப்பற்றப்பட்டதுடன் போதைப் பொருளைக் கடத்திச் செல்லும் கைங்கரியத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமை சாட்சியங்களின் ஊடாக சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்கப்பட்டதையடுத்து, நீதிமன்றம் அவருக்கு ஆயுட்காலச் சிறைத் தண்டனை வழங்கி தீர்ப்பளித்தது.

போதைப் பொருளை தமது உடைமையில் வைத்திருந்தமை, அதனை ஓரிடத்தில் இருந்து மற்றுமொரு இடத்திற்குக் கொண்டு சென்றமை ஆகிய இரண்டு குற்றங்களுக்கும் நீதிமன்றத்தினால் தனித் தனியாக ஆயுட்காலச் சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது. (ஓ-6)

# நெற்பீடைகளும் முகாமைத்துவமும்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...




**கலாநிதி கு.மிகுந்தன்**
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்


### இலையை வெட்டியுண்ணும் புழு பூச்சிகள்

நெல்லில் இலையை வெட்டியுண்ணும் புழுக்களினாலும் விளைச்சலில் பாதிப்பு ஏற்படுகின்றது. இப் பூச்சிப் பீடைகளில் அநேகமானவை வண்ணத்துப் பூச்சி மற்றும் அந்துப் பூச்சிகளைக் கொண்டுள்ள லெப்பிடொப்தீரா (Lepidoptera) வருணத்தைச் சார்ந்தவையாகும்.

வண்ணத்துப் பூச்சியிலும் அந்துப் பூச்சியிலும் சேதத்தை ஏற்படுத்துவது குடம்பி அல்லது புழு பருவமாகும். இவற்றினது வாழ்க்கை வட்டத்தில் முட்டை → குடம்பி → கூட்டுப்புழு → நிறைவுடலி என்னும் முழுமையான நான்கு பருவ நிலைகள் காணப்படும்.

இவற்றுள் இலையை வெட்டியுண்ணும் பருவமாக குடம்பி மட்டுமே காணப்படும். இந்தப் பருவத்திலே வெட்டியுண்ணும் உணவினூடாக இப்பூச்சி தனது வாழ்க்கைக் காலத்துக்குரிய தேவையான சக்தி அனைத்தையும் சேமித்து வைக்கும். முட்டையோ, கூட்டுப் புழுவோ உணவு உண்ணாத பருவங்கள். நிறைவுடலியான வண்ணத்துப் பூச்சியும், அந்துப் பூச்சியும் வெட்டியுண்ணும் வாயுறுப் பற்றவை.

மாறாக இவற்றின் வாயுறுப்பு உறுஞ்சுவதற்காக மட்டுமே திரிபடைந்திருப்பதால் பூக்களிலுள்ள தேன் சுரப்பை குடித்தே வாழும். ஆதலினால் குடம்பி பருவத்திலேயே அதிகளவில் தமக்கு தேவையான சக்தியைப் பெற்றுக் கொள்ள வேண்டிய நிலையில் விரைந்து சேதத்தை ஏற்படுத்துகின்றன.


இலையை வெட்டியுண்ணும் பருவமாகிலும் இந்த புழுப்பருவம் இவ்வகை பீடை வகைகளுக்கு மிகவும் முக்கியமானது.

நெற்பயிரில் சேதத்தை ஏற்படுத்தும் இவ்வகையான வெட்டியுண்ணும் (Defoliators) பூச்சி பீடைகள் பல. அவற்றைத் தொகுத்து தேவையான விபரங்களுடன் தரப்பட்டுள்ளன.

**வெட்டும் புழு (Cutworm or Army worm)**
**ஸ்பொடொப்தீரா மௌரீசியா**
**(Spodoptera Mauritia)**

இலைகளை கணக்கு வழக்கின்றி வெட்டி உண்ணும் இப்புழுவின் எண்ணிக்கை அதிகமானால் நெற்பயிர் அனைத்தும் வெட்டப்பட்டு பாரிய சேதத்திற்குள்ளாகிவிடும்.

அந்துப்பூச்சிகளின் முன் சோடி இறகுகளில் இராணுவ உடைபோன்று நிறங்கள் உருமறைப்பு செய்வது (Camouflage) ஆக இருப்பதனால் இதனை இராணுவ புழு (Army worm) என செல்லமாக அழைப்பார்கள். ஆனால் பின் சோடி இறகு கள் வெள்ளையாக அநேகமானவற்றில் நிறமேது மற்று (Transparent) ஆனால் விளிம்பில் கறுப்பு கோட்டுடன் காணப்படும். (படம் 1)



(படம் 1 வாழ்க்கைவட்டம்)

இந்த வகையில் பெண் அந்துப் பூச்சிகள் இலைகளில் முட்டையிடும். ஒரு பெண் அந்துப்பூச்சி 50-300 முட்டைகளை இடக்கூடியது. உட்கொள்ளுகின்ற உணவுக்கேற்பவும், முட்டையை இடுகின்ற சூழலுக்கேற்பவும் இந்த எண்ணிக்கை வேறுபடும். முட்டைகளை கூட்டாகவே இடும். அதிலும் முட்டைகளை இட்ட பின்னர் தமது வயிற்றறையின் நுனிப்பகுதியிலுள்ள சிறிய மயிர்களால் முட்டைகளை மூடிவிடும். தாய்மை என்பதற்குரிய அடையாளத்தை இந்த அந்துப் பூச்சிகளிலும், முட்டைகளை மூடிப் பாதுகாப்பதிலிருந்தும் புரியக்கூடியதாக உள்ளதல்லவா.


முட்டைகள் பொரிக்க 2-5 நாட்கள்தேவைப்படும். பொரித்து வெளிவருகின்ற புழுக்கள் நெற்பயிரின் இலைகளை வெட்டியுண்ணத் தொடங்கிவிடும். புழுப் பருவம் 17-32 நாட்கள் வரைநீண்டிருக்கும். இப்பூச்சி புழுப் பருவத்தை சரியான முறையில் பயன்படுத்திக் கொள்வதனால் இந்தப் பருவத்திலேயே அதிகமான அளவில் உணவை வெட்டி உண்ணும்.

உண்ணுவதும் கொஞ்ச நஞ்சமல்ல. பாகுபாடு ஏதுமின்றி எதையும் கவலைப்படாது நம்மிலும் ஒருசிலர் உண்ணுகிறார்களே அவர்களைப் போல நன்றாகவே உண்ணும். இடைவெளி எதுவும் விடாது இரவிலேயே அதிகமாக உண்ணும். அதனால் இவ்வகை புழுக்களினால் ஏற்படுத்தப்படும் சேதம் பெரியது.

தகுந்த சூழல் கிடைத்துவிட்டால் பின்பு இவற்றினது சேதத்தை தவிர்க்கவே முடியாது. நன்றாக தேவையானளவிற்கு உணவு உண்ட பின் புழு கூட்டுப்புழுவாக மாறும்.

கூட்டுப்புழுவாக மாற முன்பு புழு நெற்பயிரிலிருந்து கீழிறங்கி மண்ணினுள்ளேயே உரு மாறும். கூட்டுப் புழுக்கள் அடுத்த மழை வரும்வரை அப்படியே உறங்குநிலையில் மண்ணினுள் இருக்கும். முதல் மழை நன்றாக பெய்தால் மண்ணினுள்ள கூட்டுப்புழுவி லிருந்து நிறைவுடலியான அந்துப் பூச்சி வெளிவரும். இரவில் பறந்து திரியும் (Nocturnal) இந்த அந்துப் பூச்சியை கவர்ந்து அழிக்க வெளிச்சப் பொறியை (படம் 2) (Light trap) பயன் படுத்தலாம்.

10-VII



(படம் 2)

இந்த வெளிச்சப் பொறியை இலாந்தர் இலாம்பு ஒன்றுடனும் தட்டு ஒன்றுடனுமேயே உருவாக்கிக் கொள்ளலாம். தட்டு ஒன்றினுள் நீர் விட்டு அதனுள் சிறியளவு மண்ணெண்ணெய் விட்டு விடலாம். அந்த தட்டுக்கு மேலே இலாந்தரை தொங்க விடலாம். இலாந்தரின் வெளிச்சத்தில் ஈர்க்கப்பட்டு பறந்து வரும் அந்துப் பூச்சி இலாந்தரிலேயே அடிபட்டு அல்லது தட்டுப்பட்டு கீழுள்ள நீர்கொண்ட தட்டினுள் விழுந்து இறந்துவிடும்.

இதே பொறிமுறையை வெளிச்சத்தில் கவர்ந்திழுத்து அழிப்பதை இந்து சமய முறைகளுடன் தொடர்புபடுத்தி சொக்கப்பானை எரிப்பதனை உதாரணமாக்குவர். சொக்கப்பானை எரிக்கும் காலம் நெல்லில் பூச்சி பீடைகள் பெருகும் காலமாதலால் இரண்டு நிகழ்வுகளையும் இவ்வாறு தொடர்புபடுத்தி அழைப்பர். சொக்கப்பானை கிராமங்களிலுள்ள கோவில்களில் எரிக்கும் போது சுற்றவர உள்ள நெல்வயல்களில் உள்ள அந்துப் பூச்சிகள் அந்த வெளிச்சத்தில் கவரப்பட்டு அழிக்கப்பட்டுவிடும்.

புழுக்களை கட்டுப்படுத்துவது இலகுவான காரியமன்று. நீர்ப்பாசன முறையில் செய்கை பண்ணப்படும் நெல்லில் நீரை வயலில் கட்டுவதன் (Flooding) மூலம் புழுக்களை அழிக்கலாம்.

நீர் வற்றிவிட்டால் மண்ணினுள் கூட்டுப் புழுவாதல் இலகுவானதால் வய லினுள் நீரை கட்டிவைப்பது ஒருவகையில் கூட்டுப் புழுவாதலையும் தவிர்க்கலாம்.

இதற்கும் மேலாக புழுக்கள் அதிகமாக காணப்பட்டால் அற்றபியூரோன் போன்ற பூச்சி நாசினிகளையும் பயன்படுத்தலாம்.

திட்டமிட்ட நெற்பயிர்ச்செய்கை மூலம் இப் பீடையைக் கட்டுப்படுத்துவது சாத்தியமாகும். (தொடரும்)

---

## பச்சிலைப்பள்ளி பகுதியில் உள்ள 4 கி.அ. பிரிவுகளில் மீள்குடியேற்றம்

### திங்கள், செவ்வாய்க்கிழமைகளில் நடைபெறும்

(கொழும்பு)

எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமை மற்றும் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆகிய தினங்களில் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பச்சிலைப்பள்ளியில் மீள்குடியேற்றம் இடம்பெறவுள்ளதாக கிளிநொச்சி அரசாங்க அதிபர் கேதீஸ்வரன் தெரிவித்தார்.

பச்சிலைப்பள்ளி (பளை) பிரதேச செயலர்களினால் நான்கு கிராம சேவையாளர் பிரிவுகளில் இடம்பெயர்ந்த மக்கள் மீள் குடியேற்றம் செய்யப்படுவார்கள் என அவர் குறிப்பிட்டார்.

இம் மீள்குடியேற்றம் குறித்து கிளிநொச்சி அரசாங்க அதிபர் மேலும் தெரிவிக்கையில்,

தற்காலிகமாக வெளிமாவட்டத்தில் உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் வசிக்கும் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பச்சிலைப் பள்ளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட புலோப்பளை மேற்கு, புலோப்பளை முல்லையடி, பளை நகரம் ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களே மீள்குடியேற்றம் செய்யப்படவுள்ளனர்.

தற்காலிகமாக பதிவு நீக்கத்துடன் வருபவர்கள் மட்டுமே மீள்குடியேற்றத்திற்கு அனுமதிக்கப்படுவார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஓ-6)



யா/ வல்வை மகா வித்தியாலயத்தின் வருடாந்த மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வல்வெட்டித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் பி. கிருஷ்ணானந்தன் போட்டியை ஆரம்பித்து வைப்பதையும் அருகில் வித்தியாலய அதிபர் திருமதி நகுலாம்பிகை குணேந்திரராஜா நிற்பதையும் படத்தில் காணலாம்.

பட்டிமன்றத்தில் அரைச்சுற்று முடிந்தது.
தலைவருக்கோ தலைச்சுற்று வந்தது.
-மூனைவர்

உலகநாயக வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# மக்கள் சமூகம் மீட்சி பெற ஊடக தர்மம் அவசியம்

யாழ்ப்பாணத்தில் மிக மோசமானதும் வேதனைக்குரியதுமான பெரும் குறைபாடு ஒன்று உண்டு. அது என்னவெனில் எடுத்த எடுப்பில் எந்த ஆதாரமும் இல்லாமல் பழிசுமத்துவது அல்லது குற்றச்சாட்டுக்களைக் கூறுவது அல்லது விஷமத்தனமான பொய்ப்பிரசாரங்களை முன்வைப்பது.

இந்த நிலைமை எங்கள் சமூகத்தின் நேர்மைத்தனத்திற்கு மிகப் பெரும் சவாலாகும். ஒரு மக்கள் சமூகம் எழுந்தமானமாக–தமக்கு வாய்த்தால்போல் கதை கட்டுவது அதை பரப்புவது என்ற கொடூரத்தை மிகச் சாதாரணமாகச் செய்யுமாயின் அந்த மக்கள் சமூகம் தாங்களே தங்கள் தலையில் மண்ணை அள்ளிக் கொட்டுகின்றன என்றே கூற வேண்டும்.

இந்தப் பரிதாப நோய் பல வருடங்களாக எங்கள் மத்தியில் பரவி வருகின்றது. இந்தப் பொறுப்பற்ற நோயிலிருந்து எவரும் தப்ப முடியாதென்ற சூழமையை உருவாக்கி விட்டது. இந்தப் பணியில் ஊடகங்களுக்கு நிறைந்த பங்குண்டென்பது மறுக்க முடியாத உண்மை.

பொதுவில் ஊடகங்கள் வெளியிடுகின்ற செய்திகளையே மக்கள் நம்புகின்றனர். மக்கள் நம்புகின்றார்கள் என்பதற்காக ஊடகங்கள் தவறான பாதையை–வழிப்படுத்தலைச் செய்தல் ஆகாது.

ஊடகங்களை மக்கள் நம்புதல் என்ற நிலை நீடிக்க வேண்டுமாயின்; முதலில் ஊடகங்கள் உண்மையை உரைப்பவையாக இருப்பதுடன் பக்கசார்பற்றுச் செயற்படுவதும் கட்டாயமாகும்.

ஏனெனில் மக்களை வழிப்படுத்துவது ஊடகங்கள். அவ்வாறெனில்; அவை சரியாகச் செயற்பட்டிருந்தால்; இத்துணை பேரழிவுகளும் இழப்புகளும் துயரங்களும் நேர்ந்திருக்காதல்லவா?

ஆக. ஊடகங்கள் தத்தம் கொள்கைகளைச் சரியென நினைத்துக் கொள்கின்றன. இந்த நினைப்பில் அவர்கள் சார்ந்த சமூக ; பொருளாதார ; அரசியல் காரணிகள் கணிசமாகச் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதும் மறுக்க முடியாத உண்மை.

எனினும் நீண்ட காலத்தில் இதேநிலை நீடித்திருக்குமாயின் மக்கள் ஊடகங்களை துக்கி எறிவர். இதற்கு யாழ்ப்பாணத்தில் வெளிவரும் இரண்டு பஞ்சாங்கங்களும் நல்ல உதாரணம். பஞ்சாங்கங்கள் ஒன்று சேர்ந்து சரியான கணிப்புகளை வழங்க வேண்டும் என இவ்விடத்தில் பல தடவைகள் கேட்டிருந்தோம்.

ஆனால் அது விடயத்தில் ஒற்றுமை ஏற்படவில்லை. இதன் விளைவு இரண்டு சிவராத்திரி. இதில் இன்றைய நாளில் நடைபெறும் சிவராத்திரியே திருக்கேதீஸ்வரம் உள்ளிட்ட பல சிவாலயங்களில் அனுஷ்டிக்கப்படுகின்றன.

இதன் முடிபு என்னவாகும் என்பதை உரியவர்கள் மிக விரைவில் உணர்வார்கள். மக்கள் கேட்கும் போது; அழைக்கும்போது அதற்கு உரிய மதிப்பைக் கொடுக்கத் தெரிய வேண்டும்.

இல்லையேல் காலம் நிச்சயம் பாடம் புகட்டும். பஞ்சாங்கங்களுக்கு ஏற்படுகின்ற இந்நிலை இலங்கையில் உள்ள ஊடகங்களுக்கும் பொருந்தும்.

# சிவராத்திரியில் சிந்திக்க பண்டிதமணியின் கருத்துக்கள்

தமிழ் மூதறிஞர் பண்டிதமணி தனது உயிருக்கு உயிராக சைவத்தையும் தமிழையும் நேசித்தவர். இவரின் மறைவு நக்கீரர் பரம்பரையில் ஒரு பெரு வெளியாகும். பண்டிதமணி அவர்கள் தமிழ்மொழிக்கு ஒரு தமிழ் மலை. சைவ சமயத்துக்கு ஒரு அகல் விளக்கு. அவர் பிழையான செயல் எதற்கும் விட்டுக் கொடுக்காதவர். தமிழையும் சைவ சமயத்தையும் பழித்தவர்களுக்கு தக்க பதிலளிக்காமல் விட்டதில்லை.

## இன்று பண்டிதமணி கணபதிப்பிள்ளையின் நினைவு தினம்

சமயக் கருத்துக்களைத் தெரிவிப்பதில் தெளிவுபடுத்துவதில் பின்னிற்பதில்லை. பண்டிதமணி அவர்கள் மட்டுவிலிலே 1899 ஆம் ஆண்டு யூன்மாதம் 27 ஆம் திகதி பிறந்தவர். இவர் 87 ஆண்டுகள் வாழ்ந்து தமக்கென ஒரு முத்திரை பதித்தவர்.

சிவராத்திரி விரதத்தை அனுட்டிக்கும் மக்களுக்கு சிவராத்திரி பற்றிய பல சிந்தனைகளை காலத்துக்குக் காலம் தெளிவு படுத்தியர். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் இயற்றிய சைவ வினாவிடையில் முதல் வினாவிடை உலகத்துக்கு கருத்தா யார்? சிவபெருமான் என்று விடைதருகின்றார். இன்று பாடசாலைகளில் பாட நேரங்களில் கற்பிக்க வேண்டிய பாடம் அது. அதுபோல சைவத் திருக்கோயில்களிலும் மிகவும் உச்சரிக்க வேண்டிய வினாவும் விடையும் ஆகும்.

ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையும் புனிதம் அடைவதற்கு அக்கருத்து உபகாரமாக இருக்கின்றது. ஒரு காலத்தில் தேவர்களுள் சிறந்தவர்களாகிய பிரமர விஷ்னு ஆகியோரால் குறித்த வினா விடைகள் சிந்திக்கப்பட்டது.

பிரமா இந்த உலகத்தைப் படைத்தவர். விஷ்னு பிரமா படைத்த உலகத்தை நிலைக்கச் செய்து காப்பவர். இவர்களின் அகங்காரத்தினால் பெரிய யுத்தம் மூண்டது. இருவருக்கும் மத்தியில் தோன்றியுது ஆதியும் அந்தமும் இல்லாத அருள் பெரும் சோதி. பிரமா விஷ்ணுக்கள் கேட்டுக் கொண்டமைக்கு அமைவாக அவர்கள் பிரார்த்தித்த புண்ணிய தினமே சிவராத்திரி தினமாகும். இதனைச் சிவராத் திரி புராணத்தில் சிறப்பாகக் சொல்லப்பட்டுள்ளது.



பண்டிதமணி அவர்களும் கந்தபுராணத்தில் தட்ச காண்டத்துக்கு உரை செய்து இருக்கிறார். இங்கு வரும் அடிமுடி தேடு படலத்தில் சிவராத்திரி மகிமையை சிறப்புற எழுதியுள்ளார்.

பணிதமணி ஐயாவிடம் சிவராத்திரி விரதம் குறித்து எழுந்த இரண்டாவது சிந்தனையில் 'ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டு ஒன்றாகும்' என்பதை வெளிப்படுத்துகின்றார். மூன்றாவது சிந்தனையாக 'இந்தச் சரீரம் நமக்கு கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாகும்.

பண்டித மணி ஐயாவின் நினைவு தினமான இன்றைய தினம் சிவராத்திரி தினமாக அமைவதால் சிவனோடு கலந்த ஐயாவையும் சிவலிங்கப் பெருமானாக நினைந்து வழிபாடு செய்து இன்புறுவோமாக.

*கா. சிவபாலன்.*

# எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தில் மக்களுக்கான பல்வேறு நிவாரணங்கள் மற்றும் சலுகைகள் உள்ளடக்கப்படும்

## அமைச்சர் சியம்பலாபிட்டிய

எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தில் நாட்டு மக்களுக்கு பல்வேறு நன்மைகள் அளிக்கப்படவுள்ளதாக அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

2010 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் நாட்டு மக்களுக்கு பல்வேறு நிவாரணங்கள் மற்றும் சலுகைகள் உள்ளடக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மஹிந்த சிந்தனையின் அடிப்படையில் வரவு செலவுத் திட்ட யோசனை முன்னெடுக்கப்படும் எனவும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே தமது பிரதான நோக்கம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வரவு செலவுத் திட்ட துண்டு விழும் தொகையும் 7.5 வீதத்திற்கு குறைவாகப் பேணப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு அளித்த செவ்வியின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். (ஓ-6)

# ஆறாவது பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட 30 முக்கிய சட்ட மூலங்கள் நிறைவேற்றப்படவில்லை

## சிரேஷ்ட பாராளுமன்ற உத்தியோகத்தர்

(கொழும்பு)

கடந்த ஆறாவது பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட 30 முக்கிய சட்ட மூலங்கள் நிறைவேற்றப்படவில்லை என சிரேஸ்ட பாராளுமன்ற உத்தியோகத்தர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார். குறித்த சட்ட மூலங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தால் நாட்டின் நல்லாட்சிக்கு பேருதவியாக அமைந்திருக்கும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

மக்களின் அன்றாட வாழ்க்கை, பொருளாதாரம் , அரசியல் மற்றும் நல்லாட்சி தொடர்பில் இந்த சட்ட மூலங்கள் முக்கிய மானவை என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த சட்ட மூலங்களை நிறைவேற்றிக் கொள்வதில் ஆளும் எதிர்க்கட்சிகளுக்கு இடையில் பொதுவான ஓர் இணக்கப்பாடு காணப்படவேண்டியது மிகவும் இன்றியமையாததென அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

தேசிய நலனை அடிப்படையாகக் கொண்ட யோசனைத் திட்டங்களை நிறைவேற்றக் கூடிய வகையிலான பொறிமுறையொன்று உருவாக்கப்படவேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற விவாதங்களின் போது நன்மதிப்பை ஈட்டக் கூடிய வகையிலான உரைகளை ஆற்ற வேண்டும் என்பதனை அடிப்படையாகக் கொண்டு அநேக அரசியல் தலைவர்கள் செயற்பட்டு வருவதாகவும் மிகவும் அரிதாகவே ஆக்கபூர்வான உரைகள் இடம் பெறுவதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

எதிர்வரும் ஏழாவது பாரளுமன்றத்தில் நாட்டு மக்களின் நலனை அடிப்படையாகக் கொண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ஓ-6)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்


## மதமும் ஒழுக்கமும்



நீ சிறந்த மகான் ஒருவரைப் போன்ற மனநிலையைக் கொள். அவராகவே நீ ஆகிவிடுவாய். புத்தரைப் போன்ற மனநிலையைக் கொள். புத்தர் பெருமானாகவே நீ ஆகிவிடுவாய். உயர்ந்த மனநிலைதான் வாழ்க்கையாக அமைகிறது; வலிமையைத் தருகிறது; உயிர் நாடியாக விளங்குகிறது. அத்தகைய மனநிலை இல்லாமற் போனால் அறிவாற்றல் எவ்வளவு தான் வேலை செய்தாலும் கடவுளை அடைய முடியாது.

ஒரே வார்த்தையில் வேதாந்தத்தின் இலட்சியம்: மனிதனின் உண்மையான இயல்பை அறிந்து கொள்வது என்பது தான். மேலும் கண்ணுக்குப் புலப்படும் கடவுளாக விளங்கும் உன் சகோதரனையே நீ வழிபட முடியாவிட்டால் கண்ணுக்குப் புலப்படாமல் மறைந்திருக்கும் கடவுளை எப்படி நீ வழிபட முடியும்? – இதுவே வேதாந்தம் அறிவுரையாக வழங்கும் செய்தியாகும்.

# ஒபாமாவின் கொள்கைக்கு புளோரிடாவில் எதிர்ப்பு



(வோஷிங்டன்)

அமெரிக்க அதிபர் ஒபாமாவின் நாசா தொடர்பான புதிய கொள்கையால் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த புளோரிடாவில் எதிர்ப்பு கிளம்பி உள்ளது. மேலும் இதனால் வேலையிழப்பு அபாயம் ஏற்படுமோ என்ற அச்சமும் விஞ்ஞானிகளிடம் ஏற்பட்டுள்ளது.

அமெரிக்க அதிபர் ஒபாமா கடந்த மாதம் முதலாம் திகதி சமர்ப்பித்த பட்ஜெட்டில் 2011 ஆம் ஆண்டிற்காக 'நாசா'விற்கு மொத்தம் 91 ஆயிரத்து 200 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. இதில் எதிர்வரும் 2020 ஆம் ஆண்டு நிலவிற்கு மனிதனை அனுப்பும் திட்டத்தை இரத்து செய்யவும் பரிந்துரைக்கப்பட்டது.

அதற்கு மாறாக வர்த்தக ரீதியிலான விண்வெளி ஓடம் மற்றும் புதிய தொழில்நுட்பங்களின் வளர்ச்சிக்காக ஆண்டுக்கு 28 ஆயிரத்து 800 கோடி ரூபாய் என ஐந்தாண்டுகளுக்கு செலவிட திட்டமிடப்பட்டது.

இது குறித்து புளோரிடாவைச் சேர்ந்த ஜனநாயக மற்றும் குடியரசு கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் கடந்த வாரம் அதிபர் ஒபாமாவிற்கு எழுதிய கடிதத்தில் விண்வெளியில் நமது சாதனைகளை புதுப்பித்துக் கொண்டே இருக்க வேண்டும். மேலும் ஊக்குவிக்க வேண்டும். அவ்வாறு செய்யவில்லை என்றால் விண்வெளியில் நமது சாதனைகளுக்கு தற்போது சவால் விடும் மற்ற நாடுகள் நம்மை வென்றுவிடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் அதிகரித்து வரும் நிதிப் பற்றாக்குறையை தவிர்க்க அதிபர் ஒபாமா இத்தகைய நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளார். ஆனால் அதிபரின் இத்தகைய நடவடிக்கையால் தங்களுக்கு வேலையிழப்பு ஏற்படுமோ என புளோரிடாவைச் சேர்ந்த விஞ்ஞானிகள் மற்றும் தொழில்நுட்பத் திறமையாளர்கள் அஞ்சுகின்றனர். ஏனென்றால் 'நாசா'வில் பணியாற்றும் ஆயிரக்கணக்கான பணியாளர்கள் புளோரிடாவைச் சேர்ந்தவர்கள். மேலும் அதிபர் தேர்தலில் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு மாகாணம் புளோரிடா. இங்கு தற்போது அதிபரின் தீர்மானத் திற்கு எதிர்ப்பு கிளம்பியுள்ளது. (ஓ-6)




# 80 சதவீத அமெரிக்கர்கள் கடவுளை நம்புகிறார்கள்

## ஆய்வில் தகவல்

(வோஷிங்டன்)

எல்லாம் அவன் செயல் என நம் நாட்டில் சிலர் கூறுவதுண்டு. இது அமெரிக்கர்களுக்கும் பொருந்தும். ஆம், எந்த ஒரு விடயத்திலும் முடிவு எடுக்கும்போது, இறைவன் உதவியை நாடுவதாக 80 சதவீத அமெரிக்கர்கள் கூறியுள்ளனர்.

அமெரிக்கர்களிடம் இறை நம்பிக்கை எந்த அளவில் உள்ளது என்பது குறித்து, யுனிவர்சிட்டி ஆப் டொரன்டோவின் சமூகவியல் பேராசிரியர் ஸ்காட் ஸ்கீமேன், இரண்டு விதமான ஆய்வை நடத்தினார்.

இதில் அமெரிக்கர்களுக்கு இறைவன் மீதான நம்பிக்கை அதிக அளவில் இருப்பது ஆய்வில் தெரியவந்துள்ளது.

மேலும் கல்வியறிவு மற்றும் வருமான அடிப்படையில் வழிபடும் முறையில் மாறுபாடு இருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

புதிய தொழில் அல்லது வேலையில் ஈடுபடும்போதும், இக்கட்டான நேரத்திலும் கடவுளின் உதவி மற்றம் வழிகாட்டுதலையே நம்பியிருப்பதாக ஆய்வில் பங்கேற்றவர்களில் 82 சதவீதம் பேர் தெரிவித்துள்ளனர். ஒருவருடைய வாழ்வில் நல்லது நடப்பதும் ; கெட்டது நடப்பதும் இறைவனின் கையில்தான்; உள்ளது என 71 சதவீதம் பேர் நம்புகின்றனர்.

தங்களுடைய வாழ்க்கை பாதையை இறைவன் தான் வழிநடத்திச் செல்கிறார் என 61 சதவீதம் பேர் தெரிவித்துள்ளனர். எந்த ஒரு விடயத்திலும் அதிக சிரமப்பட்டு திட்டமிடுவது தேவையற்றது. ஏனெனில், எல்லாம் தலைவிதிப்படிதான் நடக்கும் என்ற கருத்தை 32 சதவீதம் பேர் ஒப்புக் கொள்கின்றனர்.

மேல் நாட்டு மக்கள் இறை நம்பிக்கையில் ஈடுபாடு இல்லாதவர்கள் என்ற பரவலான கருத்து நிலவுகிறது. ஆனால் மேல்நாட்டு மக்களில் மத நம்பிக்கை உள்ளவர்கள் வேண்டுமானால் இப்படி இருக்கலாம் . மத நம்பிக்கை உள்ளவர் இறைவனை அதிக அளவில் நம்புகிறார்கள் என்பது என்னுடைய ஆய்வின் மூலம் தெரிய வந்துள்ளது என ஸ்கீமேன் தெரிவித்துள்ளார். (6)

# மியன்மாரின் புதிய சட்டத்துக்கு ஐக்கிய நாடுகள் சபை கண்டனம்

வெளிநாட்டவர்களை திருமணம் செய்தவர்கள் தேர்தலில் போட்டியிட தடை செய்யும் சட்டம் ஒன்றை மியன்மார் அரசு கொண்டு வர திட்டமிட்டுள்ளது. இதனால் அந்த நாட்டில் ஜனநாயக ஆட்சி அமைந்திட போராடி வரும் எதிர்க்கட்சித் தலைவி சூ-கீ தேர்தலில் போட்டியிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. (சூகியின் கணவர் மைக்கேல் ஏரீஸ் இங்கிலாந்துகாரர் என்பது குறிப்பிடத்தக்கது).

மியன்மார் அரசின் இந்தப் புதிய சட்டத்துக்கு ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் கூறுகையில், மியான்மாரில் அமைதியான அரசியல் சூழல் திரும்பவேண்டும் என்ற ஐ.நா.சபையின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுகிற மாதிரி இந்த சட்டம் இருப்பதாக தெரியவில்லை. இது மிகவும் கண்டனத்துக்கு உரியது என்றார்.

அமெரிக்காவின் வெளியுறவுச் செய்தி தொடர்பாளர் கிராவ்லி கருத்து தெரிவிக்கும் போது மியன்மார் அரசு ஜனநாயகத்தை கேலிக் கூத்தாக்கிவிட்டது என்றார். (ஓ-6)

# இராணுவத் தளபதியின் பதவி நீடிப்புக்கு பாகிஸ்தான் ஆளும் கட்சி கடும் எதிர்ப்பு

(லாகூர்)

பாகிஸ்தான் இராணுவ தளபதி அஷ்பக் பர்வேஸ் கயானியின் பதிவிக் காலத்தை நீடிக்கும் எண்ணம் அதிபர் சர்தாரிக்கு இல்லை என பாகிஸ்தான் மக்கள் கட்சித் தலைவர் பவுசியா வகாப் தெரிவித்துள்ளார்.

முன்னாள் அதிபர் முஷாரப்பால் இராணுவ தளபதியாக நியமிக்கப்பட்டவர் அஷ்பக் பர்வேஸ் கயானி. பாகிஸ்தான் புலனாய்வு அமைப்பின் தலைவர் அகமது ஷுஜா பாஷாவுக்கு மேலும் ஓராண்டு பதவி நீடிப்பு வழங்கி கடந்த புதன்கிழமை உத்தரவிட்டுள்ளார். இதற்கு பாகிஸ்தான் பிரதமர் கிலானியும் ஒப்புதல் அளித்துள்ளார். அமெரிக்காவின் சொல்படி பயங்கரவாதிகளுக்கு எதிராக பாகிஸ்தான் இராணுவம் நடவடிக்கை மேற்கொள்வதால் இராணுவத் தளபதி கயானியின் பதவிக் காலத்தை மேலும் இரண்டு ஆண்டுக்கு நீடிக்கலாம் என அமெரிக் காவும் கருதுகிறது.

இப்பதவியில் நீடிக்க விரும்புவதாக கயானியும் தனது ஆதரவாளர்கள் மூலம் கருத்தை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அதிபர் ஆசிப் அலி சர்தாரிக்கு நெருக்கமான எம்.பி. யும் பாகிஸ்தான் மக்கள் கட்சியின் தலைவர் களில் ஒருவருமான பவுசியா வகாப் குறிப் பிடுகையில் இராணுவ தளபதியின் பதவிக் காலத்தை நீடிப்பது நாட்டுக்கும் ஜனநாயகத் துக்கும் நல்லதல்ல.

கயானியின் பதவிக் காலத்தை நீடிக்கும் எண்ணம் சர்தாரிக்கு இல்லை. ராணுவ தளபதியின் பதவிக் கால நீடிப்பை எங்கள் கட்சி எதிர்க்கும் என்றார். (ஓ-6)

# புதிய அதிபர் பதவி ஏற்பின் போது சிலி நாட்டில் மீண்டும் பூகம்பம்

(சான்டியாகோ)

தென் அமெரிக்க நாடான சிலியில் கடந்த மாதம் 27 ஆம் திகதி பயங்கர பூகம்பம் ஏற்பட்டது. இத்துடன் சுனாமியும் தாக்கியது. இதில் 800-க்கும் மேற்பட்டோர் பலியானார்கள். அதன் பிறகும் அடிக்கடி பூகம்பம் ஏற்பட்டு வருகிறது.

இந்த நிலையில் அந்த நாட்டில் புதிய அதிபராக செபாஸ்டின் பினரா தேர்வு செய்யப்பட்டார். அவரது பதவி ஏற்பு விழாவில் பிரைசோ நகரில் நடந்து கொண்டிருந்தது. அப்போது திடீரென நில நடுக்கம் ஏற்பட்டது. இதில் பதவி ஏற்பு விழா மண்டபமும் குலுங்கியது. உள்ளே அவசர அவசரமாக பதவி ஏற்பு விழாவை முடித்துக் கொண்டு அனைவரும் பாதுகாப்பான இடத்துக்கு விரைந்தனர்.

இந்த நிலநடுக்கம் ரிக்டர் ஸ்கேல் அளவுக்கு 6.9 புள்ளியாக இருந்தது. அங்குள்ள ஹிக்கின்ஸ் பிராந்தியம் முழுவதும் பூகம்பத்தால் குலுங்கியது. எனவே மக்கள் அலறியடித்து ஓடினார்கள்.

நிலநடுக்க மைய புள்ளி கடல் அருகே இருந்தது. எனவே சுனாமி எச்சரிக்கை விடப்பட்டது. இதனால் கடலோர பகுதி மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டனர். ஆனால் சுனாமி எதுவும் தாக்கவில்லை. முதல் பூகம்பம் ஏற்பட்ட அடுத்த சில நிமிடத்தில் மேலும் ஒரு பூகம்பம் ஏற்பட்டது. இது சிறிய அளவில் இருந்தது. இதைத் தொடர்ந்து 12 தடவைக்கும் மேல் லேசான அதிர்வுகள் ஏற்பட்டன.

கடந்த 27 ஆம் திகதி பூகம்பத்துக்கு பிறகு மட்டும் இதுவரை 250 தடவை நில அதிர்வு ஏற்பட்டு உள்ளது. எனவே மக்கள் பீதியில் உள்ளனர். (ஓ-6)



சிலிநாட்டில் கடந்த மாதம் ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்தை அடுத்து மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெட்ட வெளியில் தங்குகின்றனர்.

# சட்டவிரோதமாக தங்கியதற்காக 12 இந்தியர்கள் பிரிட்டனில் கைது

(லண்டன்)

சட்டவிரோதமாக பிரிட்டனில் தங்கி வேலை பார்த்து வந்ததாக , ஒரு பெண் உட்பட 12 இந்தியர்களை பிரிட்டன் குடியேற்ற அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

பிரிட்டனில் சட்டவிரோதமாக குடியேறுபவர்கள் மீது அந்நாட்டு அரசு கடுமையான நடவடிக்கை எடுத்து வருகிறது. அதன் தொடர்ச்சியாக ,ஹீத் ரூவில் உள்ள ஒரு சரக்கு கிட்டங்கியில் வேலை பார்த்த பணியாளர்களிடம் குடியுரிமை பற்றி விசாரணை நடத்தினர்.

அதில் இந்தியாவைச் சேர்ந்த எட்டுப் பேரும் , சட்டவிரோதமாக குடியேறியுள்ளது தெரியவந்தது. அவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர். அந்தக் கிட்டங்கி நிறுவனத்துக்கு 58 இலட்ச ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

அதேபோல் , ஹேஸ் மற்றும் சவுத் ஆல் என்ற பகுதிகளிலுள்ள மூன்று குடியிருப்புக்களிலும் சோதனை நடத்தப்பட்டது. அதில் ஆறு பேர் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் ஒரு பெண் உட்பட நான்கு பேர் இந்தியர்கள். இருவர் தென்னாபிரிக்காவைச் சேர்ந்தவர்கள்.

இந்த 14பேரில் ஏழுபேருக்கு, குடியுரிமையை இரத்துச் செய்து சொந்த நாட்டிற்கு திரும்ப அனுப்பவும் , மற்றவர்களுக்கு நிறுவனம் மூலம் சுற்றுலா விசா எடுப்பதற்கும் உரிய நடவடிக்கைகளை அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர்.

பிரிட்டனில் முறையாக தங்கி வேலை பார்ப்பதற்குரிய ஆவணங்கள், பணியாளர்களிடம் இருக்கிறதா என்று சோதனை செய்யாத நிறுவனங்களுக்கு ஒரு நபருக்கு ஆறு இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் என்ற விகிதத்தில் அந்நாட்டில் அபராதம் விதிக்கப்படுகிறது. (ஓ-6)

# லண்டன் ஹோட்டலில் பயங்கர தீ விபத்து

(லண்டன்)

லண்டனில் உள்ள டபிமேக்கல் என்ற இடத்தில் அடுக்குமாடி ஹோட்டல் ஒன்று உள்ளது. இங்கு திடீர் தீவிபத்து ஏற்பட்டது. இதில் ஹோட்டல் கட்டிடம் முற்றிலும் நாசமானது. அதன் அருகில் உள்ள சில கட்டிடங்களிலும் தீப்பற்றிக் கொண்டது.

நூற்றுக்கும் மேற்பட்ட தீயணைப்பு படையினர் வந்து தீயை கட்டுப்படுத்தினார்கள். இதனால் அந்த பகுதி முழுவதும் ஒரே புகை மண்டலமாக இருந்தது. வர்த்தக நிறுவனங்கள் அனைத்தும் மூடப்பட்டன. (ஓ-6)

# இந்தியன் பிரிமியர் லீக்-3 நேற்று கோலாகலமாக ஆரம்பம்

(மும்பை)

மிகவும் எதிர்பார்க்கப்பட்ட இந்தியன் பிரிமியர் லீக் இருபது-20 கிரிக்கெட் தொடர் மும்பையில் கோலாகலமாக நேற்று ஆரம்பமாகியது. எட்டு அணிகள் இந்த தொடரில் கலந்து கொள்கின்றன.

மூன்றாவது ஐ.பி.எல். இருபது-20 கிரிக்கெட் தொடர் இந்தியாவில் நடக்கிறது இதன் ஆரம்ப விழா நவி மும்பையில் உள்ள டி.ஒய் பாட்டீல் மைதானத்தில் நேற்று மாலை 6.45 மணிக்கு ஆரம்பமாகியது.

முதலில் 8 அணிகளின் தலைவர்கள் சேர்ந்து நடுவர்கள் மற்றும் எதிரணி வீரர்களுக்கு உரிய மரியாதை அளிக்கப்படும் என உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

ஐ.நா.சபையின் சுற்றுச்சூழல் பாதுகாப்புத்திட்டத்தின் சிறப்புத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள சச்சின் டெண்டுல்கர் தலைமையில், சுற்றுச்சூழல் பாதுகாப்பை வலியுறுத்தியும், கிரிக்கெட் உணர்வுடன் நடந்து கொள்வோம் என்று வலியுறுத்தியும் உறுதிமொழி எடுத்துக்கொள்ளப்பட்டது.

பின்னர், பாலிவுட் நட்சத்திரம் தீபிகா படுகோனேவின் நடனம் உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

பிரிட்டனை சேர்ந்த முன்னணிப் பாடகர் அலிகேம்பல் தனது குழுவினருடன் சேர்ந்து ஆடிப்பாடினார். அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த பிஜோர்ன் அகேன் தனது டேன்சிங்குயின் பாடலைப்பாடி ரசிகர்களை மகிழ்வித்தார்.

ஐ.பி.எல். தொடர் மீண்டும் இந்தியாவில் நடப்பதை குறிக்கும் விதமாக 240 கலைஞர்கள் சேர்ந்து அசோக சக்கரத்தை போல அணி வகுத்தனர்.

பாலிவூட் கவர்ச்சி நாயகி தீபிகா படுகோனே மற்றும் 40 கலைஞர்கள் சேர்ந்து இந்திப் பாடல்களுக்கு ஏற்ப நடனமாடி ரசிகர்களை பரவசத்தில் ஆழ்த்தினர்.

பலத்த பாதுகாப்பு

பயங்கரவாதிகளின் மிரட்டலைத் தொடர்ந்து ஆரம்ப விழா மற்றும் முதல் போட்டி நடக்கும் டி.ஒய்.பாட்டீல் மைதானத்திற்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

2 ஆயிரம் பொலிஸார் தவிர, ஆயிரம் தனியார் பாதுகாப்பு வீரர்கள் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர்.

தண்ணீர் போத்தல், தீபெட்டி, கூர்மையான மற்றும் எலக்ரோனிக் பொருட்கள், பெரிய பை போன்றவற்றை மைதானத் திற்குள் எடுத்துச் செல்ல ரசிகர்களுக்கு தடை விதிக்கப்பட்டது.

# மத்யூஸ், ஷா ஜோடி அசத்தல்; கொல்கத்தா நைட் ரைடர்ஸ் வெற்றி

(மும்பை)

மத்யூஸ்-ஷா ஜோடி சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி 11 ஓட்டங்கள் வித்தியாசத்தில் டெக்கான் சார்ஜர்ஸ் அணியை வீழ்த்தியது.

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) அமைப்பின் மூன்றாவது இருபது-20 கிரிக்கெட் தொடர் நேற்று மும்பையில் ஆரம்பமானது.

இத் தொடரின் முதலாவது லீக் போட்டியில் கங்குலி தலைமையிலான கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியும் கில்கிறிஸ்ட் தலைமையிலான டெக்கான் சார்ஜர்ஸ் அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற டெக்கான் சார்ஜர்ஸ் அணித் தலைவர் கில்கிறிஸ்ட் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணிக்கு முதலாவது ஓவரிலேயே அதிர்ச்சியளித்தது.

ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் திவாரி, அணித் தலைவர் சௌரவ் கங்குலி ஆகியோர் பூச்சியத்துடன் சமிந்தவாஸின் பந்து வீச்சில் வெளியேற கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி ஓட்டமெதனையும் எடுக்காமல் 2 விக்கெட்டுக்களையிழந்தது.

தொடர்ந்து 2ஆவது விக்கெட்டுக்காக இணைந்த ஹோட்ஜ்-புஜாரா ஜோடி நிதானமாக ஆடிய போதும் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி 5.1 ஓவர்களில் 31 ஓட்டங்களை எடுத்தபோது இந்த ஜோடியும் ஆட்டமிழந்தது. இதில் ஹோட்ஜ் 13 ஓட்டங்களுடனும் புஜாரா 10 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

இந்நிலையில் ஐந்தாவது விக்கெட்டுக்காக இணைந்த ஷா, மத்யூஸ் ஜோடி சிறப்பான இணைப்பாட்டத்தை வழங்க கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி சரிவிலிருந்து மீண்டது.

இந்த ஜோடி பிரிக்கமுடியாத இணைப்பாட்டத்தின் மூலம் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 20 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 161 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அஞ்சலோ மத்யூஸ் 46 பந்துகளில் (5 பவுண்டரிகள், 4 சிக்ஸர்கள் அடங்கலாக) 65 ஓட்டங்களையும் ஓ வைஸ் ஷா 46 பந்துகளில் (3 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் அடங்கலாக) 58 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் குவித்தனர்.




பந்துவீச்சில் சமிந்த வாஸ் 2 விக்கெட்டுக்களையும் ஆர்.பி.சிங், ஜாஸ்கரன் சிங் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 162 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய டெக்கான் சார்ஜர்ஸ் அணிக்கு கில்கிறிஸ்-லக்ஸ்மன் ஜோடி சிறப்பான இணைப்பாட்டத்தை வழங்கியது.

இந்த ஜோடி முதலாவது விக்கெட்டுக்காக 5.5 ஓவர்களில் 61 ஓட்டங்களை எடுத்த போது வி.வி.எஸ்.லக்ஸ்மன் 14 பந்துகளில் (2 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 22 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து கிப்ஸ் களமிறங்கி நிதானமாகத் துடுப்பெடுத்தாட மறுமுனையில் கில்கிறிஸ்ட் 30 பந்துகளில் அரைச்சதத்தை கடந்து அசத்தினார்.

எனினும் அணித்தலைவர் அடம் கில்கிறிஸ்ட் 35 பந்துகளில் (3 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் அடங்கலாக) 54 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

டெக்கான் சார்ஜர்ஸ் அணி 11.1 ஓவர்களில் 99 ஓட்டங்களை எடுத்து 2 ஆவது விக்கெட்டையிழந்தது.

தொடர்ந்து களமிறங்கிய வீரர்கள் சோபிக்காத நிலையில் டெக்கான்சார்ஜர்ஸ் அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களையிழந்து 150 ஓட்டங்களைமாத்திரமெடுத்து 11 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் கிப்ஸ் 19, அனிடுட் சிங் 14, ரோகித் சர்மா 12 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச்சில் லாங்வெல்ட் 2 விக்கெட்டுக்களையும் இஷாந்த் சர்மா, சுக்லா, கார்த்திக், மத்யூஸ், ஹோட்ஜ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை சாய்த்தனர்.

இப்போட்டியில் கொல்கத்த நைட் ரைடர்ஸ் அணியின் வெற்றிக்கு திருப்பு முனையமைத்த மத்யூஸ் ஆட்டநாயகனானார். இவ் வெற்றியின் மூலம் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி இரண்டு புள்ளிகளைப் பெற்றது.


**குடித்தொகை அபிவிருத்தி முதுகலைமாணி**
**பிராந்தியத் திட்டமிடல் முதுகலைமாணி**
**பழைய மாணவர்களுடனான கலந்துரையாடல்**

பேராசிரியர் இரா.சிவசந்திரன் அவர்கள் தன்னிடம் மேற்படி எம்.ஏ. பயின்ற பழைய மாணவர்களுடன் கலந்துரையாட விரும்புகின்றார். மேற்படி மாணவர்களை அவரது இல்லத்திற்கு வருகை தரும்படி அன்புடன் அழைக்கின்றேன்.

இடம்:- இல.07, இரத்தினம் ஒழுங்கை, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (021 222 4398)
காலம்:- 14/03/2010 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.30 மணிமுதல் 10.30 மணிவரை.
அழைப்பு:- தி.மங்களேஸ்வரன் (M.A. பழைய மாணவர்)
(சி-4649)


# மகாசிவராத்திரி நிகழ்வுகள்

(சுன்னாகம்)

சுன்னாகம் மயிலணி திருக்குடவாயில் விசாலாட்சி அம்பாள் சமேத ஸ்ரீ விஸ்வநாத சுவாமி கோவில் மகா சிவராத்திரி இன்று சனிக்கிழமை மாலை 4 மணி முதல் இரவு 4 மணிவரை நடைபெறவுள்ளது. 4 யாமங்களும் மற்றும் விசேட அபிஷேகம் மற்றும் பூசைகள் என்பன இடம்பெறும் (ச-3)

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத சிதம்பர நடராஜர் ஆலய மகாசிவராத்திரி நிகழ்வில் இன்று சனிக்கிழமை இரவு 4 யாமங்களும் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறும். (ச-3)

(கோப்பாய்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் கோப்பாய் அச்செழு மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தில் மகா சிவராத்திரி விழா இன்று மாலை 6 மணிக்கு இந்து கலாசார அபிவிருத்தி உதவியாளர் திருமதி மகிந்தினி விஜயகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் சிவனுக்கு உகந்தது சிவராத்திரி என்னும் விடயம் பற்றி சைவப் புலவர் கந்த சத்தியதாசன் சிறப்பு சொற்பொழிவாற்றவுள்ளார். (ச-3)

# மனித உரிமை...

இலங்கையின் மொத்தச் சனத்தொகை 16 சதவீதமானதாகவே காணப்படும் வேளையில், இந்த கொலைகள் மற்றும் வன்முறைகள் ஏற்புடையதாக இல்லை. இந்த கொலை மற்றும் கடத்தல் வேலைகளை அரசாங்கத்துடன் இணைந்த துணை இராணுவம் மற்றும் கடத்தல்கள் காரணமற்ற கொலைகள் போன்ற சட்டவிரோத செயல்களை அரசாங்கத்துக்காக செய்துவந்தன.

இந்த நிலையில் அரசாங்கம் பாரிய கைது நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. அதன்படி அரசாங்கமானது அநாவசியமான அவசர கைதுகள், தடுத்து வைப்புகள், முறையற்ற தடுப்பு முகாம்கள், ஊடகவியலாளர்களுக்கும் சட்டத்தரணிகளுக்கும் எதிரான வன்முறைகள், சட்டத்திற்கு முரணான செயற்பாடுகள், ஊடகங்களை சுயலாப நோக்கில் பயன்படுத்தல் போன்ற அடிப்படையில் குற்றவாளியாக கருதப்படுகிறது.

இதேவேளை மனித உரிமைகள் கண்காணிப்பாளர்களின் தகவல் அடிப்படையில் ஏராளமான பொதுமக்கள், இராணுவம் மற்றும் துணை இராணுவக் குழுக்களால் தாக்கப்பட்டு கொல்லப்பட்டதுடன் அவர்களின் உரிமைகள் மீறப்பட்டு பல்வேறு துன்புறுத்தல்களுக்கும் உட்படுத்தப்பட்டுள்ளனர். இராணுவத்தினரும் பல சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் மீது நேரடியான அதிகாரங்களை பிரயோகித்துள்ளதுடன் அவர்களை அசௌகரியங்களுக்கு உட்படுத்தியுள்ளனர்.

கருத்துச் சுதந்திரம் பறிப்பு

கடந்தவருடம் மே மாதம் இராணுவத்தினர் விடுதலைப் புலிகளைத் தோற்கடித்து அதன்தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை கொன்றதாகக் கூறுகின்றனர். இந்தக் காலப்பகுதியில் அரசாங்கம் பல்வேறு கைது நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன் சுதந்திரமாக ஒன்று கூடல், பேச்சு சுதந்திரம், கருத்து வெளியிடும் சுதந்திரம், நடமாட்ட சுதந்திரம் என்பவற்றையும் பாதித்தது.

இதற்கிடையில் இறுதி நேரத்தில் பொதுமக்கள் விடுதலைப் புலிகள் அரசாங்கக்கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு செல்ல விடாமல் தடுத்ததுடன், சிறுவர்களையும் வயது வந்தவர்களையும் போராட்டத்தில் கலந்து கொள்ள வைத்தனர். அத்துடன் பொதுமக்களின் மத்தியில் தமது ஆயுதங்களை வைத்து தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இறுதியில் யுத்தம் முடிவுக்குவரும்தறுவாயில் மே மாதம் விடுதலைப் புலிகள் தெற்கு உள்ளிட்ட இலங்கையின் ஏனைய பிரதேசங்களில்குண்டுத் தாக்குதல்களை நடத்த தீர்மானித்தனர். இந்த தாக்குதல்கள் அரசியல்வாதிகள், சொத்துக்கள் பொதுமக்களை இலக்குவைத்ததாக அமைந்தன.

இந் நிலையில் அரசாங்கமும் அதன் துணை இராணுவ மற்றும் கோசக் குழுக்களும் மனித உரிமைகள் சாசனங்களின் சிலவற்றின் சரத்துக்களை மீறியுள்ளன. ஒருநபரின் தனிப்பட்ட நடமாட்ட சுதந்திரம் உள்ளிட்ட சுய இறைமையும் மீறப்பட்டுள்ளது.

கடத்தல்கள் அதிகரிப்பு

இதேவேளை கடத்தல் மற்றும் காணாமல் போகும் சம்பவங்கள் அதிகரித்த வண்ணமே உள்ளன. அவை எதனையும் மேற்கொள்ளும் அரசாங்க சார்பான குழுக்களுக்கு எதிரான நடவடிக்கைகள் எவையும் இதுவரையில் மேற்கொள்ளப்படவில்லை.

பயங்கரவாத தடைச்சட்டம்

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட அரசியல் கைதிகளுக்கான குற்றப்பத்திரிகை தாக்கல் உள்ளிட்ட எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-3.5.14)

நாவாந்துறைப் படிப்பகம்
நகர சபை, யாழ்ப்பாணம்



# விடுதலை நோக்கிய பாதையில்...

தந்திரோபாயங்கள், வியூகங்களை வகுத்துள்ளோம் எனவும் அவர் கூறினார்.

கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை நேற்று வெளியிட்டு வைத்து உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார். அவர் அங்கு மேலும் கூறியதாவது,

தமிழ் மக்கள் ஓர் தனித்துவமான தேசிய இனம் என்பதை நாங்கள் திட்டவட்டமாக வலியுறுத்தியுள்ளோம். தமிழ் மக்கள் இலங்கைத் தீவில் சிங்கள மக்களுடனும் ஏனையவர்களுடனும் பாரம்பரியமாக வாழ்ந்து வருகின்றார்கள்.

தாயகம் என்ற அடித்தளத்தைக் கொண்டு தொடர்ச்சியாக வடக்குக் கிழக்கு மாகாணங்கள் இலங்கை தமிழ் பேசும் மக்களின் வரலாற்றுப் பூர்வீகமான வாழ்விடமாகும் என்பதைத் திட்டவட்டமாக முன்வைத்துள்ளோம்.

தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள். சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டை நாங்கள் அப்படியே ஏற்று அதனுடைய தத்துவத்தை வெளிப்படுத்துவோம்.

2004 ஆம் ஆண்டு எங்களுடைய தரப்பால் வெளியிட்டப்பட்ட தேர்தல் அறிக்கையில் தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் வரை தமிழ் மக்களை அழுத்திக் கொண்டிருக்கும் அவசர மனிதாபிமானத் தேவைகள் பாரிய பொருளாதார அபிவிருத்தித் திட்டத்துக்கான உதவிகளை வழங்கித் தமிழ்த் தேசத்தின் பொருளாதாரம், வாழ்வாதாரம் மேம்பட சர்வதேச சமூகம் உதவ வேண்டும் என தெளிவுபடுத்தினோம்.

2009 ற்குப் பின்னர் எங்களுடைய நிலைமை பாரிய பேரவலத்திற்குத் தள்ளப்பட்டுள்ளோம். இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பின் ஊடாக அழிக்கப்பட்ட பிரதேசங்கள், மக்கள் வாழ்வாதாரங்களை புனர்நிர்மாணம் செய்வதற்கான இடைக்கால நிர்வாகம் அவசியம் என்பதை வலியுறுத்துவோம்.

இவையே நிரந்தர அரசியல் தீர்வு இழுபறிப்பட்டிருக்கும் காலத்தில் உடனடியாக எமது மக்கள் எதிர்நோக்கியிருக்கின்ற பிரச்சினைக்கு நாங்கள் தீர்வை முன்வைக்க வேண்டிய அவசியம் உள்ளது.

அதற்கான வழி வகைகளை காண வேண்டியுள்ளது. சர்வதேச சமூகத்திடமும் இந்தியாவிடமும் ஐரோப்பிய ஒன்றியத்திடமும் மற்றும் அமெரிக்க நாடுகளிடமும் எமது மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதை முன்மொழிந்துள்ளோம். அந்த அடிப்படையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு எதிர்காலத்தில் தொடர்ந்தும் செயற்படும்.

எதிர்வரும் காலங்களில் எமது உரிமைகள் மறுக்கப்பட்டால் மக்களைத் திரட்டியும் புலம்பெயர் மக்களை ஒன்று திரட்டியும் போராடுவோம் என மாவை. சேனாதிராஜா மேலும் தெரிவித்தார். (ச-7)

# குற்றச்சாட்டுக்களுக்காக கவலையில்லை-ஜனாதிபதி

(கொழும்பு)

மற்றவர்களின் குற்றச்சாட்டுக்கள் பற்றி நான் சிறிதும் கவலைப்படவில்லை. நான் ஒற்றையாட்சி பற்றி பேசிய போதெல்லாம் அது வெறும் கனவென்றார்கள். அதனால் என்ன கிடைக்கப் போகின்றது என சிலர் கேட்டார்கள்.

ஆனால் நான் செய்து காட்டினேன் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். ஜனாதிபதித் தேர்தலின் போது முன்வைக்கப்பட்ட மகிந்த சிந்தனையின் எதிர்கால நோக்கு கொள்கைப் பிரகடனம் தொடர்பான விசேட சம்மேளனம் நேற்று சுகதாச உள்ளக அரங்கில் இடம்பெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார். எந்தவொரு விடயத்தையும் செய்யத் தொடங்கும் முன்னர் அதைச் செய்வதனால் நாட்டுக்கு நன்மை இருக்கின்றதா என்பதை நான் சிந்தித்துத்தான் செயலாற்றுகின்றேன்.

மகிந்த சிந்தனை பலராரும் விமர்சிக்கப்பட்டது. உரம் 350 ரூபாய்க்கு வழங்க முடியாது என்றார்கள். நான் அதனை நடைமுறைக்குக் கொண்டு வந்தேன் என அவர் மேலும் கூறினார். (ச-5)

# இந்தியாவின் புரண தலையீட்டுடன்...

அறிமுகப்படுத்த இலங்கை இணக்கம் வெளியிட்டுள்ளது.

பிராந்திய ரீதியாக இந்தியாவின் அரசியல் மற்றும் பொருளாதார தந்திர தேவைகளுக்கு பொருந்தும் வகையில் இலங்கை அரசாங்கத்தைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் நோக்கில் இந்தப் புதிய அரசியல் சாசனம் அமுல்படுத்தப்படவுள்ளதாக லங்கா இரிதா பத்திரிகை தெரிவித்துள்ளது.

இலங்கையின் உயர் மட்ட இராஜதந்திரிகளின் விஜயங்களின்போது ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இணக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இதனை முழுமைப்படுத்த இந்திய அதிகாரிகளினால் முடிந்துள்ளது.

இந்திய வெளிவிவகார செயலாளர் நிருபமா ராவின் இலங்கை விஜயத்தின் போது இதற்கான அடிப்படை இணக்கத்தை ஏற்படுத்தியதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி அரசாங்கம் போர் நடைபெற்ற காலப் பகுதியில் பகிரங்கமாக ஏற்றுக் கொண்ட 13-வது அரசியல் சாசனத் திருத்தத்திற்கு அப்பால் சென்று அதிகாரப் பரவலாக்கத்துடனான யோசனைகள் அடங்கிய அரசியல் சாசனத் திருத்தத்தின் ஆவணத்தை இந்திய வெளிவிவகாரச் செயலாளர், இலங்கை அரசாங்கத்திடம் கையளித்துள்ளார் என இராஜதந்திரத் தரப்புக்கள் தெரிவிக்கின்றன.

1987 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட இலங்கை-இந்திய உடன்படிக்கை அமுலில் உள்ளதால் இந்தியாவினால் இவ்வாறான தலையீடுகளை மேற்கொள்ள முடியும். இந்தியாவின் இந்த அரசியல் சாசனத் திருத்தத்தை அமுல்படுத்த வழி ஏற்படுத்தும் நோக்கிலேயே எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஆளும் கட்சி மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றவுடன் அரசியல் சாசனத்தில் மாற்றம் ஏற்படுத்தப் போவதாக அமைச்சர்கள் நிமால் சிறிபால டி சில்வா, ஜி.எல். பீரிஸ் மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோர் பல சந்தர்ப்பங்களில் கூறியுள்ளனர்.

கடந்த 28 ஆம் திகதி லக்பிம பத்திரிகைக்குச் செவ்வி ஒன்றை வழங்கியிருந்த அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, அமைச்சர்கள் ஜி.எல்.பீரிஸ், தினேஷ் குணவர்த்தன ஆகியோருடன் இணைந்து புதிய அரசியல் சாசனம் ஒன்றைத் தயாரித்துள்ளதாகத் தெரிவித்திருந்தார்.

இந்தியாவின் இணக்கத்துடன் கொண்டு வரப்படவுள்ள அதிகாரப் பரவலாக்கத்துடன் கூடிய அரசியல் சாசனத்தை அறிமுகப்படுத்தும் சூழலை ஏற்படுத்துவதே அவரது கருத்தின் உண்மையான நோக்கம் என அரசியல் தரப்பில் பேசப்படுகின்றது.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் தினத்தன்றும் அதன் பின்னர் ஜெனரல் சரத் பொன்சேகா கைது செய்யப்பட்ட தினம் ஆகிய அரசியல் ரீதியான தீர்க்கமான சந்தர்ப்பங்களில் ஜனாதிபதி இந்தியாவுக்குச் சென்றிருந்தார்.

இந்த விஜயத்தின் போது இந்திய வெளிவிவகாரச் செயலாளரின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு ஜனாதிபதி சென்றமையானது இலங்கையில் பெரும் அரசியல் ரீதியான சர்ச்சைகளை ஏற்படுத்தியிருந்தது.

இவ்வாறு ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட நெருக்கம் இலங்கையில் புதிய அரசியல் சாசனத்தை அமுல்படுத்துவதில் அதிகாரம் மிக்க இந்திய வெளிவிவகாரச் செயலாளர் நிரூபமா ராவுக்குப் பெரும் சாதகமாக அமைந்திருக்கலாம் என இராஜதந்திரத் தரப்புக்களில் பேசப்படுகின்றது என அதில் கூறப்பட்டுள்ளது. (ச-5)

# ஜீ-15 நாடு...

ஆர்ஜன்டீனா, பிரேஸில், சிலி, எகிப்து, இந்தியா, இந்தோனேஷியா, ஈரான், ஜமெய்கா, கென்யா, மலேசியா, மெக்ஸிகோ, நைஜீரியா, செனகல், இலங்கை, வெனிசுலா மற்றும் சிம்பாவே ஆகிய 17 நாடுகள் இந்த ஜீ-15 அமைப்பில் அங்கத்துவம் வகிக்கின்றன.

இதன் தற்போதைய தலைமைத்துவத்தை ஈரான் வகிக்கின்றது. அடுத்த தலைமைத்துவத்துக்கு மிகப் பொருத்தமானவர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே என அந் நாடுகள் தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# அரசியல்...

சந்திரன், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் (ஈ.பி.டி.பி.) பொதுச் செயலாளர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, தமிழ்த் தேசியத்துக்கான மக்கள் முன்னணியின் முதன்மை வேட்பாளர் சி.வரதராஜன்,

தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் கே.சிவாஜிலிங்கம், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, ஈ.பி.ஆர்.எல்.எவ். (பத்மநாபா) பொதுச் செயலாளர் சிறிதரன், ஐக்கிய தேசியக் கட்சியின் முதன்மை வேட்பாளர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், மக்கள் நீதிக் கட்சியின் க.செவ்வேள் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். (ச)

# சிங்களத்...

செயற்பாடுகளை ஜே.வி.பி. நிபந்தனையின்றி எதிர்க்கின்றது.

கடந்த காலங்களில் நாட்டின் உள் விவகாரங்களில் மேற்கொள்ளப்படும் தலையீடுகளை ஜே.வி.பியே முதலில் எதிர்த்தது. இது தொடர்பில் தேவையான அனுபவங்கள் உள்ளன.

ஆனால் இலங்கை உலகத்தோடு வாழுகின்ற நாடு என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். இதனால் ஐக்கிய நாடுகள் சபைக்கும் இலங்கைக்குமிடையில் ஒரு விதபிணைப்பு காணப்படுகின்றது.

எனினும் அரசாங்கம் கடந்த காலங்களில் இரட்டை நிலைப்பாட்டைக் கடைப்பிடித்து வந்தது. சிங்களத்தில் ஒரு கொள்கையும் வெளிநாட்டவர்களுக்கு வேறொரு கொள்கைகளையும் அரசாங்கம் கடைப்பிடித்து வந்தது என்றார். (ச-5)

**புவியியல், சமூகவியல் கற்ற பல்கலைக்கழக பழைய மாணவர்களுடனான கலந்துரையாடல்**

பேராசிரியர் இரா.சிவசந்திரன் அவர்கள் தன்னிடம் மேற்படி பாடங்களைக் கற்ற பழைய மாணவர்களுடன் கலந்துரையாட விரும்புகின்றார். மேற்படி மாணவர்களை அவரது இல்லத்திற்கு வருகை தரும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

இடம்:- இல.07, இரத்தினம் ஒழுங்கை, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (021 222 4398)

காலம்:- 14/03/2010 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4.30 மணிமுதல் 06.00 மணிவரை.

அழைப்பு:- எஸ்.ஞானேஸ்வரன் (புவியியல் பழைய மாணவர்)

(சி-4649)

**புறநிலைப் படிப்புகள் அலகுக் கற்கை நெறி பழைய மாணவர்களுடனான கலந்துரையாடல்**

பேராசிரியர் இரா.சிவசந்திரன் அவர்கள் புறநிலைப் படிப்புகள் அலகு இணைப்பாளராகப் பணியாற்றிய காலத்தில் மேற்படி அலகில் பல்வேறுபட்ட கற்கை நெறிகளைக் கற்ற பழைய மாணவர்களுடன் கலந்துரையாட விரும்புகின்றார். மேற்படி மாணவர்களை அவரது இல்லத்திற்கு வருகை தரும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

இடம்:- இல.07, இரத்தினம் ஒழுங்கை, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (021 222 4398)

காலம்:- 14/03/2010 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.30 மணிமுதல் 4.30 மணிவரை.

அழைப்பு:- எஸ்.எஸ்.ரவிராஜ் (இதழியல் கற்கை நெறி மாணவர்)

(சி-4649)



Want to Qualify in IT?

3 Pass A' Levels? → Register for BIT

No Pass A' Levels? → Foundation in Information Technology

Bachelor of Information Technology University of Colombo

BIT மாணவர்களுக்கு மேலதிக கட்டணம் இன்றி BCS, Computer Engineer(USA), ICDL, Sun Java தகைமைகள்

கொழும்பு பல்கலைக்கழகத்திடமிருந்து சிறப்பு விருது பெற்ற நிறுவனம்

FIT, Sem.1, Sem. 2 உங்கள் தெரிவிற்கேற்ப விரிவுரை நேரங்கள்

MCS 324, Palaly Road, Parameswara Junction
Web site : Http://www.mcsitcampus.org

Call 772395895

**நியூ சிற்றி ரேடேர்ஸ் இடமாற்றம்**

சகலவிதமான வீட்டு வயரிங்(மெயின் ,ஏத் 1044)வயர்களையும் மெயின் சுவிச் , ரிப் சுவிச் , கோல்டர் ,2U,3U,40W, 60W, 100W, 2', 4' கரண்டி பல்புகளையும், மேசை, கூரை, ஸ்ராண்ட் , சுவர் , பொக் மின்விசிறிகளையும், ரைஸ், காஸ், பிறசர், மண்ணெண்ணெய் குக்கர்களையும், அயன் , கொட் பிளேட் , கீற்றர் , கிறைண்டர் , மின் கேத்தல் , சப்ளைசர் , சார்ச்சர்லைற் மற்றும் மின்சார உதிரிப்பாகங்களையும் மலிவுவிலையில் பெற்றுக்கொள்ளவும் உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ளவும் இன்றே நாடுங்கள்.

நியூ சிற்றி ரேடேர்ஸ்

319A, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். T.P.: 021 222 3226

(சி-4642)



**பாராளுமன்ற பொதுத்தேர்தல் 2010**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு**

சாபத்தை தந்தவர்களின் தந்திரங்களை முறியடிப்போம்!

எங்களுக்குரிய கனவுகள் நிரம்பிய வாழ்வுக்காய் கைகொடுப்போம்!!

இலங்கைத் தமிழரசுக் கட்சி

சிவஞானம் சிறீதரன் கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலய (கனிஸ்ரா) அதிபர்




(சி-4578)

இப்பத்திரிகை வலம்புரி அச்சகத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.03. 2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.